கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

முரசு: 4 | 21 – 27 மே 1998 | முழக்கம்: 175

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126

# நாம் மரபுப் படையணியைக் கட்டியெழுப்பி விட்டோம்



## தேசியத் தலைவர்

'ஜெயசிக்குறுய் நடவடிக்கையை எதிர்பார்த்து நாம் தயார் நிலையில் இருந்தோம்; மரபு வழிப் போருக்கு முகங் கொடுக்கும் வகையில் எமது இராணுவக் கட்டமைப்பை சீர் செய்து ஒழுங்கமைத்திருந்தோம்; முல்லைத்தீவில் பெற்ற மா பெரும் வெற்றியை அடுத்து எமது படைக்கல சக்தி பலம் பெற்றிருந்தது; இவ் ஆயுத பலத்தை அடிப்படையாக வைத்து பீரங்கிப் படையணி, விமான எதிர்ப்புப் படையணி, தாங்கி எதிர்ப்புப் படையணி என்ற ரீதியில் புதிய தாக்குதல் படைப் பிரிவுகளைக் கட்டியெழுப்பினோம்' என தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை

(☞ 2ம் பக்கம்)

# மீண்டும் மாங்குளம் நோக்கி 'ஜெயசிக்குறுய்'
# முருங்கன் முகாம் அருகே புலிகள் தாக்குதல்

(18.05.98)

இன்று மாங்குளம் நகரை கைப்பற்றும் நோக்கில் சிறீலங்காப் படைகள் மற்றுமொரு முயற்சியை தொடங்கியுள்ளனர். இவர்கள் மீது விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்கள் மூலம் பதிலடித் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் எறிகணைகள் சிறீலங்கா நிலைகள் மீது வீழ்ந்து வெடித்துள்ளது. எனினும் இராணுவத்தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் அறியப்படவில்லை. இத் தாக்குதல்களை வவுனியா இராணுவத் தலைமைப்பீடம் உறுதிப்படுத்தியுள்ளது. எனினும் விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ அறிவிப்புக்கள் எதுவும் இது வரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை மன்னார் முருங்கன் இராணுவ முகாமின் முன்னரங்க காவல்நிலைகளுக்கு அருகாமையில்வைத்து இராணுவ ரோந்து அணி ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி உள்

(☞ 2ம் பக்கம்)

## சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக்கொலை
## சங்கிலியன் படை உரிமை கோருகிறது

(18.05.98)

சிறீலங்கா அரசு, இராணுவம் ஆகியவற்றின் கண்காணிப்பில் நடாத்தப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவரான யாழ்.மாநகர சபை முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் நேற்றுக்காலை யாழ்.நகரிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு தாமே பொறுப்பு என 'சங்கிலியன் படை உரிமை

(☞ 2ம் பக்கம்)

## லண்டனில்
## சிங்களவர்கள் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

கடந்த ஞாயிறன்று இங்கிலாந்தில் சிங்களவர்களால் புலிகளைத் தடைசெய்யக் கோரும் ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

லண்டன்வாழ் சுமார் 1000 சிங்களவர்கள் கலந்துகொண்ட இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் விடுதலைப் புலிகளை இங்கிலாந்து அரசு தடை செய்ய

(☞ 2ம் பக்கம்)

## செட்டிக்குளம்
## பாரிய இராணுவ தொடரணி சிதறடிப்பு
## இரு அதிகாரிகள் - 18 சிப்பாய்கள் பலி

மன்னாரிலிருந்து அனுராதபுரம் நோக்கிச் சென்ற சிறீலங்கா இராணுவத்தின் பாரிய தொடரணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய சுற்றி வளைப்பு தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 20 படையினர் அவ்விடத்திலேயே பலியாகியுள்ளனர். மேலும் 54 பேர் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இவ் வெற்றிகரமான தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளமை இராணுவத்தினரை மிகவும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

கடந்த 14-ம் திகதி காலையில் இந்த தொடரணி மன்னாரிலிருந்து அனுராதபுரம் நோக்கி புறப்பட்டுச் செல்ல ஆரம்பித்தது. துருப்புக்களைக் காவிச் சென்ற பத்து பேருந்து வண்டிகளும் கவச வாகனங்கள் பாது

(☞ 2ம் பக்கம்)

## மேஜர் ஜெனரல்
## லரி விஜெரத்னா பலி

சிறீலங்கா இராணுவத்தின் 524 ஆம் படையணி தளபதியும், வடமராட்சி இராணுவ நிர்வாக இணைப்பதிகாரியுமான பிரிகேடியர் லரி விஜேரத்தினா கடந்த 13 ஆம் திகதி மாலை பருத்தித்துறையில் நடாத்தப்பட்ட தற்கொடை தாக்குதல் ஒன்றில் பலியாகியுள்ளார். யாழ் குடா இராணுவ இயந்திரத்தையே இச் சம்பவம் மிகவும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கை, கொக்கட்டிச்சோலை

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்
28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

ஈழமுரசு

Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804


(1ம் பக்கத் தொடர்ச்சி)

### மீண்டும் மாங்குள...

ளது. இன்று அதிகாலை 6.30 மணியளவில் இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இரண்டு இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டதாகவும், சில ஆயுதங்களும், தொலைத்தொடர்பு சாதனங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### பாரிய இராணுவ...

காப்பளித்தபடி சென்றன.

செட்டிக்குளம் பகுதியூடாக இத் தொடர் சென்றுகொண்டிருந்தபோது தொடரணியை எதிர்பார்த்து நிலையெடுத்துக் காத்திருந்த விடுதலைப்புலிகள் வாகனத் தொடரின் முன்னால் சென்ற கவச வாகனத்தின் மீது ஆர்.பி.ஜி தாக்குதலை தொடுத்தனர். தாக்குதலுக்கு இலக்கான கவச வாகனம் தீப்பிடித்து எரியத் தொடங்கிய வேளை மற்றைய வாகனங்களை சுற்றிவளைத்த புலிகள் அவற்றின் மீது தாக்குதலைத் தொடுத்தனர். இராணுவத்தினர் பயணம் செய்த மூன்று பேருந்துகள் இத் தாக்குதலில் அழிக்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட படையினரில் ஒரு கப்டனும், ஒரு லெப்டினனும் அடங்குகிறார்கள். விடுதலைப் புலிகள் தமது தாக்குதலை முடித்துக்கொண்டு திரும்பிய பின்னர் பெரும் சிரமத்திற்கும், சில மணிநேர இடைவெளியின் பின்னருமே காயமடைந்த துருப்புகள் அவ்விடத்தை விட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். காயமடைந்த சிப்பாய்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் இராணுவ வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் தரப்பில் எவ்விதமான இழப்புகளும் ஏற்படவில்லை.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### லண்டனில்...

வேண்டும் எனக் கோரியும், விடுதலைப் புலிகளுக்கு இங்கிலாந்து வாழ் மக்கள் வழங்கும் நிதி மற்றும் தார்மீக ஆதரவுகளை தடை செய்ய வேண்டும் எனக் கோரியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

கண்டிய நடனம் உட்பட பல்வேறு சிங்கள பண்பாட்டு விடயங்களைத் தாங்கி இடம் பெற்ற இவ் ஊர்வலத்தில் தமிழர்களுக்கு எதிரான கோஷங்கள் சரமாரியாக எழுப்பப்பட்டன.

விரைவில் பிரித்தானியா அரசு அறிமுகப்படுத்தவிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினுள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளையும் உள்ளடக்கக் கோரும் சிறீலங்கா அரசின் பிரச்சார நடவடிக்கையின் ஒரு அம்சமாகவே இவ் ஊர்வலம் இடம்பெற்றது எனக் கருதப்படுகின்றது.

## சுன்னாகம்-சங்கத்தானை- மானிப்பாயில்

# புலிகள் தாக்குதல்

கடந்த வாரம் சுன்னாகம் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் நடாத்திய பொறிவெடித் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

மேலும் சங்கத்தானை பகுதியில் அமைந்திருந்த இராணுவக் காப்பரண் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் ஒரு படையினன் கொல்லப்பட்டான்.

மானிப்பாய் உடுவில் வீதியில் வைத்து பகல் வேளையில் நடாத்தப்பட்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் மேலும் ஒரு படையினன் கொல்லப்பட்டுள்ளான் என புலிகளின் குரல் அறிவித்துள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### நாம் மரபுப்படை...

யின் ஓராண்டு நினைவையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அச் செய்தியில் ஜெயசிக்குறுய் சமரில் பங்கேற்ற போராளிகளின் மனவலிமையையும், தளபதிகளின் தளராத உறுதியையும் பாராட்டியுள்ள தலைவர், சிறீலங்காவின் இராணுவ முதுகெலும்பை எமது பீரங்கிப் படைப்பிரிவு முறித்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார். வேவுப் புலிகளினதும், தாங்கி எதிர்ப்பு விசேட அணியினதும், விமான எதிர்ப்பு அணியினதும் போர்க்கள சாதனைகளை சுட்டிக்காட்டிய அவர், விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினையும், ஆவணக்காப்பு, புகைப்படப் பிரிவுகளையும் பாராட்டியுள்ளார்.

வன்னிச்சமரில் கடந்த ஒரு வருட காலமாக பொதுமக்கள் ஆற்றும் பணியினை வியந்துள்ள தலைவர், கரும்புலிகளின் அர்ப்பணிப்புக்களையும் நினைவூட்டினார்.

கண்டி பிரபத்துவ வர்க்கமான ரத்வத்தை குடும்பத்தினர் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை தொடர்ந்தும் ஜெயசிக்குறுய் சமரில் பலிகொடுக்க முயல்வார்கள் எனக் கருத்துத் தெரிவித்த தேசியத் தலைவர் எமது தாயக மண்ணை எமது உயிரினும் மேலாக நேசிக்கின்றோம் எம் மண்ணைப் பாதுகாப்பது எமது இனத்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது எனக் குறிப்பிட்டு ஆக்கிரமிப்பாளரை விரட்டியடிக்கும் வரை சமர் ஓயப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### சரோஜினி...

கோரி' அதற்கான விளக்க அறிக்கையினையும் யாழ். உதயன் பத்திரிகைக்கு அனுப்பியுள்ளது.

காலை 10.30 மணியளவில் யாழ். நகர சபையின் உறுப்பினரொருவருடன் சரோஜினி யோகேஸ்வரன் உரையாடிக் கொண்டிருந்த வேளை வீட்டிற்குள் பிரவேசித்த ஆயுதபாணிகளால் சரோஜினி மீது கைத்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மார்புப் பகுதியில் ஐந்து தடவைகள் சுடப்பட்ட நிலையில் இவர் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டவேளையில் உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தையடுத்து சிறிலங்கா இராணுவம் யாழ் நகரின் பல பகுதிகளையும் சுற்றி வளைத்து தேடுதலை நடாத்தியது. சரோஜினி சுடப்படும் வேளையில் கூட இருந்த இன்னொரு மாநகரசபை உறுப்பினரான பரமசிவம் என்பவருக்கு காலில் துப்பாக்கிக்காயம் ஏற்பட்டுள்ளது.

சரோஜினி சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்து உதயன் பத்திரிகைக்கு அறிக்கையளித்த சங்கிலியன்படை, சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் முதல்வர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும்படி தமது அமைப்பு பல தடவை கோரிய போதும் அவர் அவ்வாறு நடந்து கொள்ளாமையால் இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதெனவும், ஏனைய உறுப்பினர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை எனவும் தெரிவித்துள்ளது.

இந்த விளக்க அறிக்கையில் சங்கிலியன் படையின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் கே. சுரேஷ்குமார் என்பவரின் ஒப்பம் இடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. கொல்லப்பட்ட சரோஜினியின் கணவரான தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யோகேஸ்வரன் அவர்களும் 89-ம் ஆண்டில் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### மேஜர் ஜெனரல்...

படுகொலை சம்பவம் ஆகியவற்றில் தமிழ் மக்களை மிகவும் இன்னலடையவும், சூரியக்கதிருக்குப் பின்னர் வடமராட்சிப் பகுதியில் இளைஞர், யுவதிகள் காணாமற் போனமைக்கும் பெரும் தொடர்பு கொண்டவர் பிரிகேடியர் லரி விஜேரத்தினா ஆவார்.

சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சினால் இவருக்கு கொத்தலாவை இராணுவக் கல்லூரியின் பதில் பொறுப்பாளராக பதவி உயர்வு கிடைத்ததைத் தொடர்ந்து வடமராட்சி நிர்வாக பொறுப்புகள் கேணல் கருணாரத்தினாவிடம் ஒப்படைக்கப்பட்டன.

தனது வடபகுதிக்கான பணியினை முடித்த இவர் அதற்கான பிரியாவிடை வைபவத்தில் கலந்துகொள்வதற்காக கடந்த 13-ம் திகதி காலைதான் யாழ் குடாவிற்கு விமான மூலம் சென்றிருந்தார்.

பிரியாவிடை வைபவத்தில் கலந்துகொண்ட பின்னர் பிற்பகல் 3.20 மணியளவில் தனது வாகனத்தில் படையணி தலைமையகத்திற்கு லரி விஜேரத்தினா திரும்பிக்கொண்டிருந்த போது தலைமையகத்திற்கு வெகு சமீபமாக போராளி ஒருவர் திடீரென இவரது வாகனத்தை இலக்கு வைத்து ஓடிவந்ததுடன் தற்கொடைத் தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தியுள்ளார்.

இச் சம்பவத்தில பிரிகேடியருக்கு துணையாக வந்த இரு இராணுவ அதிகாரிகளும் படுகாயமடைந்துள்ளனர். பிரிகேடியரது உடல் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்குள்ள வைத்திய அதிகாரிகள் பிரிகேடியர் மரணமடைந்ததை உத்தியோகபூர்வமாக அறிவித்ததை தொடர்ந்து அவரது சடலம் விமான மூலமாக கொழும்பிற்கு அனுப்பப்பட்டது.

சூரியக் கதிர் நடவடிக்கைக்குப் பின்னர் யாழ். குடாவில் கொல்லப்பட்ட அதியுயர் இராணுவ அதிகாரியான லரி விஜேரத்தினா (இறந்த பின் மேஜர் ஜெனரலாகத் தரமுயர்த்தப்பட்டார்) இரண்டாவது ஆவார். இதற்கு முன்னர் பிரிகேடியர் ஆனந்த கடகொட, 96-ம் ஆண்டு யூலை 4-ம் திகதி நடாத்தப்பட்ட தற்கொடைத் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்டவராவார்.


**வீடு வாடகைக்கு**

இரண்டு தனி அறைகளும் சகல வசதிகளும் கொண்ட F2 வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.

வாடகை: 2850Frs.

சிறிய குடும்பத்திற்கு ஏற்றது

தொடர்புகளுக்கு: 01 49 31 06 52

Pub



புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

**ERRANCES TRAVELS**

**Tel: 01 42 09 70 00**

Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc, 75010 Paris.

M°: La Chapelle *ou* Louis Blanc

(ADV)

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900Frs. |
| Delhi | - | 3,900Frs. |
| Bangkok | - | 3,400Frs. |
| Colombo | - | 3,800Frs. |
| Singapour | - | 3,400Frs. |
| Madras | - | 3,600Frs. |
| Londres | - | 790Frs. |
| New york | - | 2,300Frs. |
| Montreal | - | 2,800Frs. |
| Oslo | - | 2,010Frs. |
| Toronto | - | 2,800Frs. |
| Nepal | - | 4,820Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Ll: 075 95 01 37


# நோர்வேயின் ஹம்மெர்வெஸ்ற் மாநகர முதல்வர் தமிழர்களுக்கு வாழ்த்து செய்தி

நோர்வே ஹம்மெர்வெஸ்ற் மாநகர முதல்வர் தமது சுதந்திர தினமான கடந்த பதினேழாம் திகதி தமிழ் மக்களிற்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

'ஹம்மெர்வெஸ்ற் மாநகர முதல்வர் என்ற முறையில், உலகத்திலேயே வட துருவத்தில் அமைந்துள்ள நகரம் எமது சுதந்திர நாளான 17 மே கொண்டாட்டத்தின்போது நான் மகிழ்வுடன் எமது புதிய நாட்டவரான தமிழ் மக்கள் அனைவர்க்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நாள் மிகவும் திடமாக எமது மனதில் ஆழப்பதிந்துவிட்ட நாள். அத்துடன் குழந்தைகளுடன் நாமும் குதுகலிக்கும் நாளும் இதுவே. அதனால்தான் பெரியவர்களான நாங்கள் கட்டாயம் குழந்தைகள் போன்ற மனத்தோடு ஒருவரை ஒருவர் சந்திக்க வேண்டும். திறந்த மனத்துடன் அவர் எந்த தேசிய இனத்தவராக இருந்தாலும் இன, நிற வேறுபாடின்றி பழக வேண்டும். அத்துடன் நாங்கள் நோர்வே நாட்டவர்களை புரிந்துணர்வுடன் உணர்ந்து கொள்கின்றோம். அதாவது எமது புதிய நாட்டவரான தமிழர்கள், தாய் நாட்டை விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாக இங்குவந்து குடியேறியுள்ள போதும் தமது குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்களை எண்ணி தொடர்ந்து துக்கம் கொண்டுள்ளனர். அவர்களின் நிலை எப்படி உள்ளதோ என ஏங்கிய வண்ணம் உள்ளனர்.

உலகத்திலேயே அரசியலிலும், வணிகத்திலும் நாங்கள் நல்லதொரு நிலையில் இன்று இருக்கிறோம். ஆனால் இப்படியான ஒரு சூழ்நிலை முன்னர் எமக்கு இருக்கவில்லை. இதை நோர்வே மக்களாகிய நாம் என்றும் நினைவில் வைத்திருப்போம். அன்று போரினால் நாம் பாதிக்கப்பட்டு அடைக்கலம் தேடிய



மாநகர முதல்வர்
Tormod Bartholdsen

பொழுது நேசக்கரம் நீட்டிய அந்த நாடுகளை நாம் மறக்கவில்லை. அதே நிலைமையில் இன்று தமிழர்கள் அடைக்கலம் தேடி வந்துள்ளனர். அவர்களுக்கு நாம் இன்று நேசக்கரங்களை நீட்டுகின்றோம். எமக்கு இவைகள் இதயத்தில் ஒரு திருப்தியை ஏற்படுத்துகின்றன. அன்றைய எமது நிலையில் இன்று யார் வந்தாலும் அவர்களுக்கு நேசக்கரம் கொடுப்பதற்கு நாங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இவ் வார்த்தைகளோடு உங்கள் அனைவருக்கும் எமது சுதந்திரதினமான மே 17-ல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்'.

இவ்வாறு அவர்தன் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டிருந்த அதேவேளை கடந்த மாவீரர் நாளின்போது முதல்வர் விடுத்த அறிக்கையில் இரு இனங்கள் கௌரவமாக வாழக்கூடிய ஒரு தீர்வே அங்கு காணப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் நோர்வேயில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுடன் அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்தி ஈழத்தின் நிலவரம், நோர்வேயின் பங்கு, நோர்வே தமிழரின் நிலைப்பாடு பற்றி கேட்டறிந்துகொள்பவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# வலி. கிழக்கில் மீண்டும் பாரிய தேடுதல்

யாழ். வலிகாமம் கிழக்குப் பகுதி கிராமங்களில் மீண்டும் ஒரு பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையினை சிறீலங்கா படையினர் கடந்த வாரம் மேற்கொண்டிருந்தனர்.

ஒருவார காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது முற்றுகை தேடுதல் இதுவாகும். வட்டுக்கோட்டை மூளாய், சுழிபுரம், தொல்புரம், ஆகிய கிராமங்களை அதிகாலை வேளையில் சுற்றிவளைத்த நூற்றுக்கணக்கான 'படையினர் வீடு வீடாகச் சென்று தூக்கத்தில் சூழ்ந்திருந்த மக்களை எழுப்பி திறந்தவெளிப் பகுதிக்குச் செல்லும்படி உத்தரவிட்டனர்.

காலைக் கடன்களை கழிக்கக் கூட இம் மக்களுக்கு அவகாசம் வழங்கப்படவில்லை. பின்னர் வீடு வீடாகத் தேடுதல் நடாத்திய படையினர் வீடுகளிற்குள் இருந்த தளபாடங்களை புரட்டியும் வீசி எறிந்துவிட்டும் சென்றுள்ளனர்.

திறந்தவெளிப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட மக்கள் மீது கடுமையான விசாரணைகளை மேற்கொண்ட படைத் தரப்பு அவர்களில் சிலரை கைது செய்து கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

# இராணுவ அகராதியில் தனித்தன்மை வாய்ந்தவர் தலைவர்

## - தளபதி கருணா

இராணுவ வரலாற்று அகராதியே வியக்கும் வண்ணம் தனது இராணுவ செயற்திட்டங்களை, நுணுக்கங்களை பயன்படுத்தி போர்க்களத்தில் எதிரிக்கு மரணஅடி கொடுப்பவர் எமது தலைவர். இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கருணா தெரிவித்துள்ளார்.

மல்லாவியில் நடைபெற்ற 'வெற்றியை எமதாக்குவோம்' நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மக்களுக்கு தளபதி கருணா உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'தலைவரின் போர் மதி நுட்பத்தின் முன்னாள் ஆட்பலமும், ஆயுதபலமும் கூடிய எதிரி இன்று புறமுதுகுகாட்டி ஓடிக்கொண்டிருக்கின்றான். தலைவரின் போர் தந்திரப்படி எப்போது தாக்குதல் நடாத்தவேண்டுமோ அப்போது நடாத்தி, எப்போது விலக வேண்டுமோ அப்போது விலகி வெற்றியை தேடுவதற்கு வழி அமைக்கின்றார். நாம் விலகும்வேளை எதிரி அதனை நமது பலவீனமாக கொள்ளுகின்றான்.

ஆனால் அதுதான் எமது பலம் என்பதை காலமே அவனுக்கு உணர்த்தி வருகின்றது. நேரடியாக எதிரியுடன் சில வேளை மோதாமையால் எமக்கு ஏற்படவிருந்த அழிவுகளில் இருந்து காத்துக்கொண்டமையும் தலைவரின் இராணுவ நுணுக்கங்களில் ஒன்றாகும்.' இவ்வாறு தளபதி கருணா மேலும் தெரிவித்துள்ளார்.

# அரிசி ஆலையை மூட படை உத்தரவு

மட்டக்களப்பு கிரான் பகுதியில் இயங்கிவரும் அரிசி ஆலை ஒன்றினை மூடிவிடும்படி சிறீலங்கா இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

பெரும்பாலும் விதவைகளும், ஊனமுற்றோரும் பணிபுரிந்து வந்த இவ் ஆலையினை மூடிவிடும்படி படையினர் இட்ட உத்தரவானது இவர்களை மிகவும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

இவ் ஆலை விடுதலைப் புலிகளுக்கு சொந்தமானது எனத் தாம் கருதுவதாலேயே இவ் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். இவ் ஆலை இராணுவ முகாமிற்கு அருகில் இயங்கி வருவதனால் ஆலை வளாகத்தையும் தமது பாவனைக்கு எடுக்கவே இவ் உத்தரவு வழங்கப்பட்டிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடவுளின் கொடையே பிரபாகரன்

## - பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் -

'தமிழ் மக்களின் விடுதலைக்கென கடவுளால் கொடையாக கொடுக்கப்பட்டவரே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன். எனவே அவருக்கு நான் பகிரங்கமாக நன்றியறிதலைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.'



இவ்வாறு வண. பிதாவான பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையின் ஒருவருடப் பூர்த்தியை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில நடைபெற்ற இக் கூட்டத்திற்கு பெருமளவு மக்கள் வருகை தந்திருந்தனர்.

# வடமராட்சி கிழக்கு மக்கள் வெளியே வரத் தடை

பிரிகேடியர் லரி விஜேரத்தினா மீது நடாத்தப்பட்ட தற்கொடைத் தாக்குதலையடுத்து வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் அப் பகுதியிலிருந்து வெளியே வர இராணுவம் கட்டுப்பாடுகளையும், பகுதித்தடைகளையும் விதித்துள்ளது.

வடமராட்சி கிழக்கில் வசிக்கும் 15 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட மக்கள் ஏனைய பகுதிகளுக்குப் பிரவேசிக்க தற்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. வல்லிபுரப் பகுதியிலுள்ள இராணுவ காவலரணில் இத்தடை உத்தரவு கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

இராணுவத் தரப்பின் இத் தடை உத்தரவு காரணமாக இப் பகுதி மக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கி வருவதுடன், குறிப்பாக தொழிலாளர் தமது வேலைகளுக்கு செல்லமுடியாத சூழ்நிலையும் எழுந்துள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து மேலும் கரும்புலிகள் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்குள் பிரவேசிக்க முடியாதவாறே இத்தடை உத்தரவு நடைமுறைப்படுத்தப் படுவதாக இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

# காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய புதிய ஆணைக் குழு

காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய மீண்டும் மூவர் அடங்கிய குழு ஒன்று சிறீலங்கா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு உட்பட சிறீலங்காவின் பகுதிகள் எங்கும் இதுவரை காணாமல் போனவர்களை கண்டறிவதற்காகவே இக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பாக இதுவரை மூன்று ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. இது நாலாவது ஆணைக்குழு ஆகும்.

1988-ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய நியமித்திருந்த மூன்று ஆணைக் குழுக்களும் விசாரணை செய்து 16642 பேர் காணாமல் போயுள்ளதாக அறிக்கை சமர்ப்பித்திருந்தனர். இதில் 1560 பேரே வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்து காணாமல் போயிருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை ஐ.நாடுகளின் மனித உரிமைகள் செயற்குழு பல நாடுகளில் காணாமல் போனோர் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. இக்குழு சிறீலங்காவிலும் தனது விசாரணைகளை மேற்கொள்ள வரப்போவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. இக்குழு சிறீலங்கா வருமானால், காணாமல் போனவர்கள் தொடர்பாக உடந்தையாக இருந்தவர்கள் எல்லோரும் அக் குழுவின் 18-வது அறிக்கையின் படி, சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் தொடர்பாக மிகுந்த அக்கறை எடுத்து வருவதாக உலகிற்கு காட்டுவதற்காகவே பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இப்படியான குழுக்களை அடிக்கடி நியமித்து வருவதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# மீண்டும் 'எலிவேட்டை'?

சிறீலங்கா இராணுவத்தில் இருந்து தப்பியோடி படைகளுக்கு வழங்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக்காலம் முடிவடைந்த பின்பும், படையில் இணைந்து கொள்ளாத இராணுவத்தினரை கைதுசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவ தரப்பை ஆதாரம்காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

1990-ம் ஆண்டு விடுதலைப் புலிகளிற்கும், சிறீலங்கா படையினருக்கும் யுத்தம் தொடங்கிய பின்னரே பல ஆயிரக்கணக்கான படையினர் கள முனைகளில் இருந்து தப்பியோடியிருந்தனர். இவர்களை மீண்டும் படையில் இணைத்துக்கொள்ள பல்வேறு சந்தர்ப்பங்களில் பொதுமன்னிப்பு வழங்குவதாக அறிவித்திருந்தது. அப் பொது மன்னிப்பு காலங்களிலும் படையினர் திரும்பி வராததால் 'எலிவேட்டை' என்ற கைது நடவடிக்கையை தொடங்கியது, அதுவும் படைத்தரப்பு எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை.

இதுவரை ஏழு தடவைகள் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளன. தற்போது வழங்கிய ஐந்துநாள் பொதுமன்னிப்பு காலத்திலும் படையினர் மீண்டும் இணைந்து கொள்ளாததால் ஜெயசிக்குறுாய் படை நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது. இதனாலேயே மீண்டும் படையிலிருந்து தப்பியோடியவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் சிறீலங்கா பொலிசார் இறங்கியுள்ளனர்.

# மட்டு. விமானத்தளம் மீது எறிகணை வீச்சு

மட்டக்களப்பு விமானத்தளம், இராணுவ தலைமையகம் என்பவற்றை இலக்கு வைத்து விடுதலைப்புலிகள் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக சிறீலங்கா இராணுவதரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சுமார் பத்துக்கும் மேற்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததாகவும் இதில் நான்கு இராணுவ தலைமையகத்தின் மீது வீழ்ந்தன. இதனால் படையினர் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய் அன்று நடாத்தப்பட்ட இத் தாக்குதலின் பின் படையினர் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி பலத்த எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டுள்ளனர். இதனால் மக்கள் பெரும் பதற்றம் அடைந்து காணப்பட்டனர்.

# 'வெற்றியை எமதாக்குவோம்' ஜேர்மனியில் எழுச்சிவிழா

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று (17.05.1998) ஜேர்மனிய நாட்டின் டோர்ட்முன்ட் நகர Enscheder Str 13ம் இலக்கத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஜேர்மனிப் பணியகக் கலைபண்பாட்டுக் கழகம் 'வெற்றியை எமதாக்குவோம்' எழுச்சி விழாவைக் கொண்டாடியது. அமைதி வணக்கத்தை அடுத்து, அமைப்பின் ஜேர்மனிப் பணியக இணைப்பாளர் ராஜன் அவர்கள் விளக்கேற்றி வைக்க கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. வெற்றியை எமதாக்கும் உன்னத பணியில் உயிர் நீத்த மாவீரர் நினைவில் பீடம் அமைக்கப்பட்டு, சுடரேற்றி, உயிர் நீத்த மாவீரரை மக்கள் வணங்கினர். திடீரென குறைந்த காலத்துக்குள் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவாக இருந்த போதும், மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் ஐநூறையும் தாண்டியிருந்தது.

வானதி தேசிங்குராஜா, அற்புதராணி கந்தசாமி, பவித்திரா ஆகியோரது நடன வடிவமைப்பில் விடுதலை நடனங்கள் வழங்கப்பட்டன. தா. சிவநாதன். சோமஸ்காந்தன். ஞானகுமார் ஆகியோர் கவிதை படித்து 'வெற்றியை எமதாக்குவோம்' என்ற கருத்தை வலியுறுத்தினர். 'வெற்றி நிச்சயம்' என்ற நாட்டிய நாடகம் சாவித்திரி இம்மானுவேலின் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது. 'ஜெயசிக்குறுாய்' நடவடிக்கையின் போது புலிகள் நடாத்திய வீராவேசப் போரின் ஒளியிளைப் பேழை அகண்ட திரையில் ஒளிபரப்பப்பட்டது. எமது மண்ணின் மைந்தர்களின் துணிச்சலான தியாகங்களைத் திரையிற் பார்த்த மக்கள் உணர்ச்சி மேலீட்டால் ஆரவாரித்தனர். 'ஜெயசுக்குறுாயின்' ஓராண்டு தோல்வியை முன்னிட்டுத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை, எழுத்துருவில் அனைவர்க்கும் வழங்கப்பட்டது. நிகிலா என்ற சிறுமி தனது சின்னக் கைகளை அலங்கரித்த ஐந்து தங்க வளையல்களைக் கழற்றி வழங்கியது அனைவரது உள்ளத்தையும் நெகிழச் செய்தது.

'வெற்றியை எமதாக்குவோம்' என்ற இந்தத் தலைப்பில் உள்ள 'எமதாக்குவோம்' என்பது, எதிர்காலச் சொற்பதம் அல்ல. மகிழ்ச்சி வரும்போதெல்லாம் சிரிப்போம் என்னும்போது, 'சிரிப்போம்' என்பது காலங்களைக் கடந்த எப்போதுக்குமான சொல்லாகின்றது. இதுபோல் 'வெற்றியை எமதாக்குவோம்' என்பதன் பொருள், இனித்தான் வெற்றியை எமதாக்குவோம் என்பதல்ல. அது, நேற்றைக்கும் - இன்றைக்கும் - நாளைக்குமான புலிகளின் பண்பைக் குறிக்கும் பொதுச் சொல்லாகும். எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மனி பணியகக் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் குறிப்பிட்டார்.

விடுதலை உணர்வை வெடித்து நின்ற நிகழ்ச்சியாக, வெற்றியை எமதாக்கும் பொறுப்போடு மக்கள் எழுச்சிகொண்ட நிகழ்ச்சியாக, நாட்டில் உயிரைக் கொடுத்த மண்ணை மீட்கும் வீரர்களைப் பூசிக்கும் நிகழ்ச்சியாக இது நடந்து நிறைவேறியது.

# பாலஸ்தீனியர்களின் நினைவுகூரல் நிகழ்ச்சியில் இஸ்ரேல் படைகள் தாக்குதல்

## 9 பேர் பலி

(ஜெருசலேம் - மே 15)

Nakbah கொடூரம் என்று பாலஸ்தீனியர்களால் அழைக்கப்படும் இவர்களை நாடற்றவர்களாக்கிய 50-வது ஆண்டு நினைவுகூரல் நிகழ்சிகள் பாலஸ்தீனப் பிரதேசத்தில் நடைபெற்றபோது இஸ்ரேல் படைகள் தாக்கியதில் 8 வயது சிறுவன் உட்பட 9 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

1948-ம் ஆண்டு யூதர்கள் இஸ்ரேலை உருவாக்குவதற்காக பாலஸ்தீனிய - அரேபியர்களைத் தாக்கினார்கள். இதில் அவர்களுடைய 450 கிராமங்கள் அழிக்கப்பட்டன. அங்கிருந்த 7 இலட்சம் மக்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வன்முறை மூலம் வெளியேற்றப்பட்டனர்.

இந்தத் துயர நிகழ்வு கடந்த வாரம்- பாலஸ்தீனியர்கள் வசிக்கும். தாஸா, மேற்குக்கரை மற்றும் ஜெருசலேம் பகுதிகளில் நினைவு கூரப்பட்டது.

இந்த நினைவு கூரலின் போது மோதல்களைத் தவிர்க்கும்படி பாலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத்தும் ஏனைய பாலஸ்தீனத் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்தபோதிலும், இரு பகுதியினருக்குமிடையில் தொடர்ந்து கடுமையான மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

# ஜெயசிக்குறாயிற்கு தேசியத் திட்டத்தை உருவாக்க அரசு முயற்சி

சிறீலங்கா இராணுவத்திற்கு 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கையின்போது ஏற்பட்ட தோல்வியினையும், இராணுவ நடவடிக்கையின் ஒரு வருட பூர்த்தியினையும் விடுதலைப் புலிகள் பெரு விழாவாக வன்னியில் கொண்டாடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் ஜெயசிக்குறுாய் இராணுவ நடவடிக்கையை என்ன செய்வது, அதனை எவ்வாறு முன்னெடுப்பது என்ற தீவிர ஆலோசனையில் சிறீலங்கா அரசு தற்போது ஈடுபட்டு வருகிறது. ஜெயசிக்குறுாய் ஒரு இராணுவ நடவடிக்கை மட்டுமல்ல, சிங்கள மக்களின் கௌரவத்திற்குக் கிடைத்த ஒரு சவால் என்பதால் அதனை எவ்வாறாயினும் முன்னெடுத்துச் செல்லவேண்டுமெனத் தெரிவித்துள்ள ஆலோசனையாளர்கள் 'ஜெயசிக்குறுாய்' நடவடிக்கைக்காக இராணுவ தரப்பை முழுமையாக நம்புவதைவிட அதற்காக தேசிய அளவில் ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

ஜெயசிக்குறுாய் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் தற்போதைய இராணுவத் தளபதி ரொகான் தலுவத்தையின் அண்மைய 'போக்கு' குறித்து கேள்வி எழுப்பியுள்ள இந்த ஆலோசனையாளர்கள் அரசின் 'தீர்வுத்திட்டப் பொதி' சரியல்ல என தளபதி கூறியுள்ளமையை சுட்டிக்காட்டியதுடன், தளபதியின் பொறுப்பற்ற தன்மைக்கு அது ஒரு எடுத்துக்காட்டெனவும் கூறியுள்ளார்.

தற்போதைய அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ள ஜெயசிக்குறுாய்க்கான தேசிய திட்டத்தில் என்னென்ன விடயங்கள் அடங்குகின்றன என்பது இதுவரை வெளிவிடப்படவில்லை.

# தமிழர் துயர் துடைக்க நெதர்லாந்தில் தமிழர் சங்கங்களின் சம்மேளனம்

'நெதர்லாந்தில்' அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்த தமிழர் பலருடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு அண்மையில் சிலர் சிறீலங்காவிற்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்கள். இதற்கு இந்நாட்டு அரசாங்கம் சிறீலங்காவில் தமிழர்களுக்கு பிரச்சினை இல்லை என்ற காரணத்தைக் காட்டுகிறது. ஆனால் இது உண்மைக்குப் புறம்பானது. இந்நிலையில் எமது நாட்டில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள் அதனால் அவர்கள் படும் துன்பங்கள் என்பவற்றை நெதர்லாந்து அரசாங்கத்திற்கும் இங்குள்ள அரச அமைப்புகளுக்கும் மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கும் தெரியவைக்க வேண்டிய ஒரு காலத்தின் கட்டாயம் தற்போது வந்துள்ளது. இதனை தனி மனிதன் ஒருவனாலோ அல்லது ஒரு சிறு அமைப்பினாலோ நிறைவேற்ற முடியாது. எனவே நாடளாவிய ரீதியில் ஏற்கெனவெ இங்கு இயங்கிக்கொண்டிருக்கும் அமைப்புகளையும் இணைத்து ஏகோபித்து குரல்கொடுக்க வல்ல தமிழர்களின் அமைப்பொன்று அவசியமாகக் கருதப்பட்டது. இதனை இந்நாட்டிலுள்ள தமிழர் நலன்களில் அக்கறையுள்ள புத்தி ஜீவிகள் மற்றும் சட்டத்தரணிகளும் விரும்புகிறார்கள். அத்தோடு ஆதரவு கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். எனவே இப்படியான ஒரு சூழ்நிலையையும், சந்தர்ப்பத்தையும் கருத்தில் கொண்டு இன்று நெதர்லாந்தில் தமிழர் சங்கங்களின் சம்மேளனம் என்ற இவ்வமைப்பு உருவாக்கப்படுகிறது.

அண்மையில் நெதர்லாந்திலுள்ள 'உத்திரக' என்ற இடத்தில் இடம்பெற்ற இவ் அமைப்பின் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அதன் அமைப்பாளர் திரு. சி. இந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நெதர்லாந்தில் பல்வேறு இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் பலர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். இங்கு உடனடியாக செயற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், மற்றும் அரசாங்கங்கள் தொடர்பான தகவல்களை பல்வேறு செய்தி ஊடகங்களுடாகப் பெற்று அவற்றை புத்தக வடிவில் அச்சிட்டு நெதர்லாந்து மக்களைச் சென்றடைய வைத்தல்.

இவற்றை இந்நாட்டு அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் நேரடியாக எடுத்துக் கூறும் வகையில் சிறீலங்காவில் அரசியல் விவகாரங்களில், தமிழர் பிரச்சினைகளில் ஈடுபாடும், அக்கறையும் கொண்ட பிரமுகர்களை நெதர்லாந்து அழைத்து கூட்டங்களை நடாத்துதல்

இங்குள்ள அகதி முகாம்களுடன் தொடர்பு கொண்டு அங்குள்ள தமிழ் அகதிகளின் அவசரப் பிரச்சினைகளைப் பற்றி அறிந்து அதற்கு தீர்வுகளை ஆவன செய்தல் ஆகியன.

இவ்வமைப்பின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: சி.இந்திரன், உபதலைவர்: தாமு சபாரெத்தினம், செயலாளர்: பிரான்சிஸ் ரவி, உபசெயலாளர்: எஸ். மகேந்திரன், பொருளாளர்: சி, விஜேந்திரன் மற்றும் உறுப்பினர்களாக புஸ்பா பொன்னுத்துரை. பா. சிவக்கொழுந்து. எஸ். புலேந்திரன். கே. சாம்பசிவம் ஆகியோர் தெரிவாகினர்.

இங்குள்ள தமிழ் மக்கள் யாருக்காவது அவசர பிரச்சினைகள் ஏதாவது ஏற்படும் பட்சத்தில் அவர்கள் இவ்வமைப்புடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

தலைமை அலுவலகம் கீழ் வரும் விலாசத்தில் அமைந்துள்ளது

Steling Molen -43
1730 Te Heerhugowaard
Nederland
T.P: 072-5742074

## தமிழீழச் செய்தித் தொகுப்பு

# ‘வெற்றியை எமதாக்குவோம்’ போர்க்களங்களில் மக்கள் வெள்ளம்

## தளபதி கருணாவிடம் தேசியக்கொடி கையளிப்பு

வன்னி மண்ணே முன்பொரு போதும் கண்டிராத வரலாற்று நிகழ்வுகள் கடந்தவாரம் நடைபெற்றுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்துள்ளன.

‘வெற்றியை எமதாக்குவோம்’ கருப்பொருளுடன் கடந்தவாரம் வன்னியில் கொண்டாடப்பட்ட எழுச்சி நிகழ்வுகளில் ‘ஜெயசிக்குறுய்’ இராணுவ படைகளை எதிர்த்து வீரத்துடன் போராடிவரும் விடுதலைப் புலிகளின் போர்க்களப் பகுதிகளுக்கு (ஒட்டு சுட்டானிலிருந்து நாயாறு பிரதேசம் வரை) மக்கள் அலையலையாகச் சென்று தமது நன்றியறிதலையும் உற்சாகத்தினையும் வழங்கியது மிகவும் எழுச்சியாகவும், நெகிழ்ச்சியாகவும் இருந்ததாக குறிப்பிடப்படுகிறது.

இந்த நிகழ்வு நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது தமிழீழ மக்களின் செய்திகளை போராளிகளுக்கு காவிச் சென்ற மரதனோட்ட வீராங்கனை தளபதி கருணாவிடம் அதனை மரபு ரீதியாக ஒப்படைத்துள்ளனர்.

பனங்காமம், நாட்டான் கண்டல், பாண்டியன்குளம், மல்லாவி, துணுக்காய் கொக்காவில், ஆலங்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து தேசியக் கொடிகளை ஏந்தியவாறு புறப்பட்ட மரதனோட்ட வீரர்களும், வீராங்கனைகளும், மாங்குளம் மேற்குப் பகுதிக்குச் சென்று தளபதி கருணாவிடம் தேசியக் கொடிகளை கையளித்ததுடன், தமிழீழ மக்களின் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டனர்.

இந்த மரதனோட்ட வீரர்கள் சென்ற வழியின் இரு மருங்கிலும் பெருமளவான பொதுமக்கள் பால், வயது வேறுபாடின்றி திரண்டு நின்று அவர்களை உற்சாகப்படுத்தினர்.

போர்க்களங்களுக்குச் சென்ற மக்களும் வெறுங்கைகளுடன் செல்லவில்லை. தாயகத்தைக் காக்கும் தமது செல்வங்களுக்கென அவர்கள் உணவு, பான வகைகளையும் காவிச்சென்று தமது கரங்களினால் அவற்றை ஊட்டி மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்வுகளைப் பார்க்கும்போது கடுமையான துயரத்தில் மூழ்கியுள்ள வன்னி மக்களா இவர்கள்? என தம்மால் நம்ப முடியாதிருப்பதாக தொண்டர் நிறுவனப் பிரதிநிதியொருவர் மகிழ்வு ததும்ப செய்தியாளரொருவரிடம் தெரிவித்துள்ளார்.

‘வெற்றியை எமதாக்குவோம்’ நிகழ்வுகளில் புதுக்குடியிருப்பு, மல்லாவி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இரு பொதுக் கூட்டங்களும் முக்கியமானவையாக இருந்தன.

இப் பொதுக் கூட்டங்கள் மாவீரர் தியாகச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டு சிறப்பாக நடந்துள்ளன.

புதுக்குடியிருப்பில் நடந்த கூட்டத்தில் தமிழீழ-நீதிச் சேவை பொறுப்பாளர் திரு. பரா, சோதியா படையணியின் தளபதி செல்வி துர்க்கா, அருட்பணியாளர் பிரான்சிஸ், மகளிர் வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாளர் மலைமகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மல்லாவியில் நடைபெற்ற கூட்டத்தில் மூத்த தளபதி கருணா கலந்துகொண்டு உரையாற்றினார்.

இதேவேளை ‘வெற்றியை எமதாக்குவோம்’ நிகழ்வில் ஊர்வலங்கள், ஓட்டப் பந்தயங்கள், மாட்டுவண்டி சவாரிகள், அலங்கார ஊர்தி பவனிகள், தெருக் கூத்துகள், நடனங்கள் எழுச்சி பாடல் நிகழ்வுகள், நிழற்படக் கண்காட்சி ஆகியனவும் நடாத்தப்பட்டுள்ளன.

## பதிவுக்கான செய்திக் குறிப்புகள்

★ ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 7-ம் திகதி நடைபெறுமென ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

★ சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு திருமலையில் சமாதான ஊர்வலமும், சிகிச்சை முகாம்களும் இடம் பெற்றுள்ளன.

★ அட்டாளைச் சேனைப் பகுதியிலுள்ள 20 பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை மிக முக்கிய பிரச்சினையாக இருப்பதாக கல்விச் சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

★ கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள தாதியர் டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதேவேளை இப் பல்கலைக் கழகத்தினால் ‘சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்’ என்ற நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

★ வடக்கு—கிழக்கு மாகாணத்திலுள்ள பல்வேறு திணைக்களங்களிலும் 16 ஆயிரத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளிலேயே பெருமளவான வெற்றிடங்கள் உள்ளன.

★ வடபகுதியில் கடந்த சில வருடங்களில் ஆறாயிரம் சிறுவர்கள் மரணித்துள்ளனரென சிறுவர் பராமரிப்பு அதிகாரிகள் தெரிவித்ததுடன், யாழ்மாவட்டத்தில் சிறார்களின் நிலை மிகவும் வருந்தத்தக்கதாக உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

★ யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கிணற்றுநீர் மாசடைந்து வருவதாக ஜேர்மன் நாட்டு நீர்வள நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மலசல கழிவு கூடங்களின் கழிவு நீர் கிணற்று நீருடன் கலப்பதாலேயே இந்நிலை மோசமாகி வருவதை சுட்டிக்காட்டியுள்ள நிபுணர்கள் இது தடுக்கப்படாவிட்டால் யாழ்ப்பாண கிணறுகளிலுள்ள நீரை குடிப்பதற்குப் பாவிக்க முடியாது போய்விடும் எனவும் எச்சரித்துள்ளனர்.

★ செம்பியன் பற்று தெற்கில் சிறீலங்கா படையினரால் கைது செய்யப்பட்ட களுசுசனை கல்யாண குமார் (23) என்பவர் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ மானிப்பாய் நவாலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தயாபரன் (19) என்பவர் சுவிட்சர்லாந்து நாட்டில் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளாரென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பெற்றோருக்கு அறிவித்துள்ளது. சுவிஸ் பொலிஸ் நிலையமொன்றில் பணிபுரிந்த இவ் வாலிபரின் சடலம் பற்றை ஒன்றுக்குள் கிடந்ததாகவும் செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

★ பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய பகுதிகளிலுள்ள இரண்டு மின் மாற்றிகள் இனந்தெரியாதோரால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

★ சிறீலங்கா பொலிசாரினால் ஏறாவூர் வாசியான முஸ்லீம் முதியவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

★ யாழ். குடாவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட 98 பேருந்துகளில் 50 பேருந்துகள் மீண்டும் கொழும்பிற்கு கொண்டு செல்லப்படுமென சிறீலங்கா போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

★ திருமலை தள வைத்தியசாலைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நீர் வழங்கப்படுவதால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## வெடி விபத்தில் போராளிகள் வீரச்சாவு

வன்னியில் கடந்த 10ம் திகதி நடைபெற்ற இரு வெடி விபத்துச் சம்பவங்களின்போது ஏழு போராளிகள் வீரமரணமடைந்ததாக ‘புலிகளின் குரல்’ வானொலி தெரிவித்துள்ளது.

ஒரு வெடி விபத்தில் ஆறு போராளிகளும், மற்றைய விபத்தில் ஒரு போராளியும் வீர மரணத்தை தழுவியுள்ளதாக குறிப்பிட்ட வானொலி அவர்களின் பெயர் விபரங்களையும் தெரிவித்துள்ளது.

லெப்டினன்ட் நிலாமகள் (பழனிவேல் சித்திராதேவி யாழ்ப்பாணம்), கப்டன் உருத்திரா (சின்னத்தம்பி தேவகலா யாழ்ப்பாணம்), கப்டன் கயற்கொடி (தர்மதேவன் விஜயா யாழ்ப்பாணம்); அருள் வாணி (தர்மராஜா ஜெயதர்சினி திருமலை), தமிழ்மங்கை (சிவகுரு ராஜகுரு- கண்டி), சுஜிதா (ஆரோக்கியநாதர் யுனேத்திரா யாழ்ப்பாணம்), இளமாறன் (பூவேந்தன் மணிவேல் திருமலை) ஆகிய போராளிகளே மேற்படி விபத்தில வீரச்சாவடைந்தவர்களாவார்கள்.

## கோவிற்குளத்தில் கிளேமோர் தாக்குதல் 6 புளொட் உறுப்பினர்கள் பலி

வவுனியா கோவிற்குளம் பகுதியில் கடந்த 12-ம் திகதி நண்பகலளவில் நடாத்தப்பட்ட கிளேமோர் ரக கண்ணி வெடிச் சம்பவமொன்றில் ஆறு புளொட் உறுப்பினர்கள் பலியாகியுள்ளனர். மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர். பலியாகியவர்களில் புளொட்டின் வவுனியா இராணுவ பொறுப்பாளர் தாசும் (சின்னதாஸ்) அடங்குகிறார். மாணிக்கதாசன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

மேற்படி புளொட் உறுப்பினர்கள் நண்பகல் 1.15 மணியளவில் கோவிற்குளம் பகுதியூடாக வாகனத்தொடரில் சென்று கொண்டிருந்தவேளை துப்பாக்கிப் பிரயோகச் சத்தங்கள் சிறீலங்கா இராணுவ காவலரண்களிலிருந்து கேட்ட ஒரு சில வினாடிகளில் கிளேமோர் கண்ணி வெடித்துள்ளது. கண்ணி வெடி வெடிப்பதற்கு ஒரு வினாடிக்கு முன்னர் தான் மாணிக்கதாசனுடைய வாகனம் அவ்விடத்தை கடந்துள்ளது.

ஆனாலும் அவர் பிரயாணம் செய்த வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளது. கண்ணி வெடிப்பில் சிக்கி சிதறடிக்கப்பட்ட இரண்டாவது வாகனத்தில் பயணம் செய்தவர்களே உயிரிழந்தவர்களாவார்கள். அத்துடன் வீதியால் சென்று கொண்டிருந்த இரு பெண்களும் கொல்லப்பட்டுள்ளனர். காயமடைந்த புளொட் உறுப்பினர்கள் அநுராதபுர வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

புளொட் குழுவினரும், ரெலோ குழுவினரும் அண்மைக் காலங்களில் வவுனியாவில் அடிக்கடி மோதிக்கொள்வது குறிப்பிடத்தக்கது.

## கொக்கட்டிச்சோலை-அம்பலாந்துறை விழாக்கோலம்

‘வெற்றியை எமதாக்குவோம்’ நிகழ்வுகளில் சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாடற்ற தென் தமிழீழ பகுதிகள் கடந்த வாரம் மூழ்கியிருந்தன.

கொக்கட்டிச்சோலை, அம்பலாந்துறை, இலுப்பையடிச் சேனை ஆகிய பகுதிகள் இந்த நிகழ்வுகளுக்காக விழாக்கோலம் பூண்டிருந்ததுடன் பல கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன.

‘வெற்றி நிச்சயம்’ சிறீலங்கா இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பல தாக்குதல்களின் ஒளியிழைப் பேழை காட்சிகளும் மக்களுக்கு காண்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சம் காரணமாக மட்டக்களப்பு பகுதியில் சிறீலங்கா இராணுவ பாதுகாப்பும் மிகத் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

## சந்திரிகா-ரத்வத்தை-கதிர்காமர் மக்களால் எரிப்பு

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரின் முழு உருவ கொடும்பாவிகள் இலுப்பையடிச்சேனையை சேர்ந்த மக்களால் கடந்த 11-ம் திகதி மாலை எரியூட்டப்பட்டுள்ளன. இந்தக் கொடும்பாவிகள் எரிப்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்கென அயற் கிராமங்களிலிருந்தும் பெருமளவு மக்கள் இலுப்பையடிச்சேனை பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

### லரி விஜேரத்தினாவின் மீதான தாக்குதல்

# கொக்கட்டிச்சோலை படுகொலைகளுக்கு பருத்தித்துறையில் தீர்க்கப்பட்ட கணக்கு

கொழும்பிலிருந்து
க. அற்புதராஜா

'இரண்டாம் ஆண்டில் கால் எடுத்து வைக்கும் ஜெயசிக்குறுாய் இராணுவ நடவடிக்கை, மீண்டும் தொடர்ந்து செல்லவிருக்கின்றது. மேலும் கூடுதல் இரத்த ஆறு ஓடப்போகின்றது. சிறீலங்கா இராணுவம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கப்போகின்றது.'

கடந்த 10-ம் திகதியுடன் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துள்ள 'வெற்றி நிச்சயம்' என்ற ஜெயசிக்குறுாய் இராணுவ நடவடிக்கை குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை வெளியாகிய மறுநாள், குடாநாட்டை இராணுவம் கைப்பற்றியதில் இருந்து மூன்று வருடங்களுக்கு மேலாக வடமராட்சிப் பகுதி சிவில் நிர்வாக இணைப்பதிகாரியாகக் கடமையாற்றிய பிரிகேடியர் லரி விஜேரத்தின தற்கொலை குண்டு தரித்த போராளி ஒருவரால் கொல்லப்பட்டுள்ளார்.

செட்டிக்குளத்தில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் இராணுவ வாகனம் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியதில் 14 பேர் பலியாகி, 51 பேர் காயமடைந்துள்ளனர்.

பிரிகேடியர் லரி விஜேரத்தின, கொழும்புக் கொத்தலாவல இராணுவ கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தனது புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கென தன்னைத் தயார்படுத்திக் கொண்டு பருத்தித்துறையில் பிரஜைகள் குழுவும், வர்த்தக சங்கத்தினரும் இணைந்து வழங்கிய பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டுவிட்டு ஹாட்லி கல்லூரியில் நடைபெற இருந்த



விருந்து ஒன்றில் கலந்துகொள்வதற்காக திரும்பிக்கொண்டிருந்தபோதே இத் தாக்குதல் நடைபெற்றது.

பிரிகேடியர் வழமையாக துறைமுக வீதிவழியாகவே வருவது வழக்கம். ஆனால் சம்பவம் நடைபெற்ற தினத்தில் அவர் மீன் சந்தை வழியாகவே தனது பயணத்தைத் தொடர்ந்துள்ளார்.

வழமையாக இவருக்குப் பாதுகாப்பு அமைப்பதற்கென நான்கு அல்லது ஐந்து மோட்டார் சைக்கிள் கொமாண்டோப் பிரிவினர் செல்வது வழக்கம். ஆனால் சம்பவ தினம் இரு மோட்டார் சைக்கிள்களிலேயே கொமாண்டோப் படையினர் கடமையில் ஈடுபட்டனர்.

தற்கொடைப்போராளி பிரிகேடியர் வரவுக்காக துறைமுக பாதையில் காத்திருந்து பின்னர் ஓடைக்கரை வீதியூடாக மீன் சந்தை வீதிக்கு வந்து பிரிகேடியரின் வாகனத்துடன் மோதி வெடிக்கவைத்துள்ளதாக அங்கிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்கொடைப் போராளி சிதறிக்காணப்பட்டாராயினும் அவரது தலை எவ்வித சேதமுமின்றி முழுமையாக அவ்விடத்திலேயே கிடந்துள்ளது. சிதறிய உடற்பாகங்களை பொலித்தீன் பை ஒன்றில் போட்ட படையினர் அப்பையை மந்திகை வைத்திய சாலையின் சவச்சாலையில் வைத்து பூட்டிய பின்னர் சாவியை தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

பிரிகேடியர் லரி விஜேரத்னாவின் படுகொலை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. மூன்று வருடங்களுக்கு மேலாக கடமையில் இருந்த லரி விஜேரத்தினாவை அவர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் பொழுது ஏன் விடுதலைப் புலிகள் குறிவைத்தனர்.

இம் மூன்று வருடங்களும் அவர் புலிகளின் இலக்கில் சிக்கவில்லையா? போன்ற விடயங்களுக்கு பதில்காண வேண்டும்.

பிரிகேடியர் லரி விஜேரத்தினா வடமராட்சி மக்களின் ஆதரவைப் பெற்றவர் என்று ஒரு சாரார் கதையைக் கட்டிவிட்டாலும் லரி விஜேரத்தினாவின் காலத்தில் வடமராட்சிப் பொதுமக்கள் காணாமல்போவதும் கைதுகள் தொடர்ந்துகொண்டுதான் இருந்தன. அத்துடன் இவர் கிழக்கில் பணியாற்றிய காலத்தில் கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் நடைபெற்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்த நிலை புலிகள் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்துள்ளனர் என்று எண்ணத் தோன்றுகின்றது.

லரி விஜேரத்தினாவின் நடமாட்டம், அது மக்கள் மனதில் நிலைத்திருக்கும் நல்லெண்ண அறுவடைக்குள் ஒரு தாக்குதலை நடாத்தி படைத்தரப்பில் பிரச்சாரத்திற்கு வழிசமைத்து கொடுக்கவிரும்பாமையே தாக்குதலுக்கான இலக்கு தள்ளிப் போட்டதற்கான காரணமாக அமையலாம்.

மறு புறம் லரி இடமாற்றம் பெற்றுச் செல்லும் தறுவாயில் வைக்கப்பட்ட குறிமூலம் வெளிவரும் உணர்வலைகள் வெறும் அனுதாப அலையாக மாத்திரமே இருக்கும்.

அத்துடன் கொக்கட்டிச் சோலை படுகொலைகளுக்கு பதிலளித்ததாகவும், வடமராட்சியில் புதிதாகப் பதிவியேற்றுள்ள பிரிகேடியர் சரத் கருணாரத்தினாவை மக்களில் இருந்து ஒதுங்கியிருக்க வழிசமைப்பதாகவும் இருக்கும்.

புலிகளின் எதிர்பார்ப்புப் போல் லரி விஜேரத்தினாவின் இழப்பு பெரும் பின்னடைவல்ல என படைத்தரப்பு தெரிவித்ததுடன், யாழ். மக்களுடன் இராணுவம் நெருங்கி வருவதை



புலிகள் விரும்பவில்லை என்ற வார்த்தைகளையும் முடித்துக் கொண்டனர்.

லரி விஜேரத்தினாவின் தாக்குதல் மூலம் புலிகளினால் விரும்பியவாறு குடாநாட்டில் தாக்குதல்களை நடாத்தும் அவர்களின் திறமையை மீண்டும் எடுத்துக்காட்டுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இது இவ்வாறிருக்க வெற்றி நிச்சயம் போர் நடவடிக்கையில் ஓராண்டு நிறைவை இராணுவத் தரப்பு பெரும் ஏக்கத்துடன் எதிர்பார்த்திருக்க, புலிகள் அதனை ஒரு வெற்றிவிழாவாக கொண்டாடிவருகின்றனர்.

*பிரிகேடியர் லரி விஜேரத்தினா வடமராட்சி மக்களின் ஆதரவைப் பெற்றவர் என்று ஒரு சாரார் கதையைக் கட்டிவிட்டாலும் லரி விஜேரத்தினாவின் காலத்தில் வடமராட்சிப் பொதுமக்கள் காணாமல்போவதும் கைதுகள் தொடர்ந்துகொண்டுதான் இருந்தன. அத்துடன் இவர் கிழக்கில் பணியாற்றிய காலத்தில் கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் நடைபெற்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.*

# அணுகுண்டு பரிசோதனை அரசியல் வித்தையல்ல

## — பிரதமர் வாஜ்பாய் —

'எமது அணுகுண்டு பரிசோதனைகள் நடத்தும் திட்டம் நீண்டகால சிந்தனையின் பின்னர் எடுக்கப்பட்டதாகும். இது ஒரு அரசியல் வித்தையல்ல' என இந்தியப் பிரதமர் அடர் பிகாரி வாஜ்பாய் தெரிவித்துள்ளார். இந்தியா மீண்டும் புதனன்று இரண்டு அணுகுண்டுகளை வெடிக்கவைத்து பரிசோதித்த பின்னர், தனது



இல்லத்திற்கு வெளியே திரண்டிருந்த ஆதரவாளர் மத்தியில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

மேலும் 'நாங்கள் பரிசோனை செய்தது எமது தேசியப் பாதுகாப்பு கருதியே அன்றி எவருக்கும் ஆபத்தை உருவாக்கவோ, பயப் பிராந்தியை ஏற்படுத்தவோ அல்ல' என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இது இவ்விதமிருக்க, சர்வதேச பொருளாதாரத் தடைகளை தாங்கிக்கொள்ளும் சக்தி இந்தியாவின் பொருளாதாரத்திற்கு இருக்கின்றது' என்று இந்திய அரசியல் ஆலோசகர் பிரமோத் மகாஜன் தெரிவித்திருக்கின்றார்.

பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் அரசியல் ஆலோசகரான மகாஜன் கூட்டிய செய்தி நிருபர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

'எமக்கு இந்திய மக்களில் நம்பிக்கை இருக்கின்றது. இந்திய பொருளாதாரத்தின் பலத்திலும், நம்பிக்கை இருக்கின்றது. ஆகவே இந்தியாவுக்கு எதிராக சில நாடுகள் விதிக்கும் தடைகளை நாங்கள் எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றோம் என்று அரசியல் ஆலோசகர் தெரிவித்திருக்கின்றார்.


# அணுகுண்டு சோதனை வெடிப்பு இந்தியா இழக்கப்போவது 28 ஆயிரம் கோடி!

அணுகுண்டு சோதனைகளை நடாத்தியதை அடுத்து இந்தியா மீது ஜப்பான் ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் பொருளாதாரத் தடையை விதித்துள்ளன. இத்தடைகளால் சுமார் ரூ.28 ஆயிரம் கோடி அளவுக்கு இந்தியாவுக்கான உதவி நிதி இழப்பு ஏற்படக்கூடுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகவலை சர்வதேச வர்த்தக நிபுணர் தெரிவித்தார். இந்திய வளர்ச்சி நிதியத்தின் கூட்டம் அடுத்த மாதம் நடக்க இருக்கின்றது.

உலகவங்கி சர்வதேசச் செலாவணி நிதியம் ஆசிய வளர்ச்சி வங்கி உள்ளிட்டவற்றின் நிர்வாக அமைப்புக்களில் அமெரிக்கா ஜப்பான் ஜேர்மனி ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. எனவே அந்த வல்லரசு நாடுகள் திட்டமிட்ட முறையில் இந்தியாவுக்கு கிடைக்க வேண்டிய நிதி உதவியை 'தடுக்க முனையலாம்.

எவ்வளவு காலத்திற்கு எவ்வளவு கடுமையாக அந்நாடுகள் செயல்படுகின்றன என்பதைப் பொறுத்து பொருளாதார பாதிப்புகள் இருக்கும் என்றார் அந்த நிபுணர்.

எனினும் கொள்கை ஆய்வு மையம் என்ற அமைப்பைச் சேர்ந்த பேராசிரியர் சரண் வாத்வா 'இப் பொருளாதார தடைகளால் இந்தியாவுக்கு பெரும் பாதிப்பு ஏதும் ஏற்பட்டுவிடாது' என்கிறார். உண்மையில் இருதரப்பு உடன்பாடுகள் மூலம் நமக்கு கிடைக்கும் நிதி உதவியின் அளவு நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் ஒரு சதவீதத்திற்கும் குறைவு என்றார் அவர்.

வீன் சற்றலைற்
1490Frs. மட்டுமே

தொடர்புகளுக்கு:
01 42 05 56 15
06 60 98 84 32
T.V. குமார்

# வடமராட்சிக் கடவுள் லரி விஜேரத்தினாவின் மறுபக்கம்

**பருத்தித்துறையிலிருந்து நமது நிருபர் கருணாகரன்**

சிறீலங்கா இராணுவத்தின் வடமராட்சி பகுதி முன்னாள் இணைப்பதிகாரி பிரிகேடியர் லரி விஜேரத்தினா பருத்தித்துறையில் வைத்து தற்கொடைப் போராளி ஒருவரால் கொல்லப்பட்டதை அடுத்து அவரை - தமிழ் மக்களின் நண்பனாகவும், அவர்கள் மீது இரக்க சுபாவமுள்ளவராகவும் காட்டுவதற்கு சிறீலங்கா அரசும், அதனுடைய தகவல் தொடர்புச் சாதனங்களும் பெரு முயற்சி எடுத்து வருகின்றன. வடமராட்சி மக்களை கட்டாயப்படுத்தி கடைகளைப் பூட்ட வைத்துவிட்டும் உத்தியோகப் பற்றற்ற முறையில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி வீடுகளில் இருந்து வெளியே வராமல் செய்துவிட்டும், மக்கள் கடையடைப்புச் செய்தார்கள்,. துக்கம் கொண்டாடினார்கள் என்றெல்லாம் அரச சார்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அவரது உடலை தங்களது அஞ்சலிக்காக வைப்பதற்கு ஏற்பாடு செய்துதருமாறு வடமராட்சி மக்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள் என்று - சிறீலங்கா இராணுவத் தரப்பினர் புளுகித் தள்ளியிருந்தனர்.

உண்மையில் - வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சில பிரமுகர்களுக்கு லரி. விஜேரத்தினா 'கடவுள்'தான். கசிப்பு, கஞ்சா விற்கும் மினி பார்கள் திறக்கவும், நீலப்படம் (Blue film) காட்டுவதற்கான மினி தியேட்டர்கள் ஆரம்பிக்கவும் கடைகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து நினைத்த விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம் சம்பாதிக்கவும் வழிசெய்து கொடுத்த ஒரு மனிதன் இவர்களைப் பொறுத்தவரை 'கடவுள்' ஆகத்தான் இருக்கமுடியும்.

'சூரியக்கதிர் -III' நடவடிக்கைக்குப் பின் வடமராட்சி இராணுவ இணைப்பதிகாரியாகப் பதவி ஏற்றுக்கொண்ட லரி விஜேயரத்தினா கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றிய காலத்தில் கொக்கட்டிச்சோலை படுகொலைகள் உட்பட ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களை காவு கொள்வது எப்படி என்று கற்றுக்கொண்ட பாடத்தின் அடிப்படையில் வடமராட்சியில் ஒரு புதிய 'அணுகுமுறையை' அறிமுகம் செய்தார்.

அதாவது வடமராட்சிப் பிரமுகர்களின் பலவீனங்களைத் தெரிந்துகொண்டு - அவர்களை வசப்படுத்தி - மினிபார்கள், மினி சினிமாக்கள், கடைகள், நடத்துவதற்கு தாராளமாக அனுமதி வழங்கிய அதே நேரத்தில் மக்களை ஏமாற்றுவதற்காக மின்சாரம் - தொலைபேசி இணைப்பு - போக்குவரத்து வசதிகள், தபால் தொடர்புகள் என்பனவும் செய்து கொடுக்கப்பட்டன. யாழ்ப்பாணக்குடா நாட்டின் மற்றப் பிரதேசங்களில் இல்லாத அளவுக்கு வடமராட்சிப் பிரதேசத்துக்கு அதிக சலுகைகளும் - வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

வடமராட்சிப் பிரதேசம் தேசியத் தலைவரின் பிறந்த இடமாக இருப்பதால் அது நிச்சயமாக விடுதலைப் புலிகளின் கோட்டையாகவே இருக்கும். மக்களை விலைக்கு வாங்குவதன் மூலம் அந்தக் கோட்டையைத் தகர்த்துவிட்டால் விடுதலைப் புலிகளை பலவீனமாக்கி விடலாம் என்ற எண்ணம் லரி விஜேரத்தினாவிடம் இருந்தது.

அதனால் வடமராட்சியின் முக்கிய நகரங்களில் எல்லாம் பிரஜைகள் குழு அமைக்கப்பட்டது. மாதம் ஒரு முறை கூடும் இந்தப் பிரஜைகள் குழுவின் கூட்டங்களில் எல்லாம் 'லரி' தவறாது கலந்துகொண்டார்.



பிரஜைகள் குழுவால் முன் வைக்கப்படும் சிறுசிறு கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன. பிரஜைகள் குழுத் தலைவர்களால் சிபார்சு செய்யப்படுபவர்களுக்கு கொழும்பு செல்வதற்கு அனுமதிவழங்கப்பட்டது. உங்களின் மீதுள்ள நம்பிக்கையால் நான் இந்த அனுமதியை வழங்குகின்றேன் என்று வெளிப்படையாக 'லரி' சொல்லும்போது - மக்கள் குழுத் தலைவர்கள் புல்லரித்துப்போய் விடுவார்கள்.

ஆனால் உண்மையில் இந்த அனுமதி தீவிர அலசலுக்குப் பின்பே கொடுக்கப்பட்டது. கொஞ்சம் சந்தேகம் உள்ளவர்களுக்குக்கூட வெளிப்படையாக அனுமதி கொடுத்துவிட்டு கொழும்பில் அவர்களைக் கைது செய்யும்படி உத்தரவிடப்பட்டது.

வீதிச் சோதனைகள் சுற்றி வளைப்புகளின் போது கைது செய்யப் படுபவர்கள் பிரஜைகள் குழுத் தலைவர்களின் சிபார்சுகளின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்கள். அவ்வாறு அவர்கள் விடுதலை செய்யப்படும்போது - நீங்கள் நல்லவர்கள். நீங்கள் எந்தக் குற்றமும் செய்யவில்லை. அறியாமல் தவறு செய்துவிட்டீர்கள். நானும் உங்களைப்போல் இளைஞனாக இருந்தவன்தான் எனக்கு உங்களுடைய பிரச்சினைகள் தெரியும். அதனால் நான் உங்களை மன்னித்து விடுதலை செய்கின்றேன். இனியாவது நல்லபடியாக இருங்கள் என்று 'லரி' அவர்களுக்கு உபதேசம் செய்து அனுப்புவார்.

ஆனால் - லரியின் இரகசிய இராணுவக் குழு ஒரு சில வாரங்களுக்கு அவர்களின் நடமாட்டங்களை கண்காணித்துவிட்டு நள்ளிரவில் வந்து - நாங்கள் புலிகள் வந்திருக்கின்றோம் - வாருங்கள் உங்களை விசாரிக்கவேண்டும் என்று கூறி அழைத்துச் சென்றுவிடுவார்கள் - அவ்வாறு சென்றவர்கள் மீண்டும் திரும்புவதில்லை. அவர்களை புலிகள் கொண்டு போய்விட்டார்கள் என்பது தான் கணக்கு. ஆனால் அவர்கள், வல்லிபுரத்து ஆனைவிழுந்தானிலோ - வடமராட்சி கிழக்கு - மணற்காட்டிலோ இருக்கும் அடையாளம் தெரியாத புதைகுழிகளுக்குள் போயிருப்பார்கள். அல்வாய், திக்கம், பொலிகண்டி, இலந்தைக்காடு - கரணவாய், கரவெட்டி துன்னாலை, தும்பளை, புலோலிப் பகுதிகளில் இவ்வாறு காணாமல் போன யுவதிகளும் - இளைஞர்களும் ஏராளம் ஏராளம் - இதுவரை ஒழுங்கான கணக்கு எடுக்கப்படவில்லை - எடுத்தால் இந்த எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டிவிடும்.

அண்மையில் பருத்தித்துறைப் பகுதியில் ஒரு இளம் பெண் இராணுவத்தினரால் கடை ஒன்றில் வைத்துப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப் பட்டதும் - அதற்கு கண்கண்ட சாட்சியாக இருந்த அந்தக் கடை உரிமையாளரான இன்னொரு பெண் - உயிருடன் எரிக்கப்பட்டதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சம்பவங்கள்.

இதுபற்றி - பருத்தித்துறை பிரஜைகள் குழு - லரியிடம் முறையிட்டபோது இது எனக்குத் தெரியாமல் நடந்துவிட்டது. தவறு செய்தவர்கள் மீது நான் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று லரி அவர்களுக்கு சமாதானம் சொல்லியிருந்தார்.

ஆனால் அந்தப் பாதகச் செயலை செய்தவர்கள் லரியினது - வழிகாட்டலில் இயங்கும் 'இரவு · இராணுவக்குழு' என்பதும் 'சாட்சி உயிருடன் இருந்தால் மேலும் சிக்கலுக்குள்ளாக வேண்டிவரும் என்பதால் சாட்சியை அழிக்கும்படி உத்தரவிட்டதே லரி தான் என்பதும் வெளிச்சத்துக்கு வராத உண்மைகள்.

நாளை வடமராட்சிப் புதைகுழிகள் கிளறப்படும்போது வடமராட்சிப் பிரமுகர்களின் 'கடவுளின்' சுயரூபம் நிச்சயம் வெளிப்படும்.

★

*வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த சில பிரமுகர்களுக்கு லரி. விஜேரத்தினா 'கடவுள்'தான். கசிப்பு, கஞ்சாவிற்கும் மினி பார்கள் திறக்கவும், நீலப்படம் (Blue film) காட்டுவதற்கான மினி தியேட்டர்கள் ஆரம்பிக்கவும் கடைகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்கி வைத்து நினைத்த விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம் சம்பாதிக்கவும் வழிசெய்து கொடுத்த ஒரு மனிதன் இவர்களைப் பொறுத்தவரை 'கடவுள்' ஆகத்தான் இருக்க முடியும்.*


*வீதிச் சோதனைகள் சுற்றி வளைப்புகளின்போது கைது செய்யப்படுபவர்கள் பிரஜைகள் குழுத் தலைவர்களின் சிபார்சுகளின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்கள். நான் உங்களை மன்னித்து விடுதல்லை செய்கின்றேன். இனியாவது நல்லபடியாக இருங்கள் என்று 'லரி' அவர்களுக்கு உபதேசம் செய்து அனுப்புவார்.*

*ஆனால் லரியின் இரகசிய இராணுவக் குழு ஒரு சில வாரங்களுக்கு அவர்களின் நடமாட்டங்களை கண்காணித்துவிட்டு நள்ளிரவில் வந்து, நாங்கள் புலிகள் வந்திருக்கின்றோம் வாருங்கள் உங்களை விசாரிக்கவேண்டும் என்று கூறி அழைத்துச் சென்றுவிடுவார்கள். அவ்வாறு சென்றவர்கள் மீண்டும் திரும்புவதில்லை.*

## சுவிசில் பொதுப் பரீட்சை பெறுபேறுகள் இவ்வாரம் வெளிவருகின்றன

**உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு கல்விச்சேவை வருடந்தோறும் நடாத்தும் சுவிஸ் வாழ் தமிழ் மாணவர்களுக்கான வருடாந்தப் பொதுப் பரீட்சை கடந்த சித்திரை மாதம் நடாத்தப்பட்டது. 1100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றிய பரீட்சை முடிவுகள் இவ்வாரம் அனைத்து தமிழ்ப் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது. சுவிஸ் நாட்டில் ஒவ்வோர் மாநிலங்களும் வெவ்வேறு கல்வித்திட்ட முறைகளைக் கொண்டுள்ளதால் அந்தந்த மாநில கல்வித்திட்ட முறைப்படியே மாணவர்களுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது. பல சுவிஸ் பாடசாலைகளில் இப் பொதுப் பரீட்சைப் புள்ளிகளையும் தங்கள் பாடசாலை தேர்ச்சி அறிக்கையில் பதிந்துவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.**

# ‘அணு’வில் இயங்கும்




## அணு சோதனை: பா.ஜ.க.வுக்கு அரசியல் வெற்றி

அடுத்தடுத்து இரு முறை அணு வெடிச் சோதனையை நடத்தியதன் மூலம், அரசியல் ரீதியாக பாரதிய ஜனதாக் கட்சிக்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்துள்ளதாகக் கருதப்படுகிறது. கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியிருக்கும் பிரதமர் வாஜ்வாய், செயல்பட முடியாமல் இருக்கிறார் என்று கூறப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.


அணுவெடிச் சத்தத்தில், கூட்டணிக் கட்சிகள் மற்றும் எதிர்க் கட்சிகளையடுத்து பா.ஜ.க. எதிர்ப்புச் சத்தம் அடக்கப்பட்டுவிட்டது. பாரதிய ஜனதா எதிர்ப்பில் தீவிரமாக உள்ள கட்சிகள் கூட, அணு வெடி சோதனைகளை வரவேற்றுள்ளன. அது நடத்தப்பட்ட நேரம் குறித்தே காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன. உலக நாடுகளின் ஒட்டுமொத்த கண்டனத்துக்கு உள்ளாக நேரிடும் என்பது தெரிந்திருந்தும், தேசியப் பாதுகாப்பு கருதி இத்தகைய முடிவை எடுத்ததாக அரசு விளக்கமளித்துள்ளது.

இதில் அரசியல் நோக்கம் எதுவுமில்லை என்றும் அது மறுத்துள்ளது. நோக்கம் அதுவாக இல்லாமல் இருந்தாலும், அரசியல் ரீதியாகக் கிடைக்கும் பலன்களை ஆராயாமல் முக்கிய முடிவை வாஜ்பாய் எடுத்திருக்கமாட்டார் என்று கூறப்படுகிறது. இந்தியா அணு ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டும் என்று பா.ஜ.க. தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. தற்போதைய கூட்டணி அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாக இந்தக் கொள்கையை அக்கட்சி விட்டுக்கொடுத்துவிடும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

ஆனால், ஆட்சிக்கு வந்த இரு மாதங்களுக்குள்ளாகவே, ஐந்து அணு குண்டுகளை வெடித்து சோதனை நடத்தியதன் மூலம், கூட்டணி அரசியலின் நிர்ப்பந்தங்களுக்குத் தான் பணியப் போவதில்லை என்பதை அக்கட்சி தெளிவுபடுத்தியுள்ளது. சுதேசிக் கொள்கையை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் ‘என்பது அக் கட்சியின் நிலை. உலக மயமாக்கல் காரணமாக, அக்கொள்கையைப் பின்பற்ற முடியாத நிர்ப்பந்தம் உள்ளது.

இந்நிலையில், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் பொருளாதாரத்தடை நடவடிக்கைகள் தீவிரமானால் சுதேசிக் கொள்கையை முழுமையாகப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழி இல்லை. நாட்டின் பாது காப்பை முன்னிறுத்தி, இந்தச் சோதனைகளை பா.ஜ.க. அரசு நடத்தியிருப்பதன் மூலமாக, தன் மீதான நல்ல அபிப்பிராயத்தை அக்கட்சி அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

இந்தப் பின்னணியில், நாட்டின் மீது மற்றுமொரு தேர்தல் திணிக்கப்படுமானால், தனித்தே பெரும்பான்மை பலத்தைப் பெற முடியும் என்றும் அக்கட்சியின் தலைமை கருதுகிறது. இதன் மூலம், அ.தி.மு.க., திருணமூல் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து செயல்பட வேண்டிய நிலையை பா.ஜ.க. ஓரளவுக்குத் தவிர்க்க முடியும். பிரச்சினைகளை



உருவாக்கும் கூட்டணிக் கட்சிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க இந்த நடவடிக்கை உதவியிருப்பதாகக் கருதப்படுகிறது.

‘ஐந்து ஆண்டுகளும் நீடிக்க முடியும் என்று நம்பும் அரசு. பதவியேற்ற இரு மாதங்களுக்குள் இவ்வளவு பெரிய முடிவை எடுக்க முன்வந்திருக்காது. நீண்ட காலம் ஆட்சியில் நீடிக்க முடியாது என்று கருதும் அரசுதான் இவ்வளவு விரைவாகச் செயல்பட விரும்பும்’ என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. ‘கூட்டணிக் கட்சிகளின் நெருக்குதல் அதிகரிக்குமானால், ராஜினாமா செய்துவிட்டு, தேர்தலைச் சந்திக்கவும் தயாராக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது’ என்றும் ஒரு கருத்து டெல்லி அரசியல் வட்டாரங்களில் நிலவுகிறது.

இப்போதைய சோதனைகள் காரணமாக, இந்தியாவின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய கட்டாயத்துக்கு வல்லரசு நாடுகள் தள்ளப்பட்டுள்ளன. இது, சர்வதேச அரங்கில் இந்தியாவுக்கு அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. உலகில் சீனாவுக்கு அடுத்ததாக, பெரிய நுகர்வோர் சந்தையைக்கொண்ட இந்தியா மீது பொருளாதாரத் தடையை விதிப்பதால், அமெரிக்காவுக்கும் இழப்புகள் ஏற்படும்.

பொருளாதாரத் தடையால் முழுமையாகப் பாதிக்கப்படும் அளவுக்கு ஈராக் போன்று பலவீனமான நிலையில் இந்தியா இல்லை. பிற நாடுகளின் இத்தகைய தடை நடவடிக்கைகளால், இந்தியப் பொருளாதாரத்துக்குப் பாதிப்புகள் இருக்கும் என்பதை மறுக்க முடியாது. ஆனால், இந்தப் பாதிப்புக்களைத் தாங்கிக்கொள்ளும் திறன் இந்தியாவுக்கு உள்ளதை மறுக்க முடியாது.

– *தினமணி*

| நாடுகளும் அணுச்சோதனையும் | |
|---|---|
| அமெரிக்கா | – 1032 |
| சோவியத் யூனியன் | – 715 |
| பிரான்ஸ் | – 210 |
| பிரிட்டன் | – 45 |
| சீனா | – 44 |

## ‘சர்வதேச நிர்ப்பந்தங்களுக்கு இந்தியா பணியாது’

உலக நாடுகளின் கண்டனங்களை மீறி, இரண்டாவது முறையாக இரு அணுக் குண்டுகளை புதன்கிழமை வெடித்துச் சோதனை நடத்தியதன் மூலம், சர்வதேச நிர்ப்பந்தங்களுக்குப் பணியத் தயாராக இல்லை என்பதை இந்தியா திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இதுவரை இந்தியாவின் கருத்துகளை மதிக்காத வல்லரசு நாடுகள், தற்போது இந்தியாவைப் புறக்கணிக்க முடியாத கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்தியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்துள்ளது. இந்தியாவுக்கான உதவித்தொகையை நிறுத்த ஜப்பானும், ஜேர்மனியும் முடிவு செய்துள்ளன. எனினும், இந்தியா மீதான உலக நாடுகளின் பார்வையில் ஒருமித்து கருத்து இல்லை என்பதை உறுதி செய்யும் வகையில், இந்த நடவடிக்கையை ரஷ்யாவும் பிரான்சும் ஆதரிக்கவில்லை. அணு ஆயுதங்களை வைத்திருக்கும் 5 வல்லரசு நாடுகளில் அமெரிக்காவும் பிரிட்டனும் இந்தியாவுக்கு எதிராகக் கடும் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

ஆனால். அதேநேரத்தில், ரஷ்யாவும் பிரான்சும் அத்தகைய நடவடிக்கையை எதிர்த்துள்ளதன் மூலம் வல்லரசு நாடுகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. மற்றொரு வல்லரசான சீனா, இதுவரை அதிகார பூர்வமாக எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. கிளின்டனின் எச்சரிக்கையை மீறி, திங்கட்கிழமை நடாத்தப்பட்ட அணு வெடி சோதனைக்குக் கண்டனம் தெரிவித்த அமெரிக்க அதிபர் பில் கிளின்டன், ‘இந்திய துணைக்கண்டப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் சுயக் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும், எந்த நிபந்தனையும் விதிக்காமல், விரிவான அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட வேண்டும்’ என்று செவ்வாய்க்கிழமை எச்சரிக்கை விடுத்தார். இதே கருத்தை ஜப்பானும், பிரிட்டனும் வலியுறுத்தியிருந்தன. இந்த எச்சரிக்கையையும் மீறி, இந்தியா மீண்டும் இரு குண்டுகளை புதன் கிழமை வெடித்து, சோதனை நடாத்தியது. அமெரிக்கா தலைமையிலான இந்தக் கூட்டணியை இது மேலும் ஆத்திரமடையச் செய்யும் என்பது தெரிந்திருந்தும், தனது ஆய்வுப் பணியை முழுமையாக முடிக்க இந்த சோதனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

1974-ம் ஆண்டிலேயே இந்தியா முறையாக அணு வெடி சோதனையை நடத்தியபோதும், வல்லரசு நாடுகள் பட்டியலில் இந்தியா சேர்க்கப்படவில்லை. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் ‘சிடிபிடி’ இரு ஒப்பந்தங்களுமே, அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கும் வல்லரசு நாடுகளுக்கும் இடையில் பாரபட்சமான அணுகுமுறையைப் பின்பற்றுவதாக இந்தியா இதுவரை கூறிய கருத்துக்களுக்கு உலக அரங்கில் மதிப்பில்லை.

பிற நாடுகள் அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதைத் தடுப்பதே இந்த ஒப்பந்தங்களின் உண்மையான நோக்கம் என்றும், அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிப்பதில் வல்லரசு நாடுகளுக்கு விருப்பம் இல்லை என்றும் இந்தியா கூறிய புகாரை ஆமோதிக்க வேறெந்த நாடும் தயாராக இல்லை. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிக்க வகை செய்யும் விதத்தில் ‘சிடிபிடி’ அம்சங்களைத் திருத்த வேண்டும் என்று இந்தியா கோரியபோது, அது முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டது. இந்தியாவைத் தனிமைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

‘சிடிபிடி’ குறித்த விவாதங்கள் நடந்துகொண்டிருந்தபோதே, 1996-ல் அவசர, அவசரமாக பிரான்சும், சீனாவும் அணு வெடி சோதனைகளை நடத்திய போது, அதை இந்த வல்லரசு நாடுகள் வன்மையாகக் கண்டிக்கவில்லை. ஆனால் அத்தகைய சோதனைகளை நடத்தத் தடை விதிக்கும் எந்த சம்பந்தத்திலும் கையெழுத்திடாத இந்தியா, சோதனைகளை நடத்திய போது இந்த நாடுகள் கொதித்தெழுந்தது. இத்தகைய நாடுகளின் இரட்டை வேஷத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

### இந்தியா மீதான பொருளாதாரத் தடை

## வல்லரசு நாடுகளிடையே இணக்கம் இல்லை!

இந்தியா இரண்டு முறை அணுகுண்டு சோதனை நடத்தியதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்து பொருளாதாரத்தடையை விதித்துள்ளது. இதனை ஜேர்மனி ஏற்றுள்ளது. ஆனால் இங்கிலாந்து பிரான்ஸ் ரஷ்யா ஆகிய நாடுகள் அணுகுண்டு சோதனையை கடுமையாக கண்டித்தாலும் பொருளாதாரத் தடைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

**அமெரிக்கா விதித்த பொருளாதார தடைகளாவது:**

1. **உணவு மனிதாபிமான உதவிகளைத் தவிர்த்து மற்ற உதவிகள் அனைத்தும் நிறுத்தம்.**
2. **சில குறிப்பிட்ட பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள் ஏற்றுமதிக்குத் தடை**
3. **அமெரிக்க கடன் வசதி மற்றும் உத்தரவாதம் இனி கிடைக்காது.**
4. **இந்தியாவுக்கு உலக வங்கி சர்வதேச நிதியம் உதவுவதை அமெரிக்கா எதிர்க்கும் என்பனவாகும்.**

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா இந்தியாவின் அணுகுண்டு சோதனை முயற்சிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். எனினும் இந்தியாவுக்கு எதிரான பொருளாதாரத் தடையை அவர் ஆதரிக்கவில்லை.

### முதல் சோதனையும் மொத்தச் சோதனையும்

முதல் அணுக்குண்டுச் சோதனை 1945-ம் ஆண்டு ஜூலை மாதம் நியூ மெக்சிக்கோ பாலைவனத்தில் அமெரிக்காவால் மேற்கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை 2051 அணுச் சோதனைகள் நடத்தப்பட்டு விட்டன.


# உலகம்

## சீ.ஐ.ஏ.க்கு கிடைத்த பெரிய தோல்வி

இந்தியா அணுகுண்டை வெடிக்கவைத்து பரிசோதிக்க திட்டமிட்டது தொடர்பாக முன்கூட்டியே கண்டறியத் தவறியமைக்காக அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.க்கு எதிராக அமெரிக்க செனட் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

சி.ஐ.ஏ. மீது இது தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

'இத்தகைய நடவடிக்கைகளை உளவு பார்த்து அமெரிக்க அரசுக்கு அறிவிப்பதற்காக சி.ஐ.ஏ. அமைப்புக்கு வருடம் 27 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவு செய்யப்படுகின்றது. ஆனால் இவர்களால் இந்திய அணுகுண்டு பரிசோதனை பற்றி முன்னரே அறிந்து கொள்ள முடியவில்லை. இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும்' என்று அலபாமா மாநில அமெரிக்க செனட்டர்




ரிச்சர்ட் செல்பி தெரிவித்திருக்கின்றார்.

விரைவில் சி.ஐ.ஏ. மீதான விசாரணை நடைபெறும் என்றும் ஓய்வு பெற்ற அமெரிக்க நிர்வாகி டெவிட் ஜெரமியா தலைமையில் இதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் செனட்டர் தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்க உளவுத்துறையின் மிகப்பெரிய தவறு இதுவாகும். இத்தவறினால் உலகில் அணு ஆயுத போட்டாபோட்டி ஏற்பட ஏதுவாகக்கூடும்' என்றும் அவர் கண்டனம் தெரிவித்திருக்கின்றார். புகழ்பெற்ற அமெரிக்க உளவுப்படையான சி.ஐ.ஏ தகவல்களை பெறுவதில் மிகத் திறமையாக செயற்படும் ஒரு அமைப்பாகும். சி.ஐ.ஏ. செய்மதிகள், இலத்திரனியல் தொலைத் தொடர்பு உபகரணங்கள் மற்றும் ஆளணியினரை பயன்படுத்தி உளவு பெறுவதில் உலகில் முன்னணி வகிக்கின்றது.

## இந்திய அணுகுண்டு பரிசோதனையின் அதிர்வுகள்

### வாஜ்பாயின் அறிவிப்பு

தனது நாடு ஐந்து அணுகுண்டு பரீட்சிப்புகளை நடத்தியமை குறித்து அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கு விளக்கமளிக்கும் கடிதங்களை இந்திய பிரதமர் வாஜ்பாய் அனுப்பி வைத்துள்ளார். இந்தியாவுக்கு அதிகளவு உதவி வழங்கும் நாடான ஜப்பானுக்கும் இந்த விளக்க கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

### அமெரிக்க இராணுவ தொடர்பு துண்டிப்பு

இந்தியா ஐந்து அணுகுண்டு பரிசோதனைகளை நடத்தியதை அடுத்து உத்தேசித்திருந்த இராணுவ பயிற்சி, பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவற்றிலிருந்து தாம் விலக திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

### கனடா தூதுவர் வாபஸ்

இந்திய அணுகுண்டு பரிசோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள கனடா, இந்தியாவுக்கான தனது தூதுவரை தற்காலிகமாக திரும்ப அழைத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

### அமெரிக்க தூதர் பேச்சு

இந்தியாவுக்கான தனது தூதுவரை வாஷிங்டனுக்கு அழைத்துள்ள அமெரிக்கா இந்தியாவின் அணுகுண்டு பரீட்சிப்பு குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளது.

உடனடியாக தூதுவர் ரிச்சர்ட் செலெஸ்டியை வாஷிங்டனுக்கு அமெரிக்கா அழைத்துள்ளது.

### பாதுகாப்பு சபை சர்ச்சை

இந்திய அணுகுண்டு பரீட்சிப்பை ஐ.நா. பாதுகாப்புச் சபை கண்டித்துள்ளது. இந்த கண்டிக்கும் அறிக்கையை சுவீடன் ஜப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உத்தியோகமற்ற ரீதியில் அறிவித்துள்ளனர்.

### அனானின் கவலை

இந்திய அணுகுண்டு பரீட்சிப்பினால் தான் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார். பாரிசில் தற்போது உள்ள அனான் அணுகுண்டுகளை இதுபோன்று பரீட்சிக்க வேண்டாம் என்று எல்லா நாடுகளையும் கேட்டுள்ளார்.

### மேலதிக பரீட்சிப்பு

அணு ஆயுத தயாரிப்பு நடவடிக்கைகளை சிரமமாக மேற்கொள்ள முன் மேலதிக அணுகுண்டு பரீட்சிப்புகள் தேவைப்படும் என்று இந்திய பாபா அணு ஆயுத நிலைய நிபுணர்கள் கூறியுள்ளனர்.

### ரஷ்யா கண்டனம்

இந்தியாவின் அணுகுண்டு பரிசோதனையை ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் கண்டித்துள்ளார். ரஷ்ய ஜனாதிபதியுடன் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் தொலைபேசியில் பேசி இதுபற்றி கலந்துரையாடியுள்ளார்.

எனினும் இந்தியா மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பதை தமது நாடு எதிர்க்கும் என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் யூவ்கனி பிரிமகோவ் கூறியுள்ளார்.

### பலநாடுகள் நடவடிக்கை

சீனா இப் பரிசோதனையால் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு தான் வழங்கவிருந்த அபிவிருத்தி உதவிகள் குறித்து பேசவிருந்த ஜேர்மனி பேச்சுவார்த்தைகளை அணுகுண்டு பரிசோதனையால் கைவிட்டுள்ளதாக கூறியுள்ளது.

நியூசிலாந்தும் அவுஸ்திரேலியாவும் தமது தூதுவர்களை திருப்பி அழைத்துள்ளன.

தமது பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் கொஹுார் அய்யூப்கான் கூறியுள்ளார்.

### பங்குச்சந்தை வீழ்ச்சி

இந்திய அணுக்குண்டுப் பரிசோதனையை அடுத்து நாடளாவிய பங்குச் சந்தை வீழ்ச்சி கண்டுள்ளதாக தெரிய வருகிறது.

பொருளாதாரத்தடை விதிக்கப்படலாம் என்ற அச்சத்தால் இது நிகழ்ந்திருக்கலாம் என்று தெரிய வருகிறது.

பம்பாயிலுள்ள 30 உயர்திறன் பங்கு வகைகள் 1.92 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

### குண்டின் இயல்பு

மூன்று அணுகுண்டுப் பரீட்சிப்புகளிலும் மூன்று விதமான அணுகுமுறைகள் கையாளப்பட்டிருக்கலாம் என்று முன்னாள் இந்திய அணு ஆயுத கமிஷன் தலைவர் பீ.கே. ஐயங்கார் கூறினார்.

1000 தொன் டி.என்.டி என்ற பொருட்கள் கொண்ட சிறிய ரகமாக ஒரு பரீட்சிப்பு இடம் பெற்றிருக்கலாம் என்றும் அது ஆட்டிலெறி ஷெல்கள் மூலமும் விமானம் மூலமும் ஏவப்படக்கூடியதாக ஒரு வகையும்.

12,000 தொன் டி.என்.டி கொண்ட குண்டு வீச்சு விமானம் மூலம் தாக்கப்படக்கூடிய இரண்டாவது ரகமும் 50 தொடக்கம் 100 கிலோ தொன் டி.என்.டி பாரிய குண்டு மூன்றாவது ரகமாக பரீட்சிக்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர் சொன்னார்.

## வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ முன்பு 'கற்றது கையளவு, கல்லாதது உலக அளவு' என பழமொழி இருந்தது. அது இப்போது 'கற்றது கால்குலேட்டர் அளவு, கல்லாதது கம்பியூட்டர் அளவு' என்று கூறும் அளவுக்கு கம்யூட்டர் வளர்ந்துள்ளது.

*- கடம்பூர் ஜனார்த்தனம்- அதிமுகவைச் சேர்ந்த மத்திய அமைச்சர்*
*தினபூமி- 14.05.98*

❀ ❀ ❀

☺ சீனாவும் பிரான்சும் சோதனைகளை நடத்திவிட்டுத்தான் அவ்வுடன்பாட்டில் (ஒட்டு மொத்த அணு ஆயுத சோதனைத் தடை உடன்பாடு) கையெழுத்திட்டன. இந்தியாவும் அதையே செய்ய வேண்டும். அணுக்குண்டு சோதனைகளை நடத்திக் கொண்டிருக்கும் நாடுகள் இந்தியாவை குறைகூறுவது கபடத்தனமானது.

*- இந்தியாவின் முன்னாள் பிரதமர் I.A.S. குஜ்ரால்*

❀ ❀ ❀

☺ அமெரிக்காவின் பொருளாதாரத் தடைக்கு அஞ்சவில்லை. சொந்தக் கால்களில் நிற்கும் திறன் இந்தியாவுக்கு உள்ளது. எத்தகைய சவாலையும் சந்திக்க நாடு தயாராக உள்ளது... அணு ஆயுதத் தடை என்பது ஒருதலைப்பட்சமாக இருக்கக் கூடாது. அணு ஆயுதங்கள் வைத்துள்ள எந்நாடுகளுக்கும் இது பொருந்த வேண்டும்.

*- இந்தியாவின் தற்போதைய பிரதமர் வாஜ்பாய்*
*அணுக்குண்டு வெடிப்புச் சோதனை தொடர்பான மாறுபட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த இரு பிரதமர்களின் கூற்றுகள்*
*14.05.1998 தினமணி நாளிதழில்*

❀ ❀ ❀

☺ அடிப்படையில் பல மொழி பல இனம் பலவிதமான பண்பாட்டைக் கொண்ட நம் தேசத்தில் நாடாளுமன்ற ஆட்சிமுறைதான் பொருத்தமானதாக அமையும். அதைப் புறக்கணித்துவிட்டு ஜனாதிபதி ஆட்சிமுறையை கொண்டுவர நினைப்பது பா.ஜ.க வின் மறைமுக சர்வாதிகாரப் போக்கையே எடுத்துக்காட்டுகிது.

*- நல்லகண்ணு - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி*

❀ ❀ ❀

☺ ஜனாதிபதி மட்டுமே அதிகாரம் பெற்றிருக்கும் அமெரிக்க முறையா இல்லை ஜனாதிபதியோடு பிரதம மந்திரியும் இருக்கும் பிரெஞ்சு முறையா இதில் நம் நாட்டுச் சூழலுக்கு ஏற்புடையது எது என்பதை ஆலோசிக்க வேண்டும்.

*- சி.சுப்பிரமணியம் முன்னாள் இந்திய நிதி அமைச்சர்*
*'இந்தியாவில் ஜனாதிபதி ஆட்சிமுறையைக் கொண்டு வர வேண்டும்' என்ற பா.ஜ.க. வின் யோசனைக்கு மாற்றுக் கருத்துக்களாக 13.05.1998 ஜுனியர் விகடனில்*

❀ ❀ ❀

☺ இந்தியா முழுவதும் ஒரு கோடியே 20 இலட்சம் பார்வையற்றவர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பார்வையற்றவர்கள் அதிகம். இதற்கு காரணம் தமிழர்கள் சத்துக்குறைவான சாப்பாடு சாப்பிடுவதுதான்! சாப்பாட்டில் நாள்தோறும் ஒரு கீரை சேர்த்துக் கொண்டால் போதும் கண்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

*- 17.05.1998 வாராந்தரியில்*

❀ ❀ ❀

☺ வரதராஜப் பெருமாள் இந்தியாவில் கடந்த எட்டு ஆண்டுகளாக வசித்து வருகிறார். விடுதலைப் புலிகளின் ஹிட் லிஸ்டில் முதலிடம் பெற்றிருக்கும் இவருக்கு இந்திய அரசு 'இஸட்' ரக பாதுகாப்பு அளித்திருக்கிறது. மார்க்கெட்டுக்குப் போய் மீன் வாங்குவது போன்ற 'சாகசங்களை' கண்டு பாதுகாப்பு அதிகாரிகள் முகம் சுழிக்கிறார்கள்.

ராஜஸ்தான் அரசோ இவர் மார்க்கெட்டுக்கு போவது இருக்கட்டும் முதலில் எங்கள் மாநிலத்தை விட்டு கிளம்பட்டும் என்கிறது. முதல்வர் பைரோன் சிங் ஷெகாவத் இவரை ராஜஸ்தானில் இருந்து வெளியே கொண்டுபோக வேண்டும் என்று கோரி கடந்த சில மாதங்களில் நான்கு முறை மத்திய அரசுக்கு கடிதம் எழுதிவிட்டார். அதற்கு எந்தப் பதிலும் இதுவரை இல்லை. பெருமாளோ அஜ்மீரில் ஹாயாக இருக்கிறார்.

*- ராஜஸ்தான் வேண்டாத விருந்தாளி*
*13.05.1998 இந்தியா டுடே கட்டுரையில்*

❀ ❀ ❀

☺ பெரும்பான்மைத் தமிழர்கள் இலக்கிய நாட்டமுள்ளவர்கள் அல்ல. போதாக்குறைக்கு அறிவியல் நூல் என்றாலே ஓடிவிடுபவர்கள். இத்தகைய மண்குதிரைகளை நம்பி இந்த அறிவியல் நூலைத் தெளிவான அச்சில் தரமான காகிதத்தில் வழங்கியுள்ள வானதி பதிப்பக அதிபர் அஞ்சாநெஞ்சர்தாம்.

*- 'பிரபஞ்சத்தின் கதை' எனும் டாக்டர் வ. மா.சிலாமணியின் நூலுக்கான மதிப்புரையில்-13.05.1998 இந்தியா டுடே*

❀ ❀ ❀




# துருக்கியில் மனித உரிமை ஆர்வரலர் மீது தாக்குதல்

(இஸ்தம்பூல் மே-13)

துருக்கியிலுள்ள மனித உரிமைகள் சங்கத்தின் தலைவரான AKIN BIRDAL இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் தாக்கப் பட்டுள்ளார்.

50 வயதான BIRDAL தனது அலுவலகத்தில் இருந்தபோது துப்பாக்கிகளுடன் வந்த 2 இளைஞர்கள் அவரை நோக்கி சரமாரியாகச் சுட்டுவிட்டு தப்பி ஒடிவிட்டனர். மார்பிலும், தோளிலும், காலிலும் 6 குண்டுகள் பாய்ந்த நிலையில் அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

அவருக்கு தீவிர சிகிச்சை அளித்துவரும் டாக்டர்கள் அவரது நிலை இன்னும் அபாயக் கட்டத்தை தாண்டவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

1992 இலிருந்து மனித உரிமைகள் சங்கத்தின் தலைவராக இருந்து வரும் BIRDAL குர்திஷ் தான் தொழிலாளர் கட்சி (PKK) க்கு ஆதரவாக இருந்தார் என்று பலமுறை அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

கடந்த மாத நடுப்பகுதியில் கைதான PKK பழைய இராணுவப் பிரிவுத் தலைவர் ஒருவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப் படையில் சமீபத்தில் BIRDAL மீது துருக்கிய பொலிசார் விசாரணை நடத்தியிருந்தனர்.

இவர் மீதான தாக்குதலுக்கு 'பழிவாங்கும் துருக்கிப் படை' என்ற வலதுசாரி தீவிரவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது.

இந்த அமைப்பு PKK க்கு ஆதரவாக இருந்த பல பத்திரிகையாளர்களை முன்பு சுட்டுக் கொன்றது குறிப்பிடத்தக்கது.

# ஜெனீவாவில் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்த பிடல் காஸ்ரோ

(ஜெனீவா மே - 16)

ஜெனீவாவில் நடந்த உலகின் 50-வது மருத்துவ ஒன்று கூடலுக்கு கியூப அதிபர் பிடல் காஸ்ரோ உலக சுகாதார நிறுவனத்தால் (OMS) அழைக்கப் பட்டிருந்தார்.

அவர் ஒரு வயதான புரட்சிக்காரர் எனினும் வயதாகாத தன்னுடைய அறிவாற்றல் காரணமாக அவர் இந்த ஒன்று கூடலுக்கு வந்திருந்த அனைவரினதும் கவனத்தை ஈர்த்தார்.

கவலைக்குரிய வகையில் அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கும் மனிதமும் அதனிடம் சிக்கித் தவிக்கும் பூமியும் பரந்துபட்ட மக்களின் நலனுக்காக நல்வழியில் திரும்பும் என்ற திடமான நம்பிக்கை கொண்டவராக அவர் காணப்பட்டார்.

உலக சுகாதார நிறுவனத்துக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த அவர் இன்றைய உலக யதார்த்தத்தைப் பற்றி விரிவாகப் பேசினார்.

இன்னும் 50 ஆண்டுகளில் உலக சனத்தொகையில் 4000 கோடி புதியவர்கள் இருப்பார்கள். பழைய நோய்களெல்லாம் புத்துயிர் பெறுகின்றன. நிபுணர்களின் கருத்துப்படி 30-க்கு மேற்பட்ட நோய்கள் இவ்வாறு புத்துயிர் பெற்றிருக்கின்றன. எயிட்ஸ் நோயை நாங்கள் வெற்றி கொள்ளாவிட்டால் அது பல மூன்றாம் உலக நாடுகளை வெற்றி கொண்டுவிடும் என்று எடுத்துக்கூறிய காஸ்ரோ, கடந்த அரை நூற்றாண்டில் OMS மற்றும் UNICEF ஆகியவற்றின் நடவடிக்கைகளையும் தாண்டி 60 கோடி குழந்தைகளும் 2.5 கோடி கர்ப்பிணித் தாய்மார்களும் (பிரசவத்தின்போது) இறந்துள்ளார்கள். ஒழுங்கான மருத்துவ வசதி இருப்பின் இது போன்ற மரணங்களை தவிர்ப்பதற்கு நீதியானதும் சமத்துவமானதுமான ஒரு உலகம் வேண்டும்.




ஐ.நாவின் கணக்குப்படி உலகெங்குமுள்ள வசதிகுறைந்த மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதி வழங்குவதற்கு ஒரு வருடத்திற்கு 2500 கோடி அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது. ஆனால் அதேநேரம், உலக வல்லரசுகள் இராணுவத்திற்காக 80,000 கோடி அமெரிக்க டொலர்களை வருடத்திற்குச் செலவு செய்கின்றது. இதில் 3% தான் மருத்துவ வசதிக்கு தேவைப்படும் 2500 கோடி அமெரிக்க டொலர்.

காலநிலை மாறுகின்றது, கடல்களிலும், வழிமண்டலத்திலும் வெப்பம் ஏறுகின்றது. காற்றும் நீரும் மாசடைகின்றது. மண் சத்திழக்கின்றது. பாலை வனங்கள் நீண்டுகொண்டு போகின்றன. காடுகள் அழிகின்றன.

மனிதர்களை யார் காப்பாற்றப் போகின்றார்கள்? குருட்டுத்தனமான கட்டுக்கடங்காத சந்தை விதிகளா? புதிய சுதந்திரச் சந்தையின் சர்வதேச மயமாதலா? புற்றுநோய் போல் மனிதனை அரித்து இயற்கையை அழிக்கும் இந்த முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரமா? மனித மேன்மைக்கு இவையெல்லாம் சரியான வழியாக இருக்க முடியாது. இவை வரலாற்றின் மிகக் குறுகிய பகுதிகளாகவே இருக்கும். கியூபா ஒரு மூன்றாம் உலக நாடுதான். அதன் மக்களின் சராசரி ஆயுட்காலம் 75 வயதை தாண்டியே இருக்கிறது. ஒவ்வொரு 176 பேருக்கு 1 மருத்துவர் அங்கு இருக்கின்றார். 2000 ஆண்டில் எல்லோருக்கும் மருத்துவம் என்ற உலக சுகாதார நிறுவனத்தின் திட்டத்தை 40 வருடப் பொருளாதாரத் தடைக்கும் மத்தியில் 1983-ம் ஆண்டிலேயே கியூபா முழுமையாக நிறைவேற்றியிருக்கிறது.

எங்களுடைய இந்த உதாரணத்தைக்கொண்டு உலகம் மாறும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன் என்று தனது உரையை முடித்துக் கொண்டபோது, அந்த ஒன்று கூடலில் இருந்த அத்தனை பேரையுமே அவர் தனது பேச்சால் வசீகரித்துக்கொண்டுவிட்டார்.


'இந்தியன்' திரைப்பட தயாரிப்பாளர்
A.M. ரத்தினம்
வழங்கும்
'நட்புக்காக'
இவ்வார வெளியீடு





உடன்
'கோல்மால்'

★ சிறந்த இசையமைப்பில் ஹரிகரன், சுரேஸ் பீட்டர் ஆகியோர்களுடன் பல முன்னணிப்பாடகர்கள் பாடியுள்ளார்கள்





★ S.P. Bala Hit's

★ மிகவிரைவில்
ஹரிகரன் ஹிட்ஸ் Vol -2.

Marketed & Distributed
By
Ayngaran Limited
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
E-mail: bhasky@aol.com

# இந்தோனேசிய தொடர் கலவரங்களில் 500 பேர் வரை பலி.

## வெளிநாட்டவர்கள் வெளியேற்றம்

(ஜகார்த்தா மே-15)

இந்தோனேசியாவில் நடைபெற்றுவரும், தொடர் கலவரங்களின் உச்ச கட்டமாக தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள வர்த்தக மையங்கள் தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து 500 பேர்வரை தீயில் கருகி மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அகார்ட்டோவை பதவிவிலகும்படி கோரி நடைபெற்றுவரும் தொடர் ஆர்ப்பாட்டங்களில் மாணவர்களுடன் சமூக விரோதிகளும் இணைந்து கொண்டதையடுத்து, கடந்த சில தினங்களாக அங்கு பாரிய வன்முறை வெடித்துள்ளது. ஏராளமானவர்த்தக நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டு பின் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன, ஆயிரக்கணக்கான வாகனங்களும் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளன. கலவரத்தை அடக்க இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் அவர்கள் போராட்டக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டி வருகின்றனர். எதிர்க்கட்சியினர், போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஜனாதிபதி சுகாட்டோவை பதவி விலகுமாறு கோரிக்கை விடுத்துள்ளதால், இராணுவத்துக்குள், அரசஆதரவுப்பிரிவு, எதிர்க்கட்சி ஆதரவுப் பிரிவு என இரண்டாகப் பிளவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கலகக்காரர்களை அடக்க இராணுவத்தினர் தயக்கம் காட்டி வருவதாகவும் அவர்கள் வன் செயல்கள் நடப்பதைத் தடுப்பதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஜகார்த்தாவிலுள்ள மேற்குலக இராஜதந்திரிகள் குறை கூறியுள்ளனர்.

இந்தத் தொடர் கலவரங்கள் இந்தோனேசியாவில் வாழும் சீன சிறுபான்மையினர் மீது தாக்குதல் தொடுக்குமளவுக்கு விசாலித்திருப்பதால் தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள வெளிநாட்டு பிரஜைகள் இந்தோனேசியாவை விட்டு வெளியேறி வருகின்றனர்.

இதற்கிடையில் எகிப்தில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சுகார்டோ, தனது அந்தப் பயணத்தை இடையில் நிறுத்திவிட்டு அவசர அவசரமாக நாடு திரும்பியுள்ளார்.

பெரும்பாலான இந்தோனேசியர்கள் அவர் பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் அவர் தொடர்ந்து பதவியிலிருக்கவே விரும்புவதாகச் சொல்லப்படுகின்றது.

தலைநகர் ஜகார்த்தாவில் சுகாட்டோவின் 2-வது மகனுக்குச் சொந்தமான கார்க் கொம்பனி ஒன்று கலகக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்ட போது மக்கள் வீதியில் நின்று கை தட்டி ஆரவாரம் செய்த நிகழ்வு சுகார்ட்டோவுக்கு எதிரான உணர்வு மக்கள் மத்தியில் வளர்ந்து வருவதை எடுத்துக்காட்டியிருக்கிறது.

# அரபாத்தும் - அல்பிரட்டும் லண்டனில் சந்திப்பு

(லண்டன் மே -18)

பாலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத்தும், அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அமைச்சர் மட்லின் அல்பிரட்டும், இஸ்ரேலிய பாலஸ்தீன சமாதான ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இன்று லண்டனில் சந்திக்கவுள்ளனர்.





இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நத்தன்யாகுவை நேற்று இரவு வாசிங்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடந்தபின்னர் அல்பிரட் அம்மையார் அவசர அவசரமாக அரபாத்தை சந்திக்க லண்டனுக்கு வந்துள்ளார்.

இஸ்ரேல் ஏற்கனவே பாலஸ்தீனத் தலைவர் யாசீர் அரபாத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி பாலஸ்தீனிய சபையிடம் 13% நிலத்தை கையளிக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது. இஸ்ரேல் இதை ஏற்க மறுத்த நிலையில் நேற்று இஸ்ரேலியப் பிரதமர் நெட்டன்யாகுவுடனான பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையின் போது ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே யாசீர் அரபாத்துடன் பேச்சுவார்த்தை நடத்த மட்லின் அல்பிரட் லண்டன் வந்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க யூத இராட்சியத்திற்கு எதிராக அனைத்து பாலஸ்தீனியர்களும் போர் புரிய வேண்டும் என்று ஹமாஸ் இயக்கத்தின் சிறுவன் ஷேக்- அஹமட் யாசீர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜேமன் நாட்டில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு வரும் அவர் அங்குள்ள பொது வைபவம் ஒன்றில் உரையாற்றும்போது நாங்கள் அநீதியால் பாதிக்கப்பட்ட ஒரு தேசிய இனத்தவர்கள். அமைதிக்கான பாதை அடைபட்டுப்போன நிலையில் நாங்கள் எங்கள் உரிமைகளை வென்றெடுக்கப் போராட வேண்டும். கமாஸ் இயக்கத்தவர்களான நாங்கள் கடவுளின் பேரால் சொல்கின்றோம் எங்கள் மண்ணிலிருந்து ஒரு துகளைக்கூட நாங்கள் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று கூறியுள்ளார்.

# ரஷ்யாவில் யூத ஆலயத்தின் மீது குண்டுத் தாக்குதல்

(மொஸ்கோ மே-13)

மொஸ்கோவிலுள்ள யூத ஆலயத்தின் மீது இனம் தெரியாதவர்களால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 3 பேர் காயமடைந்துள்ளனர்.

ஸ்டாலின் ஆட்சிக் காலத்தில் சேதமாக்கப்பட்ட பின்பு 1991-ம் ஆண்டு மறு நிர்மாணம் செய்யப்பட்ட இவ்வாலயம் 1993-ம் ஆண்டு உரிமை கோராத குழு ஒன்றால் தீக்கிரையாக்கப்பட்டது.

பின்பு மீண்டும் அது புதுப்பிக்கப்பட்ட வழிபாட்டுக்கு திறந்து விடப்பட்ட சில நாட்களிலேயே குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவம் ரஷ்யாவில் பாசிச ஹிஸ்தீரியா பரவுவதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளதென்று யூத சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# சைபீரிய கவர்னர் தேர்தலில் அலக்சாந்தர் லெபெட் வெற்றி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் ஆளுமைக்குட்பட்ட சைபீரிய மாநிலத்தின் கவர்னர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் முன்னாள் ரஷ்ய தேசிய பாதுகாப்புத் தளபதி அலெக்சாந்தர் லெபெட் வெற்றியீட்டியுள்ளார்.

இவருக்கு 57% வாக்குகள் கிடைத்துள்ளதென்றும், இது 2000-ம் ஆண்டில் நடைபெறவுள்ள ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கு லெபெட்டுக்கு வாய்ப்பாக அமையும் என்றும் அரசியல் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# மவ்ரிடானிய இராணுவ விமானம் விபத்துக்குள்ளாகியது: 39 பேர் பலி

(மே-14)

மேற்குஆபிரிக்க நாடான மவ்ரிடானியாவுக்கு சொந்தமான இராணுவ விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 39 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த T7 ரக விமானம் 42 பேருடன் மாலி நாட்டின் எல்லை அருகேயுள்ள நெமா என்ற நகர் மீது பறந்து கொண்டிருந்த போது விபத்துக்குள்ளாகியதாக மவ்ரிடானிய விமானப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிர் தப்பிய மூவரில் இருவர் இராணுவத்தினர் என்றும், ஒருவர் சாதாரண பிரஜை என்றும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

1994-ம் ஆண்டு ஜுலை மாதம் மவ்ரிடானியாவில் இடம்பெற்ற மோசமான விமான விபத்தில் 80 பேர் கொல்லப்பட்டிருந்தனர். அதற்குப்பின் நடைபெற்ற மோசமான விமான விபத்து இதுவே எனச் சொல்லப்படுகிறது.

# மவுண்ட் பேட்டன் பிரபுவைக் கொல்ல IRA க்கு சிரியா பணம் கொடுத்தது?

(லண்டன் மே-15)

1979-ல் மவுண்ட் பேட்டன் பிரபுவைக் கொல்வதற்கு சிரியா IRA இயக்கத்துக்கு பணம் கொடுத்ததாக அந்த இயக்கத்தின் முன்னாள் உயர்மட்ட உறுப்பினரான Sean O'Vallaghan என்பவர் தெரிவித்துள்ளார்.

ஏன் மவுண்பேட்டன் பிரபுவும், அவரது 14 வயதுப் பேரனும் அவர்களது உதவியாளர் ஒருவரும் 1979-ம் ஆண்டு அயர்லாந்து கடற்கரையில் படகொன்றில் பயணம் செய்ய முற்பட்ட போது படகில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததால் கொல்லப்பட்டனர். இந்தக் குண்டு வெடிப்புக்கு IRA இயக்கமே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1980-ம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் IRA இயக்கத்துக்கு மவுண்ட்பேட்டன் பிரபுவைக் கொலை செய்ததற்காக 3.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை சிரியா வழங்கியதாக கலகன் இது தொடர்பாக தற்போது எழுதியுள்ள நூல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த கொலையைச் செய்வதற்கு லிபிய உளவு நிறுவனமும் சோவியத் யூனியனின் KGP உளவு நிறுவனமும் தகவல்களைத் தந்துதவியதாகவும் கலகன் தெரிவித்துள்ளார்.

# சொனி நிறுவனத்தின் புதிய தொலைக்காட்சிப் பெட்டியில் தொழில்நுட்பத் தவறு:

## சரிசெய்வதற்கு உடன் தொடர்புகொள்ளவும்

சொனி (Sony) நிறுவனத்தின் பிரெஞ்சுக் கிளையால் சந்தைக்கு விடப்பட்ட KV-28 F D 1 E என்ற வகைத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் சிறிய தொழில் நுட்பத் தவறு ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகைத் தொலைக்காட்சிப் பெட்டியின் பின்புற மூடியின் உட்புறத்தில ஏற்பட்டுள்ள இந்தத் தொழில் நுட்பத் தவறு 30,0000 இலிருந்து 3005490 வரையிலான தொடர் இலக்கங்களைக் கொண்ட தொலைக்காட்சிப் பெட்டிகளில் இருப்பதாக Sony நிறுவனத்தின் பிரெஞ்சு பிரிவு அறிவித்துள்ளது.

இந்தத் தவறு சிறிய தவறுதான் எனினும் திருத்தப்பட வேண்டிய தவறாக இருப்பதால், இத்தகைய தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்வனவு செய்தவர்கள் உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அந்த நிறுவனம் பொது வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இந்தத் தவறைத் திருத்துவதற்கு சிறிது நேரம் மட்டுமே எடுக்கும் என்றும் நீங்கள் விரும்பினால் அதை உங்கள் வீட்டில் வைத்துக்கூட சொனியால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர்களால் சரி செய்து தரப்படுமென்றும், இது முழுக்க முழுக்க இலவசமாகச் செய்து தரப்படும் என்றும், அந் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தவறுள்ள Sony KV-28 F D 1 E என்ற வகைத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருப்பவர்களின் வசதிக்காக 01 55 46 00 00 என்ற விசேட தொலைபேசி இணைப்பு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் 01 40 87 34 40 என்ற இலக்கத்துக்கு தொலை நகல் அனுப்பலாம் என்றும் அவ்வாறு நீங்கள் தொடர்பு கொண்ட 7 நாட்களுக்குள் உங்களுக்கு பதில் கிடைக்கும் என்றும், அதுவரை அந்த தொலைக்காட்சி பெட்டியின் மின்சார இணைப்பை துண்டித்து விடும் படியும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொலைநகல் அனுப்புபவர்கள் பின்வரும் படிவத்தை நிரப்பி அனுப்ப வேண்டும்.

À l'attention de:

**SONY FRANCE** - Service Consommateurs 15, Rue Floréal, 75831 Paris Cedex 17

**Votre nom** (en Capitales d'imprimerie, S.V.P): ..............................

Rue: .............................. Code Postal: ..........................

Localité: .............................. N° de téléphone pendant la journée: ..........................

N° de série du téléviseur: .............................. Nom du revendeur: ..........................

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்

## கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் சத்துணவு நிதிக்காக

ஞானம் - சக்தி - குமார்ஸ் - வூட்லன்ஸ் ஆதரவில்

ஈழமுரசு நடாத்தும்


# இசைமுரசு 98

### இசை நிகழ்ச்சி

காலம்: 24.05.1998 ஞாயிறு மாலை 5.00 மணி

**AMORC**

199bis, Rue St. Martin, 75003 Paris - (M°: Rambuteau / Etienne Marcel)



ஈழநிலா இசையில் சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

30 இற்கும் மேற்பட்ட புதிய பாடகர்களின் அறிமுகம்

**நகைச்சுவை விருந்து**

லூஸ்மாஸ்டர்

ஐசக் இன்பராசா

– கேதீஸ்வரன் குழுவினர்

விடுதலைப் புலிகள் ஜேர்மன் பணியக கலை பண்பாட்டுக் கழகத்தினரின்

**நாட்டிய நிகழ்ச்சி**

நிகழ்ச்சியின் நடுவர்களாக

ஈழத்தின் பிரபல பாடகர்

**திரு. பொன். சுந்தரலிங்கம்** (கனடா)

ஜேர்மன் கலைபண்பாட்டுக் கழக கலைஞர்

**திரு. கண்ணன்** ஆகியோர்.



**30.05.98 சனிக்கிழமை**

மாலை 6.00 மணி, 9.00 மணி

ESPACE CINEMA - Aubervilliers Quatre Chemins. M°: Quatre Chemins

**31.05.98 ஞாயிற்றுக்கிழமை**

பிற்பகல் 3.00 மணி, 6.00 மணி, 9.00 மணி

LE TRIANON

80, Bld Rochechouart, 75018 Paris. M°: Anvers

## நேர்த்தியான இயக்கம் பிரமிப்பூட்டும் படப்பிடிப்பு





ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# அரசாங்கம் வைத்துள்ள அரசியல் தீர்வு ஏற்புடையதாக இல்லை

## இராணுவத் தளபதி ரோஹன் தலுவத்தை குற்றச்சாட்டு

*சிறீலங்கா இராணுவத் தளபதி பத்திரிகை ஒன்றிற்கு அளித்த செவ்வியிலிருந்து....*

**கேள்வி:**

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை கடந்த வருடம் மே மாதம் 13ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் முடிவடைந்துள்ளது. கடந்த காலத்தை திரும்பிப் பார்த்து இதுவரை நீங்கள் அடைந்துள்ள வெற்றி என்னவென்பதை கூறமுடியுமா?

**பதில்:**

எமது நடவடிக்கையின் பிரதான நோக்கம் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான தரைப்பாதை ஒன்றை திறப்பதே. இன்றுவரை அதில் அரைவாசி சென்றுள்ளோம். மிகுதி தூரத்தையும் எப்படியாவது சென்றடையவே வேண்டும்.

இதுவரையான பயணத்தில் எமக்கு வெற்றியும் தோல்வியும் மாறி மாறி ஏற்பட்டுள்ளது. ஆனால், நாம் எக்காரணம் கொண்டும் பின்வாங்கத் தயார் இல்லை. எமது எதிரி வீரர்களான புலிகளின் சகல தடைகளையும் உடைத்துக்கொண்டு முன்னேறுவோம்.

**கேள்வி:**

ஜெனரல் ரத்வத்தை பல தடவைகள் நாள் குறித்து கிளிநொச்சியை பிடித்து நடவடிக்கையை முடித்துவிடுவதாகக் கூறினார். ஆனால், எதுவுமே சாத்தியமாகவில்லையே?

**பதில்:**

இந்த யுத்தத்தில் பல இடைஞ்சல்களையும், சிக்கல்களையும் சந்தித்துள்ளோம். எமக்கு நவீன ஆயுதங்கள், மற்றும் ஆட்பலம் போன்றவை போதியதாக இல்லை. இன்னும் 20,000 படையினர் இருந்தால் கிளிநொச்சியை எப்போதோ பிடித்து ஜெயசிக்குறுயை முடித்திருப்போம். இதுவரை 15,000 பேர் இராணுவத்திலிருந்து ஓடிவிட்டார்கள். அவர்களை மீண்டும் வந்து இராணுவத்தில் இணைந்து எமக்கு வெற்றியை சீக்கிரம் பெற உதவுமாறு கேட்கிறேன்.

**கேள்வி:**

இராணுவத்தை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் இணைந்துகொள்வது தமது சுய விருப்பத்தில் அல்ல. பயத்தினால் மட்டுமே. அப்படி அவர்களை இணைத்து யுத்தம் செய்யும் போது அவர்களிடமிருந்து உபயோகமான சேவையை எதிர்பார்க்க முடியுமா? நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுமே?

**பதில்:**

நிச்சயமாக அப்படியான ஒரு ஒத்துழையாமை இருக்கத்தான் செய்யும். இராணுவத்தில் சேரும் ஒருவர் குறிப்பிட்ட காலம் கடமையாற்ற வேண்டும். இது கட்டாயம். இதை மீறுபவர்களைத்தான் தண்டித்தோம். எமக்கு இதைத்த தவிர வேறு என்ன செய்ய முடியும்.



**கேள்வி:**

விடுதலைப் புலிகள் அமைப்பின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை என்னவாயிருக்கும்?

**பதில்:**

இப்போதைக்கு 7500 பேர் வரை இருக்கின்றனர்.

**கேள்வி:**

இராணுவ பேச்சாளர் சரத் முனசிங்கவின் தினசரி அறிவித்தலில் தினசரி 100 தொடக்கம் 200 வரையான புலிகள் கொல்லப்படுகின்றனர். அதைவிட இரண்டு மடங்கு பேர்கள் காயமடைகின்றனர். இந்த வகையில் 1980 முதல் இன்று வரை பத்திரிகையில் புலிகளின் இழப்புக்களைக் கணக்கெடுத்தால் இப்போது புலிகள் மட்டுமல்ல தமிழ் மக்களில் ஒருவர் கூட எஞ்சியிருக்க முடியாது. ஆயினும் புலிகள் இருக்கின்றனர். ஏன் அப்படி?

**பதில்:**

(சிரித்துக்கொண்டே) உண்மையில் இராணுவத் தாக்குதல்களில் புலிகள் கொல்லப்படுவதும் காயமடைவதும் உண்மை. ஆனால் சாதாரண பொதுமகனுக்கு இவ்வகையான அறிவித்தல்கள் பற்றிய விபரம் புரியும். பிரிகேடியர் சரத் முனசிங்கவின் அறிவித்தல்களில் முரண்பாடுகள் இருப்பது உண்மைதான்.

**கேள்வி:**

உங்கள் சேவைக்காலத்தை மேலும் ஒரு வருடம் நீடித்துள்ளார்களே. ஏன்?

**பதில்:**

அது எனக்குத் தெரியாது. அரசினையே கேளுங்கள். ஆனால், நிச்சயமாக ஜெயசிக்குறுய் நடவடிக்கை நானில்லாமல் மேற்கொள்ள முடியாது. இது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதில் வெற்றிபெறுவதற்காகவே எனது சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:**

இராணுவத்தில் வேறு சிலருக்கு பதவி உயர்வுகள் தாமதப்படுகின்றன. ஏன் சரத் முனசிங்கவின் பதவி உயர்வுகூட தாமதமாகியுள்ளது. ஆகையால் சிலருக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது.

**பதில்:**

உண்மைதான். ஆனால், சரத் முனசிங்காவிற்கான பதவி உயர்வு தாமதத்திற்கு அவர்தான் காரணம். கிழக்கில் அவர் கடமையாற்றிய காலத்தில், அவரது நடவடிக்கைகள் காரணமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகையால் அவருக்கான பதவி உயர்வு ஆறு மாதங்கள் பின்போடப்பட்டது.

**கேள்வி:**

இங்குள்ள இனப்பிரச்சினையை இராணுவ ரீதியாகத் தீர்க்க முடியுமா?

**பதில்:**

முடியாது. இதற்கு அரசியல் தீர்வுதான் சரியானது. ஆனால், இராணுவ ரீதியாக புலிகளை நாம் முதலில் தோற்கடிக்க வேண்டும். அதன்பின் தான் அரசியல் தீர்வினை முன்வைக்க முடியும். ஆனால், அரசு இன்று முன்வைத்துள்ள தீர்வு ஏற்புடையதாக இல்லை.

**கேள்வி:**

ஏன் அப்படிக் கூறுகின்றீர்கள்?

**பதில்:**

அரசின் தீர்வானது மக்கள் மத்தியிலும் மற்றும் பல சமூக அமைப்புக்கள் கூட எதிர்க்கின்றதே? ஆகையால் மக்கள் ஏற்கின்ற வகையில் தீர்வு மாற்றப்பட வேண்டும்.




நன்றி: தினக்குரல்

## வெற்றி நிச்சயம்

போர்முனைகளில் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள முடியாத சிறீலங்கா அரசாங்கம் தமிழர் தாயகத்துக்குள் ஐந்தாம் படைப்போர் ஒன்றைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் - தமிழினத்தை சீரழித்து தமிழீழ தேசியத்தை சிதைத்து அதன் மூலம் விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் என்று எண்ணுகின்றது.

ஐந்தாம் படைப்போர் என்று சொல்லுகின்றபோது மேலோட்டமான அர்த்தத்தில் ஒரு இனத்துக்குள் இருக்கின்ற ஊசலாட்டமான, சலுகைகளுக்கும், பதவிகளுக்கும் விலை போகக்கூடிய நபர்களை விலைக்குவாங்கி அவர்களை வைத்து நடத்துகின்ற போர் என்றே கருதப்படுகின்றது.

ஆனால் உண்மையில் அதன் விசாலமான அர்த்தத்தில் –ஒரு இனத்துக்குள் இருக்கக்கூடிய, துணை முரண்பாடுகளை, அல்லது அடிப்படை முரண்பாட்டை தூண்டி விடுவதன் மூலம் பிரதான முரண்பாட்டின் கூர்மைத் தன்மையை திசை திருப்பி விடுவது என்கிற முக்கியமான அரசியல் தந்திரோபாயம் இதில் அடங்கியிருக்கிறது.

அதாவது ஈழத் தமிழினத்தைப் பொறுத்தவரை இன்று அதன் பிரதான முரண்பாடாக இருப்பது சிறீலங்கா அரசுக்கும் அதற்கும் இடையிலான தேசிய இன முரண்பாடாகும், ஆனால் அதே நேரத்தில் அதே தமிழ் சமூகத்துக்குள் இருக்கும் சாதிய மத பிரதேச முரண்பாடுகள் துணை முரண்பாடுகளாகவும், வர்க்க முரண்பாடு அடிப்படை முரண்பாடாகவும் இருக்கிறது.

சிறீலங்கா அரசு தனக்கு எதிராக மிகவும் கூர்மையான வீச்சுடனும், அதே நேரத்தில் அந்தக் கூர்மையான வீச்சின் காரணமாக உறுதியாக நிலைகொண்டுவிட்ட தமிழீழ தேசியத்தையும், தமிழீழ தேசத்தையும் சிதைத்து சீரழிப்பதற்காக தமிழினத்துக்குள் இருக்கும் சாதிய பிரதேச மத முரண்பாடுகளை தூண்டிவிட்டு வருகின்றது.

குறிப்பாக, சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட குடா நாட்டுப் பகுதிகளிலேதான் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரலாற்றுக் காலம் தொட்டே சாதி ரீதியாக பிரிந்து நின்று ஒருவரை ஒருவர் அடித்துக்கொள்ளும் வழக்கமும், வேலிக்கதியால் சண்டைக்காக நீதிமன்றம் வரை சென்று கைப்பொருளை இழக்கும் வழக்கமும் யாழ்ப்பாண மக்களிடையே இருந்து வந்தது.

ஆயினும் எமது தேசிய விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து தமிழீழ தேசிய கட்டமைப்பு அங்கே உருவாக்கப்பட்டபோது 'நாம் தமிழீழ தேசத்தவர்கள், எமது பொது எதிரிக்கெதிராக போராடுவதற்கு நாம் எமக்குள் இருக்கும் பேறுபாடுகள் எல்லாவற்றையும் தூக்கி எறிய வேண்டும்' என்ற தேசிய உணர்வே மேலோங்கியிருந்தது.

சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் குடாநாட்டை ஆக்கிரமித்த சிறீலங்கா அரசு தற்போது இந்த தேசிய உணர்வுக் கட்டமைப்பை சிதைப்பதற்காக மக்களிடையே சாதிய பிரதேச (ஊர்) முரண்பாடுகளை தூண்டிவிடுவதற்கு முயன்று வருகின்றது.


இதற்காக – அதாவது யாழ் குடாநாட்டு மக்களின் தமிழீழ தேசிய உணர்வை சிதைப்பதற்காக நகரத்துக்கு நகரம், கிராமத்துக்கு கிராமம் மதுச் சாலைகளையும், மினி சினிமாக்களையும் நிறுவி, கசிப்பு உற்பத்திக்கும், பாலியல் வக்கிரப்படங்கள் (Blue Flim) திரையிடப்படுவதற்கும் ஊக்கமளித்திருக்கிறது. இதைவிட கொழும்பிலிருந்து விலை மாதர்களை அழைத்து வந்து யாழ் குடாவின் பிரதான நகரங்களில், விபச்சாரத் தொழிலை நடத்தவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

அதாவது–இராணுவ நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் குடாநாட்டு மக்களின் மன உணர்வுகளை மதுபோதைக்கும், பாலியல் வக்கிரத் தன்மைக்கும் அடிமையாகும் விதத்தில் திசை திருப்பி விடுவதன் மூலம் அங்குள்ள சாதிய பிரதேச முரண்பாடுகளைத் தூண்டிவிட அரசாங்கம் முனைந்து வருகின்றது.

உண்மையில் இவ்வாறான மக்களின் உணர்வுகளை அவர்களின் பலவீனங்களை வைத்துக்கொண்டே திசை திருப்பவும் ஐந்தாம் படைப் போர்கள் சீன, வியட்னாம் யுத்த முனைகளில் ஏற்கனவே அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

சீன மக்களிடையே அபின் பாவனையும், வியட்நாம் மக்களிடையே கொக்கையின் மற்றும் பாலியல் சீரழிவுக் கலாச்சாரப் போதையும் ஆக்கிரமிப்பாளர்களால் விதைக்கப்பட்டபோதும் அங்கெல்லாம் நடந்த விட்டுக்கொடுக்காத விடுதலைப் போராட்டம் எதிரிகளின் நோக்கத்தை தவிடு பொடியாக்கியிருக்கிறது.

நமதுநாட்டிலும் நமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் நடைபெறும் சமரசத்திற்கோ விட்டுக்கொடுப்புக்கோ இடமில்லாத வீரம் செறிந்த எமது தேசிய விடுதலைப் போராட்டம் ஜெய்சிக்குறூய் போர்முனையை மட்டுமல்ல, ஐந்தாம் படைப் போர் முனையை நிச்சயம் தகர்த்தெறியும்.




# இளங்கன்று

அ. பாலமனோகரன்

அது ஒரு அழகிய வெள்ளைப் பசுக்கன்று! ஈரப் பசுமையுடன் பளபளக்கும் கருவிழிகள்! மெத்தென்ற வெண்மையான உடல். வயிறு நிறையப் பசுப்பால் குடித்த களிப்பில் மனம் போன போக்கெல்லாம் துள்ளி விளையாடியது அது. சதா களிப்பும் வெருட்சியும் சுடர்விட்ட கண்களைக்கொண்ட அந்தக் கன்று ஒரு பயமறியா இளங்கன்று.

அந்தக் கன்று தன் தாயைவிட்டு வெகுதூரம் செல்வதில்லை. பச்சைப் பசேல் என்று துளிர்த்திருக்கும் பசும்புல்லை மணந்துபார்த்து விளையாட்டாக இரண்டுவாய் கடிக்கும். திடீரென வாலை உயர்த்திப் பிடித்துக்கொண்டு துள்ளியோடி வேட்டம் பாயும். பின்பு அதே வேகத்தில் தாயை நோக்கி ஓடிவந்து அதன் பருத்த மடியில் முட்டிச் செல்லமாக இரண்டுவாய் பால் குடிக்கும். மீண்டும் விளையாடும். தாய்ப் பசுவுக்கோ தன் கன்றைப் பார்க்கையில் உள்ளூர உவகை பொங்கும். இருப்பினும் அதை வெளிக் காட்டாதவாறு, மண்டி வளர்ந்து கிடக்கும் பசும்புல்லை மேய்ந்தவாறே இருக்கும்.

சாராயச் சிவலிங்கனுடைய பட்டப் பெயரே அவனுடைய தொழிலைச் சொல்லும். அவனுக்கு ஒரேயொரு மகள். அவள் பருவமடைந்து விட்டாள். அவளுடைய தாய்க்கோ தனது கணவன் இந்த வியாபாரத்தில் முதலில் ஈடுபட்டபோது கொஞ்சமேனும் இஷ்டமில்லை. சாராயம் குடிப்பதற்கெனப் பலரகமான மனிதர்கள் அங்கு அடிக்கடி எல்லா வேளைகளிலும் வந்துபோவது ஆரம்பத்தில் அவளுக்கு என்னவோ போலிருந்தது. எனினும் வியாபாரம் சூடுபிடித்து நிலவரமானபோது அவளுடைய மனமும் மாறிவிட்டது.

ஏனெனில் இவ் வியாபாரத்தில் அவர்கள் மிக இலகுவாகப் பெருமளவு பணம் சம்பாதிக்க முடிந்தது. பணம் வரும் வழியை அவள் விரும்பாவிடினும் அதனால் வரும் பணத்தை அவளால் வெறுக்க முடியவில்லை. நாளாக நாளாக, அவளும் ஐம்பது சதத்திற்கும், ஒரு ரூபாவிற்கும் அளந்து கொடுப்பதில் தேர்ச்சி பெற்றுவிட்டாள். சிவலிங்கனுக்கு வயலிலும் தோட்டத்திலும் வியர்வை சிந்தி உழைத்து அடையும் ஊதியத்தைவிட இந்த வகையில் வரும் வருமானம் அதிகமாகவிருந்தது. தேன் எடுப்பவன் விரல்களில் வடியும் தேனைச் சுவைக்க விழைவது விந்தையல்லவே! சிவலிங்கனும் வியாபாரத்தை மிகவும் உசாராகவும், உற்சாகமாகவும் கவனித்து வந்தான். வாடிக்கை அதிகரித்தது, வருமானமும் வளர்ந்தது.

இளங்கன்று தன்னிச்சைப்படி விளையாடிவரும் இந் நாட்களில் தாய்ப்பசு பசும்புல் உள்ள இடங்களை நாடித் திரிந்தது. அக் காட்டோரத்தில் செழுமை மிக்க பசும்புல் அளவுகணக்கின்றிக் காடாய் வளர்ந்து கிடந்தது. காட்டில் கொடிய விலங்குகள் உண்டென்பதைப் பசு இயற்கையாகவே அறிந்திருப்பினும் அங்கு மட்டிங்கிடந்த பசும்புல்லின் கவர்ச்சி அதனைச் சுண்டியிழுத்தது. எதனையும் சட்டை செய்யாது அங்கு வளர்ந்திருக்கும் புல்லை உண்டு களிப்பதிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது அந்த தாய்ப்பசு! இந்த மகிழ்ச்சியில் அது தன் கன்றின் போக்கைக் கவனிக்கத் தவறிவிட்டது.

சில நாட்களாகவே காட்டுக்கு மிகவும் அருகில் சென்று விளையாடுவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தது அந்த இளங்கன்று.

அன்று அங்கே ஒரு புதரின் பின்னே ஓர் அழகிய சிறுத்தை இந்தப் பசுக்கன்றையே மிகவும் ஆவலுடன் பார்த்துக்கொண்டு நின்றது. முன்னொருபோதும் அவ்வளவு அழகிய மிருகத்தைக் கண்டிராத அந்த இளங் கன்றுக்கு அச் சிறுத்தையின் செவ்விழிகள் மிகவும் கவர்ச்சி நிறைந்வையாகத் தோன்றின.

பொன் மயமான பட்டுடலில் கரும் புள்ளிகள் துலங்க, அச் சிறுத்தை நின்ற அழகை இளங்கன்று மிகவும் ரசித்தது. சிறுத்தையோ கன்றை நோக்கி 'எனக்குக் கிட்டே வந்து கொஞ்சமேனும் விளையாட மாட்டாயா?'என்று அன்புடன் கேட்பதுபோலிருந்தது. இளங்கன்றுக்குச் சிறுத்தையிடம் போக, விளையாட மனமிருந்தபோதும் ஏதோ ஒருவகை நாணமும் வெருட்சியும் வந்து தடுக்கவே அது தாயிடம் துள்ளிக்கொண்டு ஓடி வந்துவிட்டது.

அது தன் தாயிடம் அந்த அழகிய நண்பனைப்பற்றி எதுவுமே சொல்லவில்லை. ஆனால், அடுத்தநாள் அந்த நண்பனுடன் விளையாட வேண்டுமென எண்ணிக் கொண்டது. அதன் தாய் எதையுமே கவனிக்கவில்லை, பசும்புல்லைத்தவிர.


சாராயச் சிவலிங்கன் வீட்டிற்கு இப்போ அடிக்கடி ஒரு வாலிபன் இருட்டியபின் வந்து போகத் தொடங்கியிருந்தான். அவன் அந்தக் கிராமத்துக்குப் புதியவன். வீதிகளைச் செப்பனிடுவதை மேற்பார்வை செய்யும் வேலை அவனுக்கு. ஒவ்வொரு நாளும் இருட்டியதும் சிவலிங்கன் வீட்டிற்கு வந்து அமைதியாகவிருந்து குடிப்பான். முதல்நாள் மூன்று ரூபாவுக்குக் குடித்துவிட்டு, ஒரு பத்துரூபா நோட்டைக் கொடுத்து 'இருக்கட்டும்' என்று சொல்லிப் போய்விட்டான். நாட்பட நாட்பட அவன் சிவலிங்கன் வீட்டிலிருந்து புறப்பட்டுத் தனது இருப்பிடத்திற்குச் செல்ல மிக நேரமாகும்.

இப்போதெல்லாம் அங்கு வருகையில் அவன் முட்டை வாங்கி வருவான். சிவலிங்கன் வீட்டில் அவற்றைக் கொடுத்து அவிப்பித்து, சாராயம் குடிக்கையில் சுவைக்காகச் சாப்பிடுவான். சிவலிங்கனுக்கும் அவன் மனைவிக்கும் இந்தப் புதியவன்மேல் அபார மதிப்பு! கடன் என்ற சொல்லே கிடையாது! அமைதியாகத் திண்ணையில் அமர்ந்தவாறே சிகரெட் புகைசூழ, சாராயப் போத்தலுடன் இருப்பான்.

அவனுடைய சொந்த ஊர் குருநாகலாம். மனைவி எப்போதோ அவனைவிட்டுப் பிரிந்துவிட்டாளாம். மேற்கொண்டு விபரம் எதுவும் தெரியாது. அவன் அவ்வளவு அமைதி! சிவலிங்கனின் மனைவி சில சமயங்களில் மிகவும் சோம்பல் வயப்பட்டதனால் அவளுடைய செல்லமகளே இவன் கொடுக்கும் முட்டைகளை அவித்துக் கொடுப்பாள்.

அடுத்தநாள் மாலை நேரம். ஆவலுடன் காட்டோரத்திற்கு ஓடிச்சென்ற இளங்கன்றுக்கு அங்கே ஏமாற்றம் காத்திருக்கவில்லை. அந்த அழகிய சிறுத்தை இன்னும் அங்கே நின்றிருந்தது. நேற்றுக் கண்டதை விட இன்று இன்னும் சற்றுத் தொலைவில், காட்டினுள் நின்று வாவென்று அழைத்தது.

அந்த அழகிய நண்பனுடன் பழகும் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் சிறுத்தையை நெருங்கிச் சென்றது இளங்கன்று! ஓ! எத்தனை அழகு! எவ்வளவு மென்மை! என்ன அமைதி! என்று வியந்தது இளங்கன்று. இளங்கன்றை மிகவும் அருகில் கண்ட சிறுத்தைக்கு நாவில் நீர் ஊறியது. பலகாலமாக இரையின்றிக் கிடந்த அதன் வயிற்றில், அமிலச்சாறுகள் சுரந்து கசிந்தன. பசிவெறி நிரம்பிய விழிகளுடன் இளங்கன்றை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தது சிறுத்தை.



அந்தக் கிராமத்தில் வீதிகள் செப்பனிடும் வேலைகள் கிட்டத்தட்ட முடியும் தறுவாயை நெருங்கிவிட்டன. அந்த வாலிபன் இப்போதெல்லாம் சிலவேளைகளில் சாராயச் சிவலிங்கன் வீட்டிலேயே இரவு தங்கிவிடுவதும் உண்டு.

அந்த இளங்கன்றும் அதன் தாயும் காட்டின் ஓரமாக மேய்ந்து வருவது அந்தக் கிராமத்தில் பல மனிதருக்குத்தெரியும். 'நீ இருந்துபார், ஒரு நாளைக்கு அந்தப் பசுக்கண்டை சிறுத்தை அடிக்கத்தான் போகுது!' எனத் தீர்க்க தரிசனம் கூறுவார்கள். அந்தக் கன்றின்மேல் அவர்களுக்கெல்லாம் அனுதாபம் உண்டென்றல்ல! அப்படிச் சொல்லிக்கொள்வதில் அவர்களுக்கு ஒருவகை இன்பம்! தாம் சொல்லியபடி அந்தக் கன்று இறந்துவிட்டால், தாம் கூறியது பலித்துவிட்டதே என மகிழ்வார்களேயொழிய இது இறந்ததற்கான மனம் வருந்துவார்கள் எனக் கூறமுடியாது. எது எப்படியிருப்பினும் அவர்கள் நடந்துவரும் விஷயங்களையெல்லாம் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்தனர்.

சிறுத்தை நெருங்கி வந்ததும் இளங்கன்றுக்கு ஆனந்தம் தலைகால் புரியாமல் வந்துவிட்டது. அழகிய குஞ்சம்போன்ற தன் வாலைத் தூக்கிக்கொண்டு கடைவிழியால் தன் புதிய தோழனைப் பார்த்தவாறே துள்ளி விளையாடியது. பலநாட் பசியைச் சிறுத்தையினால் பொறுக்கவே முடியவில்லை. அகோரப்பசி கொண்ட சிறுத்தையின் வால் மட்டும் மிகவும் அமைதியாக, அழகாக, அங்குமிங்கும் அசைந்தாடியது.

அதைக் கண்ட இளங்கன்றுக்கு ஒரே குஷி சிறுத்தையை நோக்கி அது ஆவல்மீற ஓடிவரவும், சிறுத்தை தன் பின்னங்கால்களை ஊன்றி எகிறிப் பாய்ந்து இளங்கன்றின்மேல் இறங்கவும் சரியாகவிருந்தது. அப்போதும் அந்த இளங்கன்று பயப்படவில்லை. இதுவும் ஒருவகை விளையாட்டென்று எண்ணி மகிழ்ந்தது.

சிறுத்தையின் மஞ்சள் நிறப் பற்கள் இளங்கன்றின் முகத்தில் மிகவும் மென்மையாக ஆனால் ஆழமாக இறங்கின. இதுவரை என்றுமே வெளியே தெரியாத கூரிய வளைந்த நகங்கள் அந்தப் பஞ்சுப் பாதங்களினின்றும் வெளிப்பட்டு இளங்கன்றின் மார்பை மிகவும் இலாவகமாப் பிளந்தன. இளங்கன்று அலறக்கூட அவகாசமின்றி குற்றுயிராக நிலத்தில் விழுந்து துடித்தது.

இளங்கன்றின் மார்புக் கூட்டிற்குள் தன் நாவை விட்டு அங்கு கொப்பளித்த சுடு குருதியைச் சுவைத்த சிறுத்தை, சப்புக் கொட்டிக்கொண்டே இளங் கன்றின் ஈரல் குலையையும் மென்மையான பாகங்களையும் கண்களை மூடி ரசித்துச் சாப்பிட்டது. அதன் வெம்பசி தற்காலிகமாகத் தணிந்துவிட்டது.

மல்லாக்காகக் கிடந்த இளங் கன்றின் உடலை முதுகின்மேல் போட்டுச் சுமந்துசென்று ஒரு பற்றை மறைவில் போட்டுச் சருகுகளால் மூடி மறைத்துவிட்டு சிறுத்தை காட்டுக்குள் சென்றுவிட்டது. எப்போ கடும் பசி எடுக்கும் மிகுதியையும் உண்ணலாம் என்ற ஒரே நினைப்புடன் இரவுக்காக அது காத்துக்கொண்டுகிடந்தது.

வெகு நேரமாகக் கன்றைக் காணாத பசு ஏங்கியழுதது. பசும்புல்லை அது இப்போ அறவே கவனிக்கவில்லை. அந்தக் கிராமவாசிகளில் சிலர் அவ்வழியாகப் போகையில் கன்றிற்காக அழுதரற்றும் தாயைக் கண்டனர். அவர்களுடைய விழிகளில் ஒருவகை மகிழ்ச்சி மலர்ந்தது. ஒருவர் மற்றவரைப் பார்த்து திருப்தியுடன் தலையை அசைத்துக்கொண்டனர். 'எப்பிடி! நான் சொன்னன்! எனக்கு அப்பவே தெரியும் இதின்ரை கண்டை சிறுத்தை பிடித்துப்போடுமென்று!' என அவர்களில் ஒருவர் பெருமையுடன் கூறினார்.

'வாருங்காணும் போய்ப் பார்ப்பம்' என்றார் மற்றவர். இவர்களுக்கு பசுவின் சொந்தக்காரனை நன்கு தெரியும். அவன் இவர்களது இனத்தவரும்கூட. ஆனால் இக் காட்டோரத்தில் இச் சிறுத்தை உலாவுவது இவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தும் அதையிட்டு அவர்கள் அவனை எச்சரிக்கவில்லை.

'இதோ இஞ்சைதான் காணும் சிறுத்தை கண்டைப் பிடித்திருக்கிது'! என்றவாறே அவர்கள் அந்த இடத்திற்குச் சென்றனர். அந்தச் சிறுத்தை இளங்கன்றை எப்பிடிப் பிடித்திருக்கும். எப்படி அதன் இளைய உடலை கடித்துக் குதறிச் சுவைத்திருக்கும் என்பவற்றை எல்லாம் தம் கற்பனைக்கும் அனுபவத்திற்கும் எட்டிய அளவிற்கு ரசித்துப் பேசிக்கொண்டனர்.

ஆனால் அந்த இளங்கன்றின் உடல் கிடந்த இடத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இருப்பினும் அது அவர்களுக்குப் பெரியதாகப் படவில்லை. எப்போ கிராமத்துக்குச் சென்று இதையிட்டு ஊராரிடம் கூறி வம்பளக்கலாம் என அவர்களுடைய நாவுகள் தினவெடுத்தன. தங்களுக்குத்தான் இச் சம்பவம் முதலில் தெரியவந்ததையிட்டு அவர்களுக்கோ பெரிய மகிழ்ச்சி!

தாய்ப்பசு அழுது கதறிக்கொண்டே பொழுது சாயும் மட்டும் அந்தக் காட்டோரத்திலே அலைந்தது. இரவு நெருங்க கொடிய மிருகங்களைப்பற்றி அதன் மனதிலே ஏற்பட்ட பயம் கன்றுக்காக அது கொண்டிருந்த பாசத்தையும் மிஞ்சிவிட்டது. கன்றை நினைத்து ஏங்கியவாறே தள்ளாடித் தள்ளாடித் தன் கிராமத்தை அடைந்தது.

இறந்துபோன இளங்கன்றின் உடல் இருட்டிலே கிடந்தது. வெண்மையான அந்த உடல் செங்குருதி போன்று கறைபட்டுக் கிடந்தது. ஈக்கள் பெருந்தொகையாக குருதி படிந்த இடங்களில் மொய்த்துச் சுவைத்தன. சாரி சாரியாக வந்த கொள்ளி எறும்புகள் இளங்கன்றின் கண்களையும், தசைகளையும் அரித்துத் தின்றன.

சிறுத்தைக்குப் பயந்து ஒதுங்கிப் பதுங்கி வந்த சில நரிகள் எப்போ சிறுத்தை வந்து உண்டுவிட்டுச் செல்லும் எஞ்சியதை தாம் சுவைக்கலாம் என்று நாவினால் நீர்வடியக் காத்துக் கிடந்தன.

ஆனால் அந்தச் சிறுத்தை மீண்டும் அங்கு வரவேயில்லை. நரிகள் தின்று எஞ்சியதை காகங்களும் பருந்துகளும் சில ஊர் நாய்களும் பிய்த்துத் தின்றன.

- சிந்தாமணி (1970)

## சாளரம்

# மக்கட் பெயர்

தமிழ்நாட்டு மக்கள் பெயர் வழக்குகள் மிக விரிந்த ஆராய்ச்சிக்குரிய களமாகும். ஒரு சமூகத்தின் ஆசைகளும் கடந்த கால நினைவுகளும், எதிர்பார்ப்புக்களும், அழகுணர்ச்சியும், நம்பிக்கையும் மனிதனுக்குப் பெயரிடும் வழக்கத்தில் பொதிந்து கிடப்பதைக் காணலாம். தமிழர்கள் கடந்த இருபது நூற்றாண்டுகளாக எவ்வெவ்வகையில் எவ்வெவ்வாறு எல்லாம் மனிதர்களுக்குப் பெயரிட்டு வழங்கினர் என்பதைக் காலவாரியாகக் காணுவது சுவையும் பயனும் தரும் முயற்சியாகும்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழர்களின் பெயர் வழக்குகளில் காணப்படும் கூறுகளை முதலில் வரிசையிட்டுப் பார்க்கலாம். தெலுங்கு, கன்னடம், மலையாளம், சௌராட்டிரம் ஆகிய மொழி பேசும் மக்கள் தமிழகத்தில் குடிபுகுந்ததனால் ஏற்பட்ட செல்வாக்கு ஒருபுறம், வேதங்கள், இதிகாசங்கள், புராணங்களை உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனியச் செல்வாக்கு இன்னொரு புறம். தேசிய, திராவிட, பொது உடைமை இயக்கங்களின் செல்வாக்கு இன்னொருபுறம். இவற்றோடு பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை ஸ, ஜ, ஷ, ஹ, ஸ்ரீ ஆகிய ஒலிகளின் மீது ஏற்படுத்தி வைத்திருக்கும் போலிக் கவர்ச்சி, கிறித்துவமும் ஆங்கிலமும் கலந்து ஏற்படுத்திய தூய ஆங்கில அல்லது புதிய தமிழ்ப் பெயராக்கங்கள் என இக் காலத் தமிழனின் பெயரிடும் மரவு வேடிக்கைக் கோலங்கள் பலவற்றைக் காட்டி நிற்கிறது.

இந்த வேடிக்கைக் கோலங்களுக்கு நடுவில் கண்ணன், குமரன், முருகன், சாத்தன் ஆகிய மிகச் சில பெயர்களை மட்டும் தமிழர்கள் தம் மக்களுக்குத் தொடர்ந்து இட்டு வழங்குகின்றனர் என்பது வியப்புக்குரியதுதான். கி.பி. 17-ம் நூற்றாண்டு வரை தமிழ் மக்களின் இயற்பெயர்கள் பெரும்பாலும் நான்கு அல்லது ஐந்து எழுத்துப் பெயர்களாகவே இருந்து வந்திருக்கின்றன.

> குணசீலன், குணசேகரன், குணபாலன், தனசீலன், தனபாலன், சத்யபாலன் ஆகிய பெயர் வழக்குகள் தமிழ் நாட்டுச் சமணத்தின் தொல்லெச்சங்களாகும். நாகேந்திரன், ஜீவேந்திரன் ஆகிய பெயர் வழக்குகளும் அவ்வாறே.

அரசியல், சமூகம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் செல்வாக்குப் படைத்தவர்களை இயற்பெயர் இட்டு வழங்குவது மரியாதைக் குறைவு என்ற எண்ணமும் பல நூற்றாண்டுகளாகத் தமிழர்களுக்கு இருந்திருக்கிறது. நிறைக்கோன், மலையமான், ஆவூர்கிழார், கோவூர்கிழார், அரிசில்கிழார், இளங்கோ, ஆரூரன், கழுமலவூரன், வாதவூரடிகள், பெரியாழ்வார் போன்ற பெயர்களைச் சான்றாகக் காட்டலாம்.

பக்தி இயக்கமாக எழுச்சி பெற்ற சைவமும் வைணவமும் தமிழர்களின் பெயரிடும் மரபைத் தலைகீழாக மாற்றிக் காட்டின. அரசியல் அதிகாரத்தில் இருந்தவர்கள் விசயாலயன், ஆதித்தன், பராந்தகன், சுந்தரன், உத்தமன், இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன், விக்கிரமன் என்று வடமொழிப் பெயர்களைத் தங்களுக்குச் சூட்டிக் கொண்டு மகிழ்ச்சி அடைந்தனர். கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டில் பெருகி வளர்ந்த பார்ப்பனியத்தின் செல்வாக்கிற்கு இந்தப் பெயரிடும் மரபுகளும் சான்றுகளாகும்.

இதே நேரத்தில் மற்றொரு புறத்தில் திருமுறைகளும் பாசுரங்களும் ஊட்டிய தமிழ்மொழி உணர்ச்சி மக்கள் பெயரிடும் மரபிலும் எதிரொலித்தது. எடுத்த பாதம், மழலைச் சிலம்பு, நீறணி பவளக்குன்றம், உய்ய நின்று ஆடுவான், கரிய மாணிக்கம் என, தேவாரமும் ஆழ்வார் பாடல்களும் மக்கள் பெயர் வழக்குகளில் பதிவாயின. ஆவூர் மூலங்கிழார், ஏணிச்சேரிமுடமோசியார் என ஊர்ப் பெயர் சார்த்தி வழங்கும் மரபு வளர்ந்து தெய்வத் திருத்தலங்களின் பெயரையே மக்கள் பெயராக இடும் மரபு இக் காலத்தில்தான் உருவானது. ஐயாறன், ஆரூரன், திருமாலிருஞ்சோலை, கயிலாயன் எனத் திருத்தலப் பெயர்களை இடும் இந்த மரபும் காசி, திருப்பதி, பழநி, குற்றாலம், சிதம்பரம் என இன்றுவரை தொடர்ந்து வருகிறது.

சங்க இலக்கியக் காலத்திலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளைத் தொடர்ந்து இடம்பெற்று வரும் பெயர் வழக்குகளாகச் சில வற்றைப் பார்க்கிறோம். கண்ணன், குமரன், சாத்தன் (சாத்தையா, சாத்தப்பன்) நாகன் (நாகப்பன், நாகராசன், நாகம்மாள்) மருதன் (மருதையன், மருதப்பன், மருதமுத்து) ஆகிய பெயர்களை இவ்வகையில் குறிப்பிடலாம். குறைந்தது ஐந்து நூற்றாண்டுக் காலம் தமிழகத்தில் செழித்து வாழ்ந்திருந்த சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கும், தமிழ் மக்களின் பெயர்களில் இன்றளவும் தங்கியுள்ளது. குணம் என்ற முன்னடையோடு கூடிய பெயர்களும் பாலன் என்ற பின்னடையோடு கூடிய பெயர்களும் தமிழ் நாட்டுச் சமணக்கல்வெட்டுக்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. குணசீலன், குணசேகரன், குணபாலன், தனசீலன், தனபாலன், சத்யபாலன் ஆகிய பெயர் வழக்குகள் தமிழ் நாட்டுச் சமணத்தின் தொல்லெச்சங்களாகும். நாகேந்திரன், ஜீவேந்திரன் ஆகிய பெயர் வழக்குகளும் அவ்வாறே. சாத்தனார், சாத்தையா என்ற பெயர்களில் இன்றுவரை வணங்கப்பெறும் தெய்வங்களும் சமண மதத்தின் சிறு தெய்வங்களே.

தர்மராஜன் என்ற பெயரும் அர்ச்சுனன் என்ற பெயரும் பாண்டவர்களைக் குறிப்பதல்ல. தர்மராஜன் என்ற பெயரும் பாண்டவர்களைக் குறிப்பதல்ல. தர்மராஜன் என்ற பெயர் புத்தருக்கு வழங்கிய பெயராகும். அப்பர் தேவாரத்தில் இந்தப் பெயர் மார்க்கண்டனுக்கும் சுறப்படுகிறது. புத்தம், தர்மம், சங்கம் என்பது பௌத்தர்களின் மும்மைக் கோட்பாடு ஆகும். அதுபோலவே அர்ச்சுனன் என்ற பெயரும் மருதன் என்ற தமிழ்ப் பெயரின் வடமொழிப் பெயர்ப்பே.

தமிழ்நாட்டில் இப்பொழுதும் வழங்கும் பெயர்களில் சோணை என்ற முன்னடைப் பெயரைத் தென் மாவட்டங்களில் பரவலாகக் காணலாம். சோணைமுத்து, சோணாசலம் என்பதாக இப் பெயர்கள் அமைகின்றன. 'பொன்' என்று பொருள்படும் பாலி மொழிச் சொல்லான 'சோணா' என்பதே இது. பாடலிபுத்திரத்தில் ஓடும் நதியினைச் சோனை (பொன்னி) நதி எனச் சங்க இலக்கியம் கூறும். 'தம்ம, அத்த' என வரும் பாலி மொழிச் சொற்கள் வடமொழியில் 'தர்ம, அர்த்த' என்று வரும். அது போலவே 'சோண' என்ற பாலி மொழிச் சொல் சுவர்ண-சொர்ண (தங்கம்) என ஒலி மாற்றம் பெற்று

> கி.பி. 17-ம் நூற்றாண்டு வரை தமிழ் மக்களின் இயற்பெயர்கள் பெரும்பாலும் நான்கு அல்லது ஐந்து எழுத்துப் பெயர்களாகவே இருந்து வந்திருக்கின்றன.

வந்துள்ளது. சோணைமுத்து என்ற பெயருக்குத் 'தங்கமுத்து' என்று பொருள். சோணாசலம் என்ற பெயருக்குத் 'தங்கமலை' என்று பொருள்.

மண்ணாங்கட்டி, அகோரம், ஆபாசம், அமாவாசை, பிச்சை முதலிய பெயர் வழக்குகள் மந்திர நம்பிக்கையின் அடிப்படையில் பிறந்தவை. குழந்தைகளைத் தீய ஆவிகள் அண்டாது என்ற நம்பிக்கையில் விரும்பி இடப்பட்ட பெயர்கள் இவை. இந்த நம்பிக்கை ஒடுக்கப்பட்ட சாதியாரிடத்தே தான் வலுவாக இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒடுக்கப்பட்ட மக்களிடத்திலே பரவலாக வழங்கும் பெயர்களாக இன்றும் சில பெயர்களை அடையாளம் காணுகின்றோம். அமாவாசை, ஆபாசம், பலவேசம், கழுவன், விருமன், ஒச்சன், சுடலை, கருப்பன், பேச்சி, பிச்சை, அண்டி முதலியவை பெரும்பாலும் சிறு தெய்வப் பெயர்களை ஒட்டி அமைந்தவை. இவை அரசியல் அதிகாரத்தால் ஒடுக்கப்பட்ட மக்களிடத்தில் மட்டுமே வழங்கப்பெறும் பெயர்களாகும். அதாவது இவை 'கீழோர் மரபு' சார்ந்த பெயர்களாக அறியப்படும். பெருந்தெய்வங்களின் பெயர்களையோ, பெரியசாமி, ராஜா என மேன்மை சுட்டும் பெயர்களையோ ஒடுக்கப்பட்ட சாதியினர் தம் பிள்ளைகளுக்கு இடமுடியாதவாறு பண்பாட்டு ஒடுக்குமுறை நிலவியது. மேல் சாதியார் அவர்களை வேலை ஏவும்போது இந்தப் பெயர்களால் அழைப்பது தங்களுக்குக் 'கௌரவக் குறைவு' என்று கருதினர். இவ்வகையான பெயர் வழக்குகளும் அடையாளங்களும் 15 ஆம் நூற்றாண்டுவரை இலக்கியங்களிலோ கல்வெட்டுக்களிலோ காணப்படவில்லை. வரலாற்றுப் போக்கில் பெயரிடும் முறையில் மேலோர், கீழோர் என்ற பிரிவு 15ம் நூற்றாண்டில் பிறந்த விசயநகரப் பேரரசு எனும் இந்து சாம்ராஜ்யத்தினால் விளைந்ததவை ஆகும்.

அதன் பின்னர் இருபதாம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டு மக்கள் பெயர் மரபுகளில் பெரிய மாற்றம் ஏதும் நிகழ்ந்து விடவில்லை. இருபதாம் நூற்றாண்டில் மக்கட் பெயரிடும் மரபில் ஏற்பட்ட மாற்றங்கள் தனியாகப் பேசத்தக்கவையாகும்.

– அறியப்படாத தமிழகம்

---

## நாற்று

### இளம் ஆக்கங்கள்

# அன்புடன் வெரித்தாஸிற்கு!

எங்கள் நாட்டில்
எண்ணெயும் இல்லை...
எங்கள் எதிரிக்கு
லிபியாவுடனோ... இல்லை
கியூபாவுடனோ-பெரிதாக
உறவும் இல்லை!
எந்த வல்லரசுக்கும்
செல்லப் பிள்ளையும்
இல்லை நாம்-இருந்தும்
இத்தனை காரணங்களினாலும்
எங்களின் நாடு
எங்களினது இல்லை
என்றாகி விடுமா!
உரிமைகள் மறுக்கப்படும்போது
உறவுகள் நசுக்கப்படும்போது
விடுதலைக்காய் தணலான
எங்களின் உணர்வுகள்
வேதனையைச் சிந்தும் விழிகள்
உறுதி தளராத நடை
வரலாற்றின் பெரும்பேறாய்-வாய்த்த
எம் தலைவரண்ணாவின் அணி
இவ்வாறாய் தொடரும் எம்
இருப்பிற்கான பயணம்...

தொடர்புச் சாதனங்களால்
சிறுத்துப் போய்விட்ட உலகம்
எங்கள் கண்ணீருக்கு
விருப்பமான நிறம் தீட்டி-தங்கள்
பக்கம் திருப்பியது-கருவையே
சிதைக்க முனையும் கற்பிதங்கள்
எட்டிக் கூட பார்க்காமல்
முட்டிய எங்கள் வேதனையின்
காரணம் காணாமலேயே-ஏதேதோ
விமர்சனமும் செய்தார்கள்.
தற்கொடை புரிந்த-எங்கள்
தீக்குஞ்சுகளின் தரமறியாமல்
பேசினார்கள்...
இவர்கள் என்ன சொன்னாலும்
எங்கள் மூச்சின் பேச்சில்
வீரசேற்றி நிற்கும்
புலிகளின் பாதையில்
விடுவிக்கப்படுவது
எங்கள் தேசம்!

இருந்தும் இதயத்தை
ஸ்பரிசித்து-எம் உணர்வுகளில்
பங்கு கொண்டது ஒன்று மட்டும்!
ஒலிக்கும் தமிழிலே தினம்
தாயாய் தலை வருடி விட்டது.
'....அம்மா! என்றோடுது
சின்னக்கன்று...' என்று அரிவரிப்பாடலைப்போல்
எம்மைத் தாங்கிக்கொண்டது-கிளாய் குசலம் விசாரித்து
முட்டு முட்டு செய்வதற்கும்
உள்ளம் கனக்கும் வேளையில்
உறுதி தந்தும்
கள்ளக் குறும்பு வரும்போது
கலகலத்தும்- சிற்றலையில்
பெற்று வளர்த்து
உயிரோடு ஒட்டிய நாட்டினை
உலகெங்கும் கொண்டு செல்லும்
வெரித்தாஸ் தமிழ்ப்பணியே!
ஒடுக்கப்படும் மக்களுக்காய்
உன் சேவை ஆனதால்
சிற்றலையில் என்றாலும்-உன்னால்
எழுவதோ பேரலைகள்!!

நன்றி சொல்வது அந்நியர்க்கே
நம்முடைய உறவின் அர்த்தங்கள்
உன்னதமானவை!
மீண்டும் இருட்டிய இந்த
புலம் பெயர்ந்த பொழுதுகள்
மனதினுள் ஏதோ செய்ய
உன்(சிற்) அலை மடியினுள்
தலை புதைக்கிறேன்!
அன்பு வணக்கங்கள்!!

ஈழமைந்தன்


# Radio Asi

Rac இன் ஒலிபரப்பினை GMT 20.00 முதல் GMT 04.00 மணி வரை தமிழ் ஈழம் முதல் மத்தியகிழக்கு நாடுகள் மற்றும் இலங்கை நேரம் அதிகாலை 04.00 மணி முதல் காலை 10.00 மணி வரை சிற்றலை வரிசைகளில் கேட்கலாம்.

**ஐரோப்பிய நாடுகளிலும் இதே ஒலிபரப்பினை சிற்றலைவரிசைகளில் கேட்கலாம்.**

## 24 மணி நேர சர்வே

## WORLD



ஐரோப்பிய நாடுகள்

**Europe**

Germany, France
Switzerland,
Untted Kingdom and
Other 38 Countries

அவுஸ்திரேலிய நகரங்கள்

**Australia**

Sydney - Victoria
Melbourne - Nsw

## Radio Asi

## Europe Represe

**GERMANY REPRESENTATIVE**

**SIVA SARMA**
**FRANKFURT**
**GERMANY**
**TEL: 0172-8359490 /**
**0171-7829086**

**SUB REPRESENTATIVES**

1. JAGATHEESE
DORTMUND
GERMANY
TEL: 0231-162377

2. B.BALES
PADERBORN
GERMANY
TEL. & FAX: 05251 -64432

3. JAGATHEESWARAN
ZEVEN
GERMANY
FAX: 04281 -7610

4. V.R VARATHARAJAH
BREMERVORDE
GERMANY
TEL. & FAX: 04761-2249

5. K. SIVANANTHARASAH
HOMBORG
WEST GERMANY
TEL.& FAX: 06841 -755630

6. THAYALAN
KEVELAER
GERMANY
TEL: 0283 -23762

7. R. THEIVENDRAM
BERSENBRUCK
GERMANY
TEL: 053992737

8. NAGALINGAM
PULENTHIRAN
ERKELEND
GERMANY
TEL: 02431-74739

9. V. SIVARAJAH
DUISBURG
GERMANY
TEL: 0203 -706480

10. N.L. PUTHUVAIRAJAN
GELSENKIRCHEN
GERMANY
TEL: 0172 -6415456

11. RAGU (JANA STORES)
HUECKELHOVEN
GERMANY
TEL: 02433-86408

12. S. KIRUPAKARA SHARMA
HANOVER
GERMANY
TEL: FAX: 01149 -511-7590-173

13. VIJAYASUJDARAM
PATHMANATHAN
NEUENKIRCHEN
GERMANY
TEL: 05873 -608382

14. S.SIVAGNANASUNTHARAM
BERLIN
GERMANY
TEL: (030) 625-2353

15. S. PACKIYANATHAN B.A
DORTMUND
GERMANY
TEL: 0231 -233363

16. VISHNURAJAH
VALLIKANTHAN
GLADBACK
GERMANY
TEL: 01149 -2043 -789256

17. MALARUM MAALAIGAL
HEMER
GERMANY
TEL: & FAX: 02372 -16310

18. S.N MANOHARAN
HEINS BERG
GERMANY
TEL: 02452 67564

19. KARUNANANDA RAJAH
KAMEN
GERMANY
TEL: 02307 40328

20. S.BHASKARAN
BOCHUM
GERMANY
TEL: 0234 771149

21. APIRAAM ENTERPRISE
ESSEN
GERMANY
TEL: 0201 236920

22. M. MANOHARAN
OFFENBACH/M
GERMANY
TEL: & FAX: 069- 822025

23. S. SELVARAJAH
AONSBERG
GERMANY
TEL: 02932 82712

24. P. KUMARA RUBAN AND
P.PRASHANTHAN
CASTROP RAUXEL
GERMANY
TEL: &FAX: 02305 9?2577

25. RAJESWARY GANESWARAN
BREAMEN
GERMANY
TEL: 0421 -847761

**SWITZERLAND REPRSENTATIVE**

**K. KAGENDRA SARMA**
**MENDRISIO**
**SWITZERLAND**
**TEL. & FAX: 01141 -91-6466-763**

Pub.

# ...a Canada

## ...தச தமிழ் ஒலிபரப்பு


## SERVICE

வட அமெரிக்க நாடுகள்
**North America**

Canada,
Usa, Mexico

ஆசிய நாடுகள்
**Asia**

Sri Lanka, India
Singapore,
Malaysia & The Middle east



தமிழர்கள் செறிந்து வாழும் அனைத்து நாடுகளிலும் துல்லியமாக சென்றடைகின்றது
Radia Asia Canada !!!

விளம்பரங்கள் - அறிவித்தல்கள் - வாழ்த்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

இது உங்கள் வானொலி!
தமிழ் மக்கள் வானொலி!!

ஐரோப்பிய நாடுகளிலும்
Astra Satellite video Channel 7 (11.303 KHz)
Audio Freqency -7.38 MHz

**Radio Asia Canada**
680 Progress Avenue Unit 1,
Toronto, M1H 3 A 5. Canada
Tel: 1-416-289-1522 - Fax: 1-416-289-1840

தமிழர்கள் வாழும் அனைத்து தமிழ் நாடுகளிலும் ஒரே நேரத்தில் ஒலிக்கும் முதல் தமிழ் வானொலி

...a Canada


## ...entatives - 1998

### SUB REPRESENTATIVES

1. A.J.RANJAN
ZURICH
SWITZERLAND
TEL: 01-272 86 05

2. V. SRI PATHMANATHAN
ST. GALLEN
SWITZERLAND
TEL: 077-597362

3. P. JEGATHARAN
ZURICH
SWITZERLAND
TEL: 079 640 6367

4. S. KANAGASUNDARAM
POSTFACH
SWITZERLAND
TEL: 034-402-7340

5. V.N. THANGARAJA
BASEL
SWITZERLAND
TEL: 061 381 78 94

6. SELVARAJAH .T
MITTF LHAUSERN
SWITZERLAND
TEL: 031-849-0098

7. K. SELVANAYAKAM
ROTENBURUNEN
SWITZERLAND
TEL: 081 655 21 84

8. V. PIRABAKARAN
MARJY
SWITZERLAND
TEL: 026 436 31 73

9. N. SIVARAJALINGAM
NATERS
SWITZERLAND
TEL: 027 924 15 29

10. S.H. FAUZER
GALLEN
SWITZERLAND
TEL: 071 220 85 39

11. A.S SIVABALAN
ROGGWIL
SWITZERLAND
TEL: 062 929 27 51

12. S. THARUSH
JURA
SWITZERLAND
TEL: 032 951 2508

13. A. RAVINDRAN
ZUCHWIL
SWITZERLAND
TEL: 032 685 3742

### HOLLAND REPRESENTATIVE

**S. SATHANATHAN**
**NETHERLANDS**
**HOLLAND**
**TEL: 045-5330684**

### SUB REPRESENTATIVES

1. CHANDRAN
AMSTERDAM
HOLLAND
TEL: 020-6943408

2. S. SIVANESHAN
DEN HELDER
HOLLAND
TEL: 0223633412

3. KUMAR
EINDHOVEN
HOLLAND
TEL: 040-2448430

### FRANCE REPRESENTATIVE

**V. SELVARAJAH**
**EVRY**
**FRANCE**
**TEL: 00 33 - 607768859**

### SUB REPRESENTATIVES

1. SHANMUGARATNAM
TEL: 0147244994

2. V.A :NATHAN
TEL: 0614966275

3. SUBASH CHANDRAN
TEL: 0669443495

4. SIVANANTHAN
TEL: 0669362770

### U.K REPRESENTATIVE

**S.VIJAYAN**
**MIDOX**
**U.K**
**TEL: 01144-181-5719282**

### SUB REPRESENTATIVES

1. M.K. RAHUMA
MIDDX
U.K.
TEL: 0181-900-9129

2. GNANA MANO
ESSEX
U.K.
TEL: 0181-491-8234


இவ் வாரம் தமது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்விகள் வதனா வரதராஜா, நீகா சண்முகராஜா, செல்வன் பேடினன்ஸ் பிறீடன்ஸ் ஆகியோரை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

# உங்கள் கைவண்ணம்



செல்வி
**இலஜிதா சிவராசா**

**வயது:** 8 (06.04.90)
**இடம்:** 91000 Evry, France.




கிளி ஒரு அழகான பறவை.
கிளியின் நிறம் பச்சை.
கிளியின் சொண்டு சிவப்பு.
கிளியின் கழுத்தில் ஆரம் உண்டு.
கிளி கீகீ கீகீ என்று கத்தும்.
கிளி பேச்சுப் பேசும்.
கிளி மரங்களில் கூடு கட்டி வாழும்.
கிளி பழங்களையும் தானியங்களையும் சாப்பிடும்.
கிளியை எல்லோரும் விரும்பி வளர்ப்பார்கள்.

# கவிதை முற்றம்





செல்வி
**தனுஷா விக்னராஜா**


**வயது:** 8 (20.02.90)
**இடம்:** 91000 Evry, France.

[எனது தமிழ்ச்சோலை பாடசாலையில் சொல்லித்தரப்பட்ட பாடல் இது]










ஏழு நாளும் காய்கறி

திங்கள் கிழமை தக்காளி.
செவ்வாய்க் கிழமை சிறுகீரை.
புதன் கிழமை புடலங்காய்.
வியாழக் கிழமை வாழைக்காய்.
வெள்ளிக் கிழமை வெண்டிக்காய்.
சனிக் கிழமை பூசணிக்காய்.
ஞாயிறு காரட் பீட்ரூட்.
வார நாள்கள் ஏழாகும்.
உணவில் காய்கறி நலமாகும்.
சத்தான காய்கறி நான்
உயிரைக் காக்கும் மருந்தாகும்.






செல்வி
**நிரோஷா தயாநிதி**

**வயது:** 10
**இடம்:** 7013 Domat/Ems, Switzerland.


**பொழுதுபோக்கு:**
- ★ பிடித்த பாடல்களை வயலின் வாசிப்பது.
- ★ கணினியில் விளையாடுவது.
- ★ சைக்கிள் ஓடுவது.

## நதியும் கிணறும்

ஒரு நதியின் கரையிலே கொஞ்ச தூரம் தள்ளி ஒரு கிணறு இருந்தது. கிணறு எப்போதும் நதியைப் பார்த்து ஏளனம் செய்துகொண்டே இருக்கும்.

'உன் உடல் முழுவதும் ஒரே சேறு. நாள் முழுவதும் சள சளவென்று கூச்சலுடன் முடிவில்லாமல் ஓடிக்கொண்டேயிருக்கிறாயே. இது என்ன வாழ்க்கை. என்னைப் போன்ற ஆழமும் அசையாத ஸ்திரமான வாழ்வும் உனக்கு உண்டா? நாள் முழுவதும் நான் ஒரு சின்ன ஜன்னல் வழியாகவே நீல வானத்தை உற்றுப் பார்த்தபடி உலகத்தின் விந்தைகளை எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். இதுதான் உண்மையான இன்ப வாழ்வு' என்று சொல்லி அடிக்கடி பெருமைப் பட்டுக்கொள்ளும்.





நாட்கள் சென்றன. பருவங்கள் மாறி வந்தன. பெருமழை பெய்தது. சேறு நிரம்பிய ஆழமில்லாத ஆறு வெள்ளத்தினால் பொங்கிப்பொங்கி உயர்ந்தது. பயங்கரமான வெள்ளம் கரையை உடைத்துக் கொண்டு நகரத்துக்குள்ளும் பிரவேசித்து விட்டது. அழகான கைபிடிச் சுவரோடு கூடிய கிணற்றையும் கூட வெள்ள நீர் மூழ்கடித்துக்கொண்டு போய்விட்டது. ஆழமும் ஸ்திரமுமான வாழ்வுடைய கிணறு ஆற்றின் வெள்ள நீரிலே மூழ்கி மறைந்துபோய் விட்டது.

# கட்டுரை முற்றம்

## நான் வசிக்கும் கிராமம்

இது நான் இருக்கும் Schonenwerd (So) என்ற கிராமம். இங்கு எவ்வளவோ வெள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். மற்றும் எங்களுடைய தமிழ் குடும்பங்களும் தனிப் பெடியங்களும் இருக்கிறார்கள். திங்களிலிருந்து வெள்ளிக்கிழமை வரைக்கும், காலையிலிருந்து, மாலை வரைக்கும் பார்த்தால் எவ்வளவோ சந்தோசமாக இருக்கும். காலையில் பார்த்தால் மக்கள் ஒவ்வொருவராக, வேலைக்குப் போவார்கள். மாலையில் பார்த்தால் வேலைக்குப் போன மக்கள், எல்லோரும் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்புவார்கள். இதற்கிடையில் பார்த்தால் எவ்வளவோ மக்கள் சாமான் வேண்டுவதற்கு கடைக்கும், தபால் கந்தோருக்கு, வங்கிக்கு, புகையிரத நிலையத்திற்கு எனப் போவார்கள். அங்கு சென்றதும் புகையிரதத்தில் ஏறி எங்கெல்லாமோ செல்லுவார்கள்.

இவைகளின் பிற்பாடு கடைக்குச் சாமான் வேண்டப் போன மக்கள் திரும்பவும், வீடுவந்து சேருவார்கள். இதேபோல்தான் தபால் கந்தோருக்குப் போனவர்களும் வீடுவந்து சேருவார்கள். இவைகளைப் போல்தான் வங்கிக்குப் போனவர்களும், வீடு வந்து சேருவார்கள். இப்படியே மக்கள் வருவதும் போவதுமாக இருக்கும்.

சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பார்த்தால் கிராமமே வெறிச்சோடியிருக்கும். எங்காவது ஒரு சிலர், தேவாலயத்திற்கு செல்வார்கள். அவர்களைப் போல் தான் நானும் (03.05.1998) ஞாயிற்றுக்கிழமை இத் தேவாலயத்திற்கு வந்து, மதியம் மூன்று மணியளவில் இக் கட்டுரையை இத்தேவாலயத்திலிருந்து தான் எழுதுகின்றேன்.

இத் தேவாலயத்திலிருந்து பார்க்கும்போது, பல வீடுகளும், பல சாப்பாட்டு விடுதிகளும், கார்கள் நிறுத்தப்பட்டிருப்பதையும், கார்களில் சிலர் பயணம் செய்வதையும், சைக்கிள்கள் நிறுத்திவைக்கப் பட்டிருப்பதையும், சைக்கிளில் சிலர் பயணம் செய்வதையும், மோட்டார் சைக்கிள்கள் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதையும், மோட்டார் சைக்கிளில் சிலர் பயணம் செய்வதையும், இரண்டு புகையிரதம் பயணம் செய்வதையும், அதில் ஒன்று ஒரு புறமும், மற்றையது மறுபுறமும் பயணம் செய்வதையும், விளையாட்டு மைதானத்தில் சிலர் விளையாடுவதையும், சில வீடுகளிற்கு முன்பாக இந் நாட்டு கொடிகள் பறப்பதையும், சப்பாத்து தொழிற்சாலை, தபால் உறைகள் செய்யும் தொழிற்சாலை.... இப்படி பல தொழிற்சாலைகள் இருப்பதையும், மரங்கள் ஒவ்வொரு வீட்டிற்கு முன்பாக நிற்பதையும், அதற்கப்பால் பல தொழிற்சாலைகள் இயங்குவதையும், அதனுடன் சேர்த்து பற் பல மரங்கள் காட்சியளிப்பதையும், அதற்கப்பால் மண்ணுடன் சேர்ந்து புல்வெளிகள் காட்சியளிப்பதையும், அதற்கப்பால் பாதை ஒன்று மலைக்குப் போவதையும், மலையிலிருந்து வாகனங்கள் கீழே வருவதையும், மக்கள் விரும்பி மலைக்குப்போய்-மலையோடு சேர்ந்து இருக்கும் மரங்களையும் அங்குள்ள காட்சிகளையும் (சுற்றி) பார்த்துப் பார்த்து ரசிப்பதையும் காண்கிறேன்.

- ச. இராசன் (சுவிஸ்)



# பளு தூக்கும் வீராங்கனைகளை தமிழக அரசு மேலும் ஊக்கப்படுத்த வேண்டும்

- மோகனேசுவரி -

பெண்கள் பொதுவாக அதிக எடையுள்ள பொருட்களையே தூக்க முன்வரமாட்டார்கள். இப்படி இருக்கும்போது எப்படி பளுதூக்கும் போட்டிகளை இவர்களால் நடத்திக் காட்ட முடியும் என்று அங்கலாய்ப்போர் இனி சற்று அமைதியாக வாயை மூடவேண்டியது தான்.

ஏனெனில் மோகனேசுவரி என்ற இளம் பெண் தன் திறமைக்குச் சாதனையாய் இதை நிரூபித்துக்காட்டியுள்ளார். பத்தாம் வகுப்புமட்டுமே படித்துள்ள இவர், சாதாரணமாக பெண்கள் விரும்பும் விளையாட்டைத் தவிர்த்து வித்தியாசமாக பளுதூக்கும் விளையாட்டில் பயிற்சி பெறவிரும்பினார்.

இவரின் விருப்பிற்கு பெற்றோரும் உற்சாகம் கொடுக்கவே இன்று 63 கிலோ எடைப் பிரிவில் 5 தடவை மாநிலப் போட்டியிலும் 3 தடவை தென்மண்டலப் போட்டியிலுமாக 8 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். அதுமட்டுமில்லாது பெங்களூரில் நடந்த தேசியப் போட்டியிலும் தமிழ்நாட்டுக்கு தங்கம் வாங்கிக் கொடுத்துள்ள இவர் வித்தியாசமான சாதனை ஒன்றையும் இவ்விளையாட்டில் படைத்துள்ளார்.

அதாவது 59 கிலோ உடல் எடைப் பிரிவில் ஸ்னாட்ச்சில் 70 கிலோவையும், கிளீன் ஜெர்க்கில் 95 கிலோவுமாக மொத்தம் 165 கிலோவைத் தூக்கி எல்லோரையும் வியப்புக்குள்ளாக்கி இருக்கிறார்.

இவ்வாறு தன்னைப்போல் வளர்ந்துவரும் வீராங்கனைகளை தமிழ்நாட்டு அரசு மற்றும் நிறுவனங்கள் உற்சாகப்படுத்தி, ஊக்குவிப்புக் கொடுக்க வேண்டும் என்பது இவரது அண்மைக் கால வேண்டுகோள் ஆகும்.



# பிரெஞ்சுப் பெண்களின் வாழ்விற்கு புதுவடிவம் கொடுத்த மே 68

இன்றைய புரட்சிகளும் அர்ப்பணிப்புக்களும்தான் நாளைய விடியல்களிற்கும் சுதந்திரத்திற்கும் அடி அத்திவாரமாக இருக்கும் என்பதை செயல் வடிவமாக உணர்த்தியவர்கள் பிரெஞ்சுப் பெண்மணிகள்.

இன்றைய உலகப் பெண்கள் மத்தியில் கல்வியறிவிலோ, நாகரிகத்திலோ மற்றும் உயர் பதவிகள், அரசியல் பீடங்கள் என்ற அனைத்துத் துறைகளிலும் சொல்லத்தக்க அளவில் ஆண்களிற்குச் சமனாக இப் பெண்களும் நிற்கிறார்கள் என்றால் அதற்கு பலமான அடிப்படைத் தளமாக அமைந்தது, 1968 மே மாதம் நடந்த பிரெஞ்சுப் பெண்களின் புரட்சிப் பேராட்டம் தான்.

பலமான எதிர்ப்புக்களின் மத்தியில் சோர்பொன் பல்கலைக்கழக மாணவிகள் தலைமையில் யாருமே எதிர்பாராத வண்ணம் பிரெஞ்சுப் பெண்கள் கிளர்ந்தெழுந்தனர். பாலியல் உட்பட ஆண்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து உரிமைகளும் தமக்கும் வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் புரிந்தனர். பெண்களை அடிமைப்படுத்த ஆதரவாக இருந்த அனைத்து நிர்வாக நிலையங்களும் அடித்து நொருக்கப்பட்டன. வீதி வீதியாக பெரும் பெண்கள் அணி தம் உரிமைகளை வேண்டி சுவரொட்டிகளை ஒட்டினர். போராட்டத்தைத் தடுக்க வந்த காவல் படையினருடன் பலமாக மோதினர். இதனால் ஏராளமான பெண்கள் காயங்களிற்கும் கைதிற்கும் ஆளாகினர்.



'பேராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவரை பொலிசார் கைதுசெய்து பலவந்தமாகக் கொண்டுசெல்லும் காட்சி'

இருப்பினும் தம் போராட்ட இலக்கை மட்டும் யாரும் மாற்றாது பலமாக ஒன்றுபட்டு உறுதியுடன் நின்றார்கள். அதன் பலன்தான், 30 ஆண்டுகள் முடிவுறும் இவ் 98 மே இல் உயர்ந்த பல சாதனைகளைப் புரியும் திறமையான பெண்களை பிரெஞ்சு நாடு பெற்றுக்கொண்டுள்ளது என்பது மறுக்கமுடியாத ஒன்று.

வளர்ந்துவரும் பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக
ஈழமுரசு பெண்கள் பகுதியினரால் நடாத்தப்படும்

## கவிதைப் போட்டி



இப் படத்தை உற்றுநோக்குங்கள்; தலைமுறை இடைவெளி கொண்ட இவ் இரு பெண்களுக்கிடையிலான எண்ணவோட்டத்தை கவிதையாக வடித்து உங்கள் பெயர் முகவரியுடன் 21.05.98 இற்கு முன்பாக எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வையுங்கள். வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகள் ஈழமுரசு நடாத்தும் 'இசைமுரசு' போட்டியின்போது வழங்கப்படும்.

# பெண்களை அதிகம் பாதிக்கும் சிறுநீர்ப்பைத் தொற்று (Cystities)

சிறு நீர்ப்பையானது சிறு நீரகத்திலிருந்து வடிகட்டப்படும் சிறுநீரைச் சேகரித்து நேரத்திற்கு நேரம் வெளியேற்றுகிறது. இச் சிறுநீர்ப்பையில் கோலி பகிலோஸ் (Colibacillose) எனும் பக்டீரியாவும் அரிதாக, கன்டிடா அல்பிகன்ஸ் எனும் பங்கசும் தொற்றை உருவாக்குவதாலேயே இந் நோய் உருவாகிறது. இது குறிப்பாக பெண்களையே அதிகம் தாக்குகிறது. காரணம் சிறுநீர்ப்பையிலிருந்து சிறுநீரை வெளியேற்றும் சிறுநீர்க்கால்வாயின் நீளம், ஆண்களைவிட பெண்களினது குறைவாக இருப்பதால் (ஆண்கள் 20cm, பெண்கள் 3-4 cm) நோய்க்கிருமிகள் எளிதில் கீழ் இருந்து மேல் சென்று விடுகின்றன.

இந்நோயை எளிதில் குணப்படுத்த முடியும் என்றாலும் 10% ஆனவர்களிற்கு மீண்டும் இது தோன்ற வாய்ப்புண்டு. இந்நோயின் அறிகுறிகளாவன அடிவயிற்றில் நோ, அடிக்கடி சலம் கழித்தல், சலம் கழிக்கும்போது எரிவு இன்னும் நோய் தீவிரம் அடைந்திருந்தால், காய்ச்சலும் சலத்துடன் சீழ், இரத்தம் என்பனவும் வெளியேறும். இதை ஆரம்பத்திலேயே வைத்தியரை அணுகிக் குணப்படுத்த வேண்டும். அத்துடன் வைத்தியரின் ஆலோசனைப்படி முழுமையாக நோய் மாறியதுபோல் இருப்பினும் ஒரு மாத இடைவெளியில் மீண்டும் தோன்றவாய்ப்புண்டு.

அது மட்டுமல்லாது மீண்டும் உட்கொள்ளும் மருந்தும் எந்த விளைவையும் காட்டாது. இப்பொழுது சிகிச்சை முறையை எளிதாக்கும் பொருட்டு ஒரு முறை மட்டும் மருந்தை உட்கொள்ளும் முறையும் 3 நாட்களிற்கு மட்டும் பின்பற்றும் முறையுமென இலகுவான இரு முறைகள் உண்டு.

இந்நோய் ஒரு வருடத்திற்குள் 4 முறைக்கு மேல் திரும்பவும் ஏற்பட்டால் நோயின் நிலையில் ஏதோ சிக்கல் இருப்பதாக அர்த்தம். அதாவது சிறுநீர் பை, சிறுநீர்க்கால்வாய்களின் உருவ வேறுபாடுகள் அல்லது அவற்றில் தோன்றும் கட்டிகள் ஆகியனவாகவும் இருக்கலாம். இத்தோடு நீரிழிவு நோய், நோய் எதிர்ப்புத் தன்மை குறைந்தவர்களிலும் இக்கிருமித் தாக்கம் அதிகரிக்குமாகையால் இத்தகையோர் சிறுநீர் வியாதி சம்பந்தமான சிறப்பு நிபுணரின் ஆலோசனையை பெறுதல் நன்று. குறிப்பாக கர்ப்ப காலத்திலேதான் இத் தொற்று அதிகமாகத் தாக்குவதால் இந் நிலையிலுள்ள பெண்கள் இந் நோயின் சிறு அறிகுறியைக் கண்டாலும் முழுமையாக சிகிச்சை பெற வேண்டும். காரணம் இது குறை மாதப் பிரசவத்திற்கும் வழிவகுக்கும்.

இந்நோயின் தடுப்பு முறைகளாவன:

1. அதிகளவு நீர் பருகுதல் (1-1 1/2 L) இது சிறுநீருடன் நோய் கிருமிகள் அடித்துச் செல்லப்படும் வாய்ப்பை உருவாக்கும்.
2. ஒழுங்காக சிறுநீர் கழித்தல் (சிறுநீர்ப்பையில் அதிக நேரம் சிறுநீர் தேங்குவதால் கிருமி விருத்தி அதிகரிக்கும்).
3. சிறுநீர்த்துவாரம் மற்றும் பிறப்புறுப்பை துப்பரவாக வைத்திருத்தல்.


## நித்தி வாகன சேவை



வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், ஐரோப்பிய நாடுகளுக்குமான சகல போக்குவரத்துக்கான வாகன வசதிகளுக்கும் இன்றே நாடுங்கள்

உங்கள் தொடர்புகட்கு- நித்தி Tel: 01 48 05 02 14 / 01 43 03 07 08, (Répondeur) 01 49 23 97 32
அவசரத்தொடர்புகளுக்கு: 06 07 34 80 51

Pub




தேடியவை

# சாதல் மொழி உறவு வாயைத் திறந்தால்....

'நாடு நல்ல நாடு தான் நம்ம சனம்தான் கெட்டுப்போச்சு... கெட்டுப்போச்சை...ய்...யா கெட்டுப்போச்சு' இவ்வாறாக புலம்பிக் கொண்டே கையிலுள்ள செய்..தீ நறுக்கு ஒன்றினையும் விசுக்கிக்கொண்டே வந்தார் எதுகையார்.

'ஏதேது... கையாரே ரொம்பவும் தான் சூடாக வருகிறீர் போல இருக்கிறதே' என இருப்புக் கொள்ளாத மோனையாரும் கேட்டுவைக்க வெடித்துச் சீறி கையிலிருந்த செய்..தீ நறுக்கினை மோனையாருக்கு வீசி எறிந்தார் கையார்.

தமிழகத்திலிருந்து வெளியாகும் சஞ்சிகை ஒன்றில் வெளியாகிய விளம்பரமொன்றின் நறுக்கு அது. தொ[ல்]லைபேசி ஒன்றில் கதைத்துக் கொண்டிருக்கும் பெண்ணின் படமொன்றுடன் 'காதல்மொழி உறவு வேண்டுமா? என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள் இரவு பகல் சேவை' என விளம்பரம் கொ[ா]டுக்கப்பட்டு கனடாவிலுள்ள தொ[ல்]லைபேசி ஒன்றின் எண்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

அட... இதற்காகவா இந்தக் குதி குதிக்கிறீர்? தமிழகத்திலிருந்து வரும் சில இதழ்களில் இவ்வாறான விடயங்கள் வழக்கமானவைதானேயைய்யா, இதை ஒரு மூலையில் தூக்கிப் போட்டுவிட்டு வேறு புதினங்களாகத் தாரும் வாசகக் கண்மணிகளுக்கு கொடுப்போம் என மோனையாரும் அப்பாவித்தனமாகச் சொல்லி வைக்க, மீண்டும் 'எரிமலை'யானார் கையார். யோவ்... மோனையாரே [ஆகா! என்னே மரியாதை] சும்மா மேலெழுந்தவாரியாக இதை நோக்காமல் விசயத்தைக் கொஞ்சம் கேளும். [சரி சொல்லித் தொலையும்!] கனடாவிலிருக்கும் எனது சித்தப்பாவின் மாமாவின் மகனின் பேறாமகன் ஒருவன் [அட இப்படியும் ஒரு முறையா?] இதைப்பற்றி விசாரித்து எனக்கு செ..ய்..தீ அனுப்பியிருக்கிறான். அஃதாவது இந்த தொ[ல்]லை பேசி சேவையினை செய்பவர்கள் எம்மவர்களாம். அதுவும் பெண்களாம் [அட கடவுளே; அட கடவுளே] பாடசாலை மாணவிகளான இவர்கள் பகுதி நேர வேலையாக இதனைச் செய்கிறார்களாம். [அட கண்ணிறா...வியே....]

யாராவது ஒருவர் குறிப்பிட்ட அந்த எண்களை சுழற்றினால் [விசேட தொலைபேசிக் கட்டணம்] மறு முனையில் யாழ்ப்பாணத் தமிழில் காதல் மொழிகள் அள்ளி வீசப்படுமாம். அள்ளி வீசப்படும் அம் மொழிகளில் வசப்படும் இம் முனை 'ஜென்மங்களோ' தமது பணத்தினை தொலைபேசி அலகுகளூடாக வாரிக் கொடுத்து, தம்மையும் கெடுத்துவிட்டு 'ஙே' என்ற விழிக்க வேண்டியது தான். குறிப்பிட்ட ஒரு பெண்ணுடன் உரையாடும்போது, அப் பெண் தனது 'சர்வதேச ரீதியிலான' நண்பர், நண்பிகளையும் தொலைபேசி இணைப்பு ஊடாக அறிமுகப் படுத்துவாராம். இம் முனைக்கு அவர்களைப் பிடித்துக் கொண்டால் அவர்களுடனும் தொடர்பினை ஏற்படுத்தலாமாம்.

அது..சரி.. ஏனையா இவர்கள் இப்படியெல்லாம் செய்கிறார்கள்.... இவர்களைத் திருத்தவே முடியாதா? கதையை இடைநிறுத்தி பதைப்புடன் கேட்ட எதுகையாருக்கு சரியான பதிலினைக் கொடுக்க மோனையாரால் முடியவில்லை. மாறாக இவ்வாறான புதிய 'முளைப்புகள்' புகலிட வாழ்வியல் தரும் போலி மினுக்கமா? அன்றி பணத்தாசையின் விளைவா? அல்லாவிடில் உழைப்புக்கான சுலபமான வழி இதுவென்பதாலா? இவ்வாறாக பல கேள்விகள் மோனையாரின் மனதைக் குடைந்தன.

இக் கேள்விகளுக்கு கண்மணிகள் யாராவது பதிலினைத் தரமுடியுமா? அல்லது இவ்வாறான 'சில்லறைச்' செயல்களுக்குத் தீர்வுதான் என்ன? கண்மணிகளின் பேனாக்களும் இது பற்றி ஆரோக்கியமாக பேசலாமே?

★ ★ ★

சிங்கக் கொடியோர் நாட்டில் கடந்த இரு வாரத்திற்கு முன்னர் பெரிய அம்மணியாரின் ;வால் பிடிக்கும் பெரி..ய்..ய அமைச்சர் ஒருவருடன் நெருங்கிய தொடர்புடைய 'பாதாள உலக' படிமாத்தான் ஒருவர் குளியாப்பிட்டி பகுதியில் வைத்து கைதான செய்தியை படித்த கண்மணிகளே அந்தக் கைதில் உங்களுக்காக நாம் தேடிய மேலதிக புதினங்கள் இதோ!

பொலிஸ்காரர்கள் பாவிக்கும் கைத் துப்பாக்கி ஒன்றுடன் கைதானவர் இந்தப் படிமாத்தான். அரச பெரி..ய்...ய தலைகளுடன் இந்தப் படிமாத்தானுக்கு உள்ள நெருங்கிய தொடர்பு தெரியாமல் குளியாப்பிட்டி பொலிஸ் அதிகாரி இவரைக் கைதுசெய்து கொழும்பு புலனாய்வுத் துறையிடம் ஒப்படைத்துவிட்டார். தமது 'ஆள்' உள்ளே வந்து விசயம் பெரிதானமை பற்றி பெரிய தலைகளுக்கு சரியான உர்..உர் ஆனதால் கைது செய்த பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக குச்சவெளி பொலிஸ் நிலையத்திற்கு இடமாற்ற உத்தரவு வந்துவிட்டது.

20 கொலைகளோடு தொடர்புடைய பெரி..ய்..ய ஆளைப் பிடித்துக்கொடுத்துவிட்டேன். வெகுமதி கிடைக்கும்.... பதவி உயர்வு கிடைக்கும் என கனவு கண்ட பொலிஸ் அதிகாரியோ தனக்கு வந்த நிலையை எண்ணிப் புலம்பியபடியே குச்சவெளிக்கு பெட்டி படுக்கைகளைக் கட்டிவிட்டார்.

விசயம் புலனாய்வுத்துறை வரை வந்து 'பளிச்' ஆகி விட்டதால் பிடிபட்ட ஆளுக்கும், புலிகளுக்கும் தொடர்பு உண்டென்ற புதுக் கதையையும் அப் பெரி..ய்..ய அமைச்சர் பரப்புவதில் தற்போது ஈடுபட்டுள்ளாராம். பிடிபட்ட ஆள் வாயைத் திறந்தால் 'அ'ணா வாதிகளுக்கும் தனக்கும் உள்ள தொடர்பினை கக்கி விடுவார் என்பதால் 'நிரந்தரமாகவே' அவரது வாயை அடைக்கவும் மேலிடத்தில் சில விசயங்கள் நடக்கிறதாம்.

★ ★ ★




காலம் நல்லாத்தான் மாறிக்கொண்டு போகுது. உண்மையிலை இப்ப நைன்ரியளுக்கு எங்கை மரியாதை கிடைக்குது? வயசு வந்ததுகள் ஏதன் கேட்டால் சொன்னால் இளசுகளுக்கொரு நக்கலும் நளினமுமாயெல்லோ போச்சுது. ஏன் கேக்கிறியள், சொல்லுறியள் உங்கடை பாட்டிலை ஒதுங்கி அதுகளுக்கும் வழி விடுங்கோவன், காவோலை விழ குருத்தோலை சிரிக்கிறதுதானே வழமையெண்டு நீங்கள் நினைக்கிறியளாக்கும்? சரி... சரி... இருந்தாலும் விளக்கைப் பிடிச்சுக்கொண்டு கிணத்துக்கை இறங்கிறதுகளைப் பாக்கவெல்லோ மனசு கேக்காம ஏதாவது சொல்லப்போய் எடக்குமுடக்கா ஆகிப்போகுது!

பெடிக்கு வயசு பதினெட்டுக்கூட ஆகியிராது. ஊரிலை தென்னம்மட்டைக்கை ஒரு வளையத்தைக் கொழுவிக்கொண்டு வளைச்சு வளைச்சு ஓடித் திரிஞ்சவன். வெளிநாடெண்டு வந்ததிலை மட்டுக்கட்ட முடியாதளவுக்கு மாறிப்

## அவசியம்தான்... ஏன் இந்த அவசரம்...?

போயிருந்தாலும் குணம் நடையள் அச்சொட்டா அடையாளம் காட்டுறதால மட்டுக்கட்டிப் பிடிச்சுப்போட்டன். உந்த வயசிலை இங்கினை எதாவது படிச்சுக் கிடிச்சு தங்கடை எதிர்காலத்துக்கு எதாவது வழி அமைச்சுக் கொண்டிருப்பான் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கேக்கைதான், வாழ்க்கை அமைச்சு குடும்பமாகி விட்டாரெண்டு கேள்விப்பட்டனான். பின்ன வழியிலை கண்ட இடத்திலை என்ரை வாயும் சும்மா கிடவாம 'ஏன் தம்பி முன்னுக்கு வரவேண்டிய வயசிலை இவ்வளவு அவசரப்பட்டனீர்?' எண்டு கேட்டு வைச்சதெல்லோ பிழையாப் போச்சு! பெடியன் பதிலை எடுத்து விட்டானே ஒரு சினிமாப் பாட்டிலை....

**'துடிக்கின்ற காதல் தும்மலைப் போன்றது எப்பவும் வரலாம் எவர் கண்டார்.**
**இதயத்தின் ஜன்னல் சாத்தியே கிடக்கும் எப்பவும் திறக்கும் எவர் கண்டார்....'**

இதுக்கு மேலை வாயைக் குடுக்கிறது என்னை மாதிரி வயசு வந்ததுகளுக்கு அழகில்லைப் பாருங்கோ. மிஞ்சிக் கேக்க வெளிக்கிட்டாலும் பொலிஸ் ரேசன் வழியை எல்லோ அனுப்பிப் போடுங்கள்! 'துள்ளித்திரியும் பருவத்திலே துடுக்கடக்கி பள்ளிக்கு செல்ல வைக்காத பாவியாகிய தந்தையே' இப்பிடி பின்னாலை கேட்டுப் போடாதையெண்டு அந்த நாளையிலை என்ர ஐயா 'அடி... ..க்கடி...' சொல்லுவார். ஆனா இப்ப அப்பிடியே..? 'துள்ளித்திரியும் பருவத்திலே துடுக்கடக்கினியளோ உங்களுக்கு சிறைதான்' எண்டு பிள்ளையள் சொல்லுற கலிகாலத்திலை எல்லோ வாழ்ந்து கொண்டிருக்கிறம். ஆனபடியா கொஞ்சம் அடக்கி வாசிக்கிறதுதான் இப்பவுள்ள நிலைமையிலை பெத்தவைக்கு பாதுகாப்பு(!) போல கிடக்குது. ஏனெண்டா அண்டைக்கும் உங்கினை ஒரு பிள்ளை, ஆரையோ விரும்பிப்போட்டுதெண்டு தேப்பன்காரன் கண்டிச்சுப்போட்டாரெண்டு உடனை பொலிசுக்கெல்லோ அடிச்சுச் சொல்லிப்போட்டுது. அவையளும் வீடு தேடிவந்து கூட்டிக்கொண்டு போய்.... பிள்ளையளோட தாய்தேப்பன் எப்பிடி நடந்து கொள்ளவேணுமெண்ட(?) சட்டதிட்டங்களை படிப்பிச்சு அனுப்பியிருக்கினம். அப்ப நிலைமை எப்பிடியிருக்கெண்டு பாருங்கோவன். பெத்தவையின்ரை நிலையே இப்பிடியெண்டா, இடைநடுவில நிண்டு நாங்கள் கேள்வி கேட்டா...? என்னத்துக்கு பொல்லையும் குடுத்து அடியையும் வாங்குவான். ஏதோ தும்மல் மாதிரி வந்தது இருமலாக்கி சளி பிடிக்காமல் பாத்துக்கொண்டா நல்லதுங்கோ.


நாடுவிட்டு நாடு வந்து இப்பிடி தங்கடை பெத்தவையெண்ட உரிமையைக் கூட இழக்கவேண்டிக்கிடக்கே எண்ட கவலைதான் சிலருக்கு. ஆனா மாறிக் கொண்டுபோற தலைமுறை இடைவெளியை சிந்திக்க ஆருக்கு நேரமிருக்குது? ஆக்கப் பொறுத்தாலும் ஆறப்பொறுக்காத அவசர உலகத்திலை எல்லோ வாழ்ந்து கொண்டிருக்கிறம். அதுவும் இளசுகளோட அவசரம் எவையளுக்குப் புரியுது? துள்ளுற வயசு, அதுக்கேத்த மாதிரி இப்ப வாற சினிமாக்களும் 'அரை குறை'யா இளமனசுகளை ஆட்டம்காண வைக்கிற மாதிரி வந்து கொண்டிருக்கேக்கை உதுகளைப் பாத்துப்போட்டு அதுகளும் மனசை எத்தனை நாளைக்கு அடக்கி அடக்கி ஒரு நிலையிலை வைச்சிருக்கிறது? வெள்ளம் நிரம்பினா ஒரு நாளைக்கு அணையை உடைக்கத்தானே செய்யும். ஆனபடியா அணையைப் பெருப்பிக்கிறதைவிட இருந்த வெள்ளத்தை வந்த வெள்ளம் அணையை உடைச்சுக்கொண்டு போகாமல் பாத்துக் கொள்ளுறதிலை தானுங்கோ திறமை இருக்குது.

என்னடா இது, பதினெட்டு வயசிலை விரும்பிச் செய்ததுக்கு அருமையர் இவ்வளவு கடுப்பா நிக்கிறார் எண்டு யோசிக்கிறியளாக்கும்? நீங்கள் யோசிப்பியள்.... காதலிக்க(?) வயசு தேவையில்லைத்தான், ஆனா வாழ்க்கையை புரிஞ்சுகொண்டு வாழுறதுக்கு கொஞ்சம் வயசு தேவைதானே? தாய் தேப்பன் பத்துப் பொருத்தம் பாத்து, பத்தாததுக்கு சாதி, சீதணங்களெல்லாம் பாத்து விலைபேசி விக்கிற வியாபாரப் பொருளா வாழ்க்கை நடத்தாமல், மனசும் மனசும் இணைஞ்சு விரும்பிச் செய்யிறதுகள் அங்கினை சந்தோசமா இருக்கிறது மட்டுமில்லாமல் உந்த சாதியளையும், சீதணங்களையும் உடைச்செறியிற சமுதாயமா வளருகினமெண்டது சந்தோசப்பட வேண்டிய விசயம்தான். அதுக்கா பதினேழும் பதினெட்டும் வெளிக்கிட்டா என்னமாதிரி? குறைஞ்சது இருபதையெண்டாலும் தாண்டியிருக்க வேணுமெண்டதுதான் அடியேனின் அபிப்பிராயம்.

பொறுங்கோ... பொறுங்கோ பெடியன் இன்னும் ஏதோ சொல்லுறான்.... "இந்த வயசிலை இங்கை வந்து, வந்துசேந்த லட்சங்களை உழைக்கவேணுமெண்ட அவசரத்திலை நித்திரைப்பாய் கூட சுருட்ட நேரமில்லாமல் கூட்டுறதோ, கழுவுறதோ, காடியனும் நாயும் சேந்து கலைச்சாலும் மறைஞ்சு மறைஞ்சு ஊதி ஊதி பேப்பர் போடுறதோ, எதெண்டாலும் 'அடிச்சுப்போட்டு சலிப்படைஞ்சு வாற மனசுக்கு எப்பன் ஆறதல் தேடுறது நோமல்தானே'. அதுவும் இங்கை பொன் கிடைச்சாலும் பெண் கிடைக்கிறது எவ்வளவு கஸ்டம். வாறதுகள் ஏற்கனவே 'ரிசேர்வ்' பண்ணினதாயெல்லொ இருக்குதுகள். ஆனபடியா கிடைக்கிற வாழ்க்கையை அமைக்கிறதை விட்டுப்போட்டு வேடிக்கை பாத்துக்கொண்டு இருக்க முடியுமோ" எண்டுறான். நீங்கள் என்ன சொல்லுறியள்...? என்னது...? 'இருபது வயசில் ஆடாமல் அறுபதில் ஆடி என்ன பல' னோ!

**அருமைத்தம்பி**

# B.K. Quality Food & Wine






இந்திய, இலங்கை மளிகைப் பொருட்கள், உடன் மரக்கறி வகைகள், பதனிடப்பட்ட தரமான கடல் உணவு வகைகள், இறைச்சி வகைகள்

HALAL حلال

மற்றும் உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் மலிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

# B.K. Quality Food & Wine

உங்களை இன்பமூட்டும் இசை கானங்கள் அடங்கிய CD, ஓடியோ கசட்டுக்களும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

**236 London Road, West Croydon CR0 2TF.**
**Tel: & Fax: 0181-681 7485**

Pub



# வெளிவந்துவிட்டன

# ரமி மின்










RAMIY
RECORDS



# சூரிச் மேதின பேரணி

சுவிசின் முக்கிய நகரான சூரிச்சில் 01.05.98 காலையில் நடைபெற்ற மேதின பேரணியில், தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் பணியகத்தின் ஏற்பாட்டில் பெருந்திரளான தமிழீழ மக்கள் கலந்துகொண்டனர். தமிழீழ தேசிய கொடியான புலிக் கொடிகளை உயர்த்தியவாறு 'எங்களுக்கு வேண்டியது தமிழீழம்', 'எங்கள் தலைவர் பிரபாகரன்' என்று வானைப்பிளக்க கோஷித்தவாறு மக்கள் கூட்டம் ஒழுங்காக சென்றுகொண்டிருக்க, எம்மினத்தின் பாரம்பரிய இசையான தவில் நாதஸ்வரமும் இசைக்கப்பட்டது.

எமது தாயகத்தில் நடைபெறும் கொடுமைகளையும் அட்டூழியங்களையும் எடுத்துக் காட்டும் வகையில் 'காயக் கட்டு' பேரணியும் இணைக்கப் பட்டிருந்தது. நிஜமாக எம் உடன் பிறப்புகள் படும் அவஸ்தைகளை பிரதிபலிக்கும் இக் காயக்கட்டு பேரணி, அனைத்து மக்களின் கவனத்தையும் ஈர்த்தது. நீண்டுவந்த பேரணி முடிவை எட்டியதும், தமிழீழ மக்கள் ஒன்று திரண்டு எம் தலைவர் கேட்டு நிற்கும் பங்களிப்பைப் பற்றி உரையாடி, குளிர் பானமும் அருந்தி அமைதியாக கலைந்து சென்றனர்.



தொழிலாளர் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்து எழுந்து தொழிலாளர் தினமான மேதினம் உருவாகியிருப்பதுபோல், தமிழர்களும் அடக்கு முறைக்கு எதிராக கிளர்ந்து எழுந்து 'தமிழீழ நாளை' உருவாக்குவார்கள் என்பதை காலம் வரலாறாக்கும். கரிகாலன் படை வரலாறு படைக்க எழுந்திடுவீர், எழுந்திடுவீர் எம்மினியோரே!!

- சங்கையூர் குமார்

# புகலிட நிகழ்வுகள்

## ஜேர்மனியின் மேதின எழுச்சி ஊர்வலம்

ஜேர்மனியில் புலம் பெயர் வாழ் தமிழ்மக்கள் பேர்லின், கம்பேர்க், பிராங்பேர்ட், டுசில்டோப் ஆகிய நகரங்களில் நடைபெற்ற மேதின ஊர்வலங்களில் கலந்து கொண்டனர். ஜேர்மனி உலக தமிழர் இயக்கம் இந்த ஊர்வலங்களை ஏற்பாடு செய்திருந்தது. இரண்டாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் இந்த ஊர்வலங்களில் கலந்துகொண்டனர்.

தமிழீழ மக்கள் படும் இன்னல்களையும் சிறீலங்கா அரசின் தமிழ்மக்களுக்கு எதிரான வன்முறைகளையும் உலகுக்கு எடுத்துக்கூற மேதின ஊர்வலங்கள் உதவின. உலக அரங்கில் சிறீலங்கா அரசின் பொய்ப்பரப்புரைகளை உடைத்தெறியும் வண்ணம் மேதின ஊர்வலத்தின் போது தமிழர்களின் நிலையை விளக்கும் துண்டுப் பிரசுரங்களை மக்கள் விநியோகித்தனர்.

நாதஸ்வர மேளதாள வாத்தியங்களுடன் ஆரம்பமான மேதின ஊர்வலங்களில் காவடியாட்டமும் இடம்பெற்றது. தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரனின் உருவப் படங்களை ஏந்தியவண்ணம் 'எங்கள் தலைவர் பிரபாகரன்' என மக்கள் கோஷமிட்டனர்.

டுசில்டோப்பில் நடைபெற்ற ஊர்வலத்தின் முடிவில் ஜேர்மனி விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் மக்கள் மத்தியில் பேசுகையில், 'விரைவில் நாம் யாழ்ப்பாணத்தைப் பிடிப்போம், தமிழீழம் அமைப்போம்' என்று கூறியதுடன், துன்பப்படும் தமிழீழ மக்களின் கரங்களை புலம் பெயர் வாழ் தமிழர்கள் பற்றிக்கொள்ளுமுகமாக தமது பங்களிப்பைச் செய்யவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# தந்தை செல்வா நூற்றாண்டு விழா

பேர்லின் ஈழத்தமிழர் நலன் புரிக் கழகம் (பதிவு செய்யப்பட்டது) 17.05.1998 இல் நடாத்த விருந்த தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவினை எதிர் வரும் ஆனி மாதம் 21-ம் திகதி (21.06.1998) Wissmann Strasse 32, 10827 Berlin எனும் இடத்திலுள்ள மாநில அரசின் கலாச்சார மண்டபத்தில் நடாத்த உள்ளது.

ஈழத்தமிழர் மகளிர் மன்றம் (பேர்லின்), ஹானப்பிரியா நடனகலாலயம் (பேர்லின்), சங்கீத சலங்கை நாட்டியாலயம் (புதுவை) மாணவ மாணவியரின் நடன நிகழ்ச்சிகளுடன் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் புதுச்சேரி மாநில கிளைத் தலைவர் திரு. வயி. நாராயணசாமி, புதுவை மாநில நீதிபதி திரு. எஸ். இராமலிங்கம், புலவர் - முத்தமிழ் வித்தகர் நம்பி சாரங்கபாணி ஆகியோரும் கலந்துகொள்வார்கள். அத்துடன் திரு. வெ.செ. குணரத்தினம் அவர்களின் 'தமிழும் உலகமும்' எனும் நூல் அறிமுகம் செய்து வைக்கப்படும்.

தந்தை செல்வாவின் நினைவு மலர் வெளியிடுவதற்கு வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் அனுப்ப விரும்புவோர் 31.05.98 இற்கு முன் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Mr.N.C Patrick,
Burkner Str 30, 12047 Berlin.
Tel: 030/6135761

**தமிழ் மாணவர் அமைப்பு ஜேர்மன் கிளை**
**மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப்போட்டி 1998**

**தென் மாநில மெய்வல்லுனர்**
**உதை பந்தாட்டப் போட்டிகள்**

**ஜேர்மன் தமிழ் மாணவர் அமைப்பு 6—வது வருடமாக நடாத்தும் மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகளில் மெய் வல்லுனர் உதைபந்தாட்ட மாநில போட்டிகள் தென்மாநிலத்திலிருந்து ஆரம்பமாகின்றன.**
**தென் மாநிலத்தில் போட்டிகள் நடைபெறும் இடங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:**

**உதைபந்தாட்டப்போட்டி**
**30.05.98 சனிக்கிழமை**
Sport Vereinigung
Feuerbach
Am sportpark -1
70469 Stuttgart -Feuerbach

**மெய்வல்லுனர்போட்டி**
**31.05.98 ஞாயிற்றுக்கிழமை**
Floschen Stadion
Rosen Str -12
71065 Sindelfingen

— தமிழ் மாணவர் அமைப்பு ஜேர்மன்கிளை.

## லண்டன் தேர்தலில் தமிழர் வெற்றி

கடந்தவாரம் இங்கிலாந்தில் நடைபெற்ற மாநகரசபைத் தேர்தலில் வழக்கறிஞரான திரு. செல்வராஜா வெற்றி பெற்றுள்ளார். லண்டனில் 'பிறண்ட்' மாநகர சபைக்கு 'கிங்ஸ்பரி' தொகுதிக்கு இவர் கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிட்டார்.

நடைபெற்ற இத் தேர்தலில் பிறண்ட் கவுன்சிலில் வெற்றி பெற்றவர்களில் தமிழர் செல்வராஜா ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது தேர்தல் வெற்றி இங்கிலாந்தின் தமிழ் சமூகத்திடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திரு. செல்வராஜாவும் அவரது மனைவியாரும் 12 வருடங்களுக்கு மேலாக லண்டன் பிறண்ட் பகுதியில் சட்ட அறிஞர்களாகச் (சொலிசிட்டர்) பணிபுரிவது குறிப்பிடத்தக்கது. இதேவேளை வேறு இரு கவுன்சில்களிலும் இரு 'தமிழர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.'

யுத்தத்தினால் இடம் பெயர்ந்த தமிழீழ மக்களின் புனர்வாழ்வு நிதிக்காக

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம் துலூஸ் வழங்கும்*

**ஒளிவிழா**

**காலம்: 24.05.1998 ஞாயிறு**
**நேரம்: பிற்பகல் 15.30 மணி**
**இடம்: Centre Culturel Alban Minville**
**63, Allee de Bellefontaine,**
**31100 Toulouse**

குறிப்பு: நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பமாகும்.

**அனைவரும் வருக!!!**
**ஆதரவு தருக!!!**

- *தமிழர் புனர்வாழ்வுக் கழகம், துலூஸ்*

*செவ்ரோன் தமிழ் மன்றம் நடாத்தும்*

**ஆண்டுவிழா–1998**

*'செவ்ரோன் தமிழ் மன்ற மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சிகள், பேச்சு, பாட்டு, நாடகம் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறும்.*

**அதிர்ஷ்டலாபச் சீட்டு குலுக்கல் பார்க்கப்படும்**

**காலம்: 31.05.98 ஞாயிறு**
**நேரம்: பிற்பகல் 3.00 மணி**
**இடம்: Salle Des Fetes, Sevran.**
**(Rue Gabriel Peri)**
**RER: B - Sevran Livry (Dir: Mitry Clay)**
**Bus: 607. A.B 147. 618**
**Arrêt: Place Gastion Bussiere.**

**நிகழ்ச்சிகள் இலவசம்!**

**சாந்தினி உணவகம்**

குதூகலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது

14, Rue Perdonnet, 75010 Paris.
Métro: La chappelle / Gare du Nord
**Tel: 01 42 09 37 99**

**காலை — 9.00 மணி முதல்**
**இரவு — 11.30 மணிவரை**

**உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவு**

**காலை:** இட்லி, அப்பம், இலங்கைத்தோசை, மசாலாத்தோசை, இடியப்பம், பிட்டு
**மதியம்:** சோறு (பலவகைக்கறிகளுடன்), பிரியாணி, இடியப்பக்கொத்து, கொத்துறொட்டி, றொட்டி மற்றும் பலவகையான உணவுகள்.
**இரவு:** நீங்கள் விரும்பிய உணவு வகைகள் உண்டு மகிழ்ந்திட நாடவேண்டியது

**சாந்தினி உணவகம்**

Pub

# இத்தாலியில் உதவும் கரங்கள்

கடந்த 19.04.98 ஞாயிற்றுக் கிழமை இத்தாலி பலர்மோவில் தமிழீழ தாயவள் அன்னை பூபதி அவர்களின் 10-வது ஆண்டு நினைவு கூரலுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் 'வன்னிப் பிரதேசத்தில் துன்பப் படும் எம்மவர்களுக்கு அவசர மருத்துவத்திற்கு உதவும் முகமாக' 'உதவும் கரங்கள்' கலை நிகழ்ச்சிகள் தமா இசைக் குழுவின் ஆதரவுடன் நடைபெற்றது.

அண்மையில் தமிழீழ தேசத்திற்குச் சென்று தமிழீழ மக்களுடன் உறவாடி வந்த சிறுமி ஒருவர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அமைதி வணக்கத்தைத் மக்களுக்கும் புலம் பெயர் மண்ணில் வாழும் ஒவ்வொரு தமிழனும் உதவிக் கரங்களாக உதவ வேண்டும் என்றும், இதில் அதிகப்படியாக பெண்களின் பங்கு எதிர்பார்க்கப் படுகின்றது என்றும் இவ் உதவிக் கரங்கள் நிகழ்ச்சிக்குத் தாமாக வந்து உதவிய தமா இசைக் குழுவினருக்கும் விளையாட்டுக் கழகங்கள், மற்றும் கலைஞர்கள் அனைவரையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தோழமையுடன் கைகளைப் பற்றிக் கொள்கிறது எனவும், இனிவரும் காலங்களில் தமிழீழக் கலைஞர்கள் ஒன்றிணைந்து தொடர்ச்சியான பங்களிப்பை எம் தாயக மக்களுக் விடுதலைப் போர்ச் சூழலில் எத்தனை தமிழ் மக்கள் உயிர்ப்புடன் வாழ்கின்றார்கள் என்பதை பல புரட்சிப் பாத்திரங்களுடன், நகைச் சுவைப் பாத்திரங்களையும் சேர்த்து தமிழ் மக்களைச் சிந்திக்க வைத்தனர் அன்புப் பறவைகள் விளையாட்டுக் கழகத்தினர்.

அடுத்து குருநகர் பாடும்மீன் வி. கழகத்தைச் சேர்ந்த தமிழீழக் கலைஞர்கள் வழங்கிய 'புயற்பூக்கள்' என்னும் நாடகம் மேடையேறியது.

இன அடக்கு முறைக்கும், சமூக அடக்கு முறைகளில் ஒன்றான பெண் அடிமைத் தனத்




தொடர்ந்து பலேர்மோவில் இயங்கி வரும் தமா இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

அடுத்து தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் புலம்பெயர் மண்ணில் வாழும் தமிழ் மக்களுக்கு ஆற்றிய உரை வெண்திரையில் காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாலதி கலைப் பள்ளியினர் 'சிங்களம் எங்களைக் கொன்று குவிக்கும்' என்ற பாடலுக்கு அபிநயம் வழங்கினர். காவலூர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வன். ஸெனின் 'அன்னை பூபதியைப் பற்றிய கவிதையை வழங்கிச் சென்றார். அதனைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் பிலிப்பு ராசா பாரிய தேவைகளுக்காக ஏங்கி நிற்கும் எம் தேசத்திற்கும், எம் குச் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து அதாவுரா Residence Hotel இல் நடந்த கண்காட்சியில் தமிழினத்தின் பண்பாடு, கலைகள், நாகரிகம், அவர்களின் விடுதலைப் போராட்ட வரலாறு பற்றி தன் சித்திர, கைப்பணி கலை வடிவத்தினூடாக பங்கு பற்றிய செல்வன் தர்மலிங்கம் முகுந்தன் அவர்களுக்கான நினைவுப் பரிசினை தமா இசைக் குழுவின் நிர்வாகி ஆசிரியர் திரு. ஜெயரட்ணம் அவர்கள் வழங்கி உரையாற்றும்போது, விடுதலைக்கான இந்தச் சிறிய பங்களிப்பில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனத் தெரிவித்தார்.

அடுத்து 'ஒரு தென்றல் புயலானது' நாடகம் மூலம் தமிழீழ திற்கும் எதிரான எங்களின் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு என்ன என்பதையும், பெண்கள் மீதான ஒடுக்குமுறையை மாற்ற ஆயுதப் போராட்டமே இறுதி வழி என்பதையும் இந் நாடகம் சித்தரித்துக் காட்டியது.

# சுவிஸ் பீல் (Biel) நகரில் நடைபெற்ற கலை மாலை

பீல் (Biel) தமிழ்ச்சிறுவர் பாடசாலையும், லிஸ் (Lyss) அன்னை பூபதி தமிழ்ச்சிறுவர் பாடசாலையும் இணைந்து முதல் முறையாக வழங்கிய கலைமாலை நிகழ்வுகள் 18.04.98 நாடுகளின் பங்களிப்பும்' என்னும் தலைப்பில் பெண்குரல் ஒன்று பலமாக ஒலித்து ஆக்க பூர்வமான பலவிடயங்களை எடுத்துரைத்தது. சிறப்புரையாற்றிய சுவிஸ் பணியாளர் ஒருவர்,




இல் நடைபெற்றது. அமைதி வணக்கம், வரவேற்புரையைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் வரிக்கிரமமாக இனிதே ஆரம்பமாயின. இரு பாடசாலை மாணவர்களும் இணைந்து தேசிய கீதத்தை இனிமையாக இசைத்தார்கள். தொடர்ந்து பல எழுச்சி நடனங்கள் இடம்பெற்றிருந்தன. சொலத்தூன் நலன்புரிச்சங்க நடனப்பள்ளி, அன்னை பூபதி நடனாலயம், பீல் நடனப்பாடசாலை ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந் நடனங்கள் வடிவமைக்கப்பட்டன. ஒரு சின்னஞ்சிறுமியின் நாவிலிருந்து சொற்களால் பிறந்த பேச்சு அனைவரையும் ஒருகணம் உலுப்பியிருந்தது. இங்கு நடைபெற்ற வில்லுப் பாட்டை தமிழர் ஒன்றியம் வழங்கியிருந்தது.

கவிதை ஒன்றைத் தொடர்ந்து திமிழீழ விடுதலைப் போராட்டமும் புலம்பெயர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலினால் எமது விடுதலைப் போராட்டம் உச்ச நிலையை அடைந்துவிட்டதாகவும், இதற்காக அனைவரும் முன்வந்து இயன்றவரை கூடுதலான பணப்பங்களிப்பை செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.


'சுக்' தமிழ் வித்தியாலய மாணவர்களால் 'சிதறிய கோலங்கள்' நாடகம் மேடையேற்றி காண்பிக்கப்பட்டது. எழுச்சிகானங்கள் தமிழீழ இசைக் குழுவினரால் எடுத்துவிடப்பட்டது. இவ்விரு பாடசாலை மாணவர்களும் குழுப்பாடல்களையும் வழங்கியிருந்தார்கள். மாணவர்களின் முயற்சியாலும் மக்களின் ஒத்துழைப்பாலும், தமிழீழ கல்வி மேம்பாட்டு நிதியாக 7000 சுவிஸ் பிராங்குகள் வழங்கப்பட்டன. அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு நன்றியுரையை தொடர்ந்து நிகழ்வுகள் யாவும் நிறைவுற்றன.

- தொகுப்பு: அனுஷா

# பல்கலைக்கழக கல்விமான்களுக்கு ஈழப் போராட்ட விளக்கம்

இத்தாலி பணிமனையினால் இவ்வாண்டு முதல் நடாத்தப்படுகின்ற அரசியல் பிரச்சார நடவடிக்கையில் முதற்கட்டமாக கடந்த 19-ம் திகதி Centifico என்னும் பாடசாலையில் பலெர்மோ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு தமிழீழத்தின் தற்போதைய உண்மை நிலவரங்க என்னும் தொலைக்காட்சியினரால் தயாரிக்கப்பட்ட 'பலெர்மோவில் தமிழர்' என்ற வீடியோ நாடாக்களும் ஒளிபரப்பு செய்யப்பட்டன.

தமிழ் மக்களின் போராட்டம் சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு தமிழர் ஒருங்கிணைப்பு குழு சார்பில் கலந்து திகதியும், 06-ம் திகதியும் Galileo என்னும் பாடசாலை மண்டபத்தில் விளக்கம் கொடுக்கப் பட்டது. வீடியோ ஒளிபரப்பும் புகைப்படக் கண்காட்சியும் நடாத்தப்பட்டது. இந்த மூன்று நாட்களிலும் 60-க்கும் மேற்பட்ட விரிவுரையாளர்கள், 100-க்கும் மேற்பட்ட உயர்கல்வி





ளையும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தையும் சிறீலங்கா அரசின் மனித இனப்படுகொலைகள், தேவாலயங்கள் மீதான குண்டு வீச்சு போன்ற உண்மையின் சாட்சியங்களான வீடியோ ஒளிப்பதிவு நாடாக்கள், இத்தாலி Rai கொண்ட பிரதிநிதி பதில் வழங்கினார்.

இதன் பிற்பாடு விரிவுரையாளர்கள் கேட்டுக்கொண்டதின் பிரகாரம், தமிழர்களின் பிரச்சினையை அறிய மிகவும் ஆவலாக உள்ள உயர் வகுப்பு மாணவர்களுக்கும் கடந்த 28-ம் மாணவர்களும் கலந்துகொண்டு ஆர்வத்துடன் வினாக்களை தொடுத்தனர்.

இவர்களுக்கு தெளிவான விளக்கம் கொடுக்கப்பட்டு, ஆங்கில பிரெஞ்சு, இத்தாலி மொழிகளில் துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

# தமிழாலயங்களுக்கிடையிலான தமிழ்த் திறன் இறுதிப்போட்டி

ஜேர்மன் உலகத் தமிழர் இயக்க கல்விப் பணியின் கீழ் இயங்கும் தமிழாலயங்களிற்கிடையேயான தமிழ்த்திறன் மாநிலப் போட்டிகளில் தெரிவான மாணவருக்கான இறுதிப் போட்டி 23.05.98 சனியன்று ஒபாகௌசன் நகரில் நடைபெறும். போட்டிகள் அனைத்தும் காலை 9.00 மணிக்கே ஆரம்பமாகிவிடும். வடமாநிலம், மத்திய மாநிலம் 1, மத்தியமாநிலம் 2, தென்மாநிலம் ஆகிய மாநிலங்களில் மாநில ரீதியாக தெரிவுப் போட்டிகள் நடைபெற்றன. அதில் தமிழ் ஆலயங்களில் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்ற மாணவர்கள் கலந்துகொண்டனர். 75 மாணவர்களுக்கு மேற்பட்ட தமிழாலயங்களில் இருந்து முதல் இரு இடங்களில் தெரிவானோர் கலந்துகொண்டனர். மாநிலப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் ஒபகௌசன் நகரில் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

திருக்குறள் மனனம், பேச்சு, கட்டுரை, கவிதை, வாசிப்பு, சொல்வதெழுதல், உருப் பெழுத்து ஆகிய பாடங்களில் மாணவர்களின் தமிழ்த்திறன் இப் போட்டிகளில் பரீட்சிக்கப் படும்.

— வீ.ஆர். வரதராஜா




அத்தியாயம் 8

**முன்கதைச் சுருக்கம்:-**

**(அந்தக் கரையோர கிராமத்தில் வறுமையின் கொடுமையால், அன்ரனியும் தகப்பனும் கடலுக்குச் செல்கின்றனர். அங்கு நேவியிடமிருந்து தப்பி, அன்ரனி மட்டும் வீட்டுக்கு வருகின்றான். பின்பு தாயின் வற்புறுத்தலால் அன்ரனி வெளிநாடு செல்ல, அருள் இயக்கத்திற்கு போகின்றான்.)**

அன்று ஞாயிற்றுக்கிழமை அமைதியாகப் புலர்ந்தது. மரியா அடுப்படி வாசலில் குந்தியிருந்து தேநீர் குடித்துக்கொண்டிருந்தாள். அன்று கண்விழித்த நேரம் தொடக்கம் அவளின் மனம் அமைதியின்றி தவித்துக்கொண்டு இருந்தது. பூமரங்களுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்த மேரி 'என்ன அம்மா... யோசிக்கிறாய்... நீ கடைக்குப்போய் பாண் வேண்டியந்திட்டு குளியன்... இண்டைக்காவது கோயிலுக்கு போவம்...' என்று கூற, மரியாவும் தலையாட்டியபடி கடைக்குச் சென்றாள்.

'இப்பதான் ஏதோ கடன் எல்லாம் முடியுது இனி மேரிக்கும் கலியாணம் பேசோணும்... இந்த நேரத்தில அந்தாளும் இருந்திருந்தால்...' என்று பலவாறாக எண்ணியபடி கடையைச் சென்றடைந்தாள்.

கடைக்காரப் பெடியன் 'என்ன மரியாக்கா பெடியன் கடிதம் போடுகிறவனோ?... என்று விசாரிக்க 'ஓமடா தம்பி... அவன்ரை கடிதம் வாறது பிரச்சினையில்லை! உவன் சின்னவனைத்தான் கனநாள் காணேல்லை. கோதாரியில போன பிரச்சினையை பேசி... கீசி முடிக்கிறாங்களில்லை.. எங்கட நாட்டை உவங்கள் பிரிச்சுத்தரலாம் தானே... எத்தினை பெடியள் அநியாயமாக சாகுதுகள்... இவனை விட்டிட்டு வரச்சொன்னாலும் வாறானில்லை...' என்று பெருமூச்சுடன் பதில் சொன்னாள்.

அதற்கு கடைக்காரப் பெடியன் புன்முறுவலுடன் 'நீயோ ஒரு பிள்ளையை இயக்கத்துக்கு அனுப்பி இருக்கிறாய்...? ஒரு வீட்டிலேயே மூண்டு நாலு எண்டு இப்ப போயிருக்குதுகள்...! இந்த மண்ணில பிறந்தமாம்... செத்தமாம் எண்டு இருக்கக்கூடாது. இந்த மண்ணுக்கு பிரயோசனப் படுகிறமாதிரி... லட்சியத்தோட வாழ்ந்து சாகவேணும்...! எப்ப எங்கட மண்ணுக்கு விடுதலை கிடைக்குதோ அண்டைக்குத்தான்... நீ உன்ரை பிள்ளையை எதிர்பார்க்கலாம்...' என்று தனது இரு உடன்பிறப்புகளின், மகத்தான தியாகத்தினை நெஞ்சில் நிறுத்தியபடி கூறினான்.

'இவனோட நிண்டு இனியும் கதைச்சால் என்னையும் மாத்தி, இயக்கத்துக்கு அனுப்பிப் போடுவான்...' என மெல்ல முணுமுணுத்தபடி, பாணை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு போனாள். மேரி கோவிலுக்கு போவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தாள். 'நானும் கெதியா குளிச்சிட்டு வாறன். உந்த அண்டங்காகம்... என்ன இடியேறுக்கு கரையுதோ... தெரியேல்லை...! ஒருக்கா அந்தச்சனியனை கலைச்சுவிடடி... பிள்ளை' என்று மனதிலுள்ள மூட நம்பிக்கையின் தீண்டுதலால் கூறியபடி கிணற்றடிக்குச் சென்றாள்.

காகத்தை துரத்திக்கொண்டு இருந்த மேரிக்கு, வாசலில் 'டக்..டக்' என்ற மோட்டார் சயிக்கிளின் ஒலி கேட்டது. 'அருள்தான் வாறான் போல கிடக்கு...' என்று எண்ணியவாறு வாசலை நோக்கி, விரைந்தாள். ஆனால் அங்கு அருள் இல்லை. அருளுடன் வரும் இரு போராளிகள் நின்றார்கள். தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு 'வாங்கோ' என்று அவர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்று, உள்ளே அழைத்துக்கொண்டு சென்றாள். வழமையாக அவர்கள் முகத்தில் காணப்படும் கலகலப்பு இன்று மறைந்து போயிருந்ததைக் கண்டு துணுக்குற்ற மேரி 'தம்பி ஏன் வரேல்லை...' எனக் கேட்டாள். அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் இருவரும் தடுமாறிக்கொண்டு இருக்க, அதைக் கவனியாத மேரி, 'அம்மா...அம்மா...' எனக் குரல் கொடுத்தாள்.

வாசலில் கேட்ட ஓசைகளால், அரை குறையாக குளியலை முடித்துக்கொண்டு திண்ணைக்கு வந்த மரியா, அவர்களைக் கண்டதும், தனது பிள்ளையை நேரில் கண்டதுபோன்ற மகிழ்ச்சியுடன் 'தம்பிமாரே... வாங்கோ எப்பிடி சுகமா இருக்கிறீங்களோ...? அருள் எப்பிடியிருக்கிறான்' என விசாரித்தாள். இதைக் கேட்ட இரு போராளிகளினதும் கண்கள் சிவந்தன. எப்படி ஆரம்பிப்பது என்று புரியாமல் நின்றார்கள். பெற்று, வளர்த்து, சீராட்டிய அந்தத் தாயிடம் உண்மை சொல்லத் தெரியாமல், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்.

அருகில் நின்ற மேரியைப் பார்த்து 'பிள்ளை தேத்தண்ணி வை' என்று மரியா சொல்ல 'அம்மா... ஒண்டும் வேண்டாம்... நாங்கள் அவசரமாக போகோணும்' என்று கூறி, சிறிது நேரத் தயக்கத்தின் பின் 'அம்மா இண்டைக்கு.... விடியப்பறம் அருள் கரும்புலியாகப் போய்.... நேவியொண்டை அடிச்சு வீரமரணம் அடைஞ்சிட்டார்...' என்று ஒருவாறு கூறி முடித்தனர்.

மரியாவும் மேரியும் தலையில் அடித்து 'ஐயோ... என்ரை அருள்...' என கதறி அழுதார்கள். 'என்ரை சின்னவா... என்னை விட்டிட்டு போக எப்பிடியடா உனக்கு மனம் வந்தது....!!!' என்று ஒவ்வொன்றையும் சொல்லிச் சொல்லி அழுது களைத்து, கடைசியில் மரியா மயக்கமானாள். கோவிலுக்குச் சென்றவர்கள் எல்லாரும் மரியாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

செய்வேத்தி, ஒரு மூலையில் இருந்து அழுதுகொண்டிருந்தார். அருள் கடைசிப் பிள்ளை என்றபடியால் மச்சாள்மார் தொடக்கம், எல்லோரும் அருளில் நல்ல பாசம் வைத்திருந்தார்கள். யாரோ ஒருவர் அங்கு கவலையுடன் சொல்லிக்கேட்டது 'விடியப்பறம் தூரத்தில ஒரு பெரிய வெடிச்சத்தம் கேட்டதுதான்... அது இப்பிடி வரும் எண்டு ஆருக்கு தெரியும்...! இவள் மரியாவை ஏன் ஆண்டவன் இப்பிடி அடிக்கடி சோதிக்கிறார்?

செய்வேத்தியின் மனைவி மேரியின் அருகில் சென்று, அவளை அணைத்து ஆறுதல் கூறினாள். மாமியாரின் முதுகில் சாய்ந்த மேரி 'கடைசியா அருள் வரேக்கை... தன்ரை பூமரத்துக்கெல்லாம் வடிவா தண்ணி ஊத்தக்கா..! என்ரை படத்துக்கு இந்தப் பூவாலதான் மாலைகட்டிப்போடவேணும் எண்டு சொல்ல... நான் அழுதுபோட்டு.... அவனை பேசினனான்... கடைசியில அது உண்மையாகவே போச்சு மாமி...' என்று சொல்லி பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினாள். அவளுக்கு எப்பிடி ஆறுதல் சொல்வதென்று புரியாமல், எல்லோரும் அமைதியாக இருந்தார்கள்.



ஊர் முழுக்க கட்டப்பட்ட தோரணங்கள் காற்றுடன் தங்களின் சோகத்தை பேசி ஓய்ந்தன. கடல் அலைகள் கரையுடன் மோதி அஞ்சலி செலுத்திக்கொண்டு இருந்தன. அப்பாவிகளின் உயிர்களை வேட்டையாடியவர்களை அதற்கு உரித்தானவர்களால் எப்படி களையெடுக்கப்பட்டார்கள் என்பதை, ஒவ்வொரு அலையும் சொல்லிக்கொண்டிருந்தது.

அஞ்சலிக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. அதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். எல்லோர் முகங்களிலும் எதிரியை அழித்த சந்தோஷம் இருந்தாலும், அந்த மாவீரர்களின் இழப்பைத் தாங்க முடியாத சோகமும் அப்பியிருந்தது. முகம் தெரியாத எத்தனையோ பேர் வந்து, எவ்வளவோ ஆறுதல் வார்த்தைகளை மரியாவிற்கு கூறிச் சென்றார்கள். ஆங்காங்கே 'வரி வரி' சீருடையில் போராளிகள் தங்கள் கடமைகளில் ஈடுபட்டிருந்தார்கள். மாவீரன் அருளின் படத்துக்கு மரியாவும் மேரியும் மாலை சூட்டும்போது இருவருமே கதறி அழுத காட்சி அங்கு நின்றவர்களின் மனதை உருக்கியது.

நாட்கள் நகர்ந்தன, மரியாவோ பித்துப் பிடித்தவள் போல் இருந்தாள். எந்நேரமும் சலனமற்று அருளின் படத்தையே பார்த்துக்கொண்டிருப்பாள். மேரி, இவ்வளவு நாட்களும் தனது சோகத்தை மறைத்து, தாய்க்கு ஆறுதல் கூறியவள், இப்பொழுது தன்னையே தேற்ற முடியாமல் தவித்தாள். துக்கம் விசாரிக்க வந்தவர்கள், கொஞ்சம் கொஞ்சம் போகத்தொடங்கியதும், சோகத்தின் எல்லையில் இருவருமே தவிக்கத் தொடங்கினார்கள்.

அருளின் பிரிவின் பின்பு, அவர்கள் வீட்டில் அடுப்பு எரிந்தே நீண்டநாட்களாகின்றது. செய்வேத்தி குடும்பந்தான் அவர்கள் இருவரையும் தேற்றி ஒரு நேரமாவது சாப்பிடவைத்துக்கொண்டிருந்தார்கள். அன்று பின்னேரம் மரியா மருமகள் கொண்டுவந்த பிட்டை கடமைக்கு கையிலெடுத்து கொறித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அவர்கள் வீட்டுக்கு வந்த மக்கள் தொண்டர் நிறுவன ஊழியர் ஒருவர் வந்து ஒரு கடிதத்தை செய்வேத்தியிடம் கொடுத்தார். அவசரமாக அந்தக் கடிதத்தை பிரித்து படித்த செய்வேத்தி, ஆனந்தத்தில் துள்ளியபடி 'மரியா... அத்தான் பலாலி காம்பிலை இருந்து கடிதம் போட்டிருக்கிறார்.... இன்னும் ஒரு மாதத்தில் வாறாராம்...' என்று கூறினார். அதைக்கேட்ட எல்லோரும் மகிழ்ச்சியில் திளைத்தனர். இறந்துவிட்டான் என எண்ணிய ஒருவன், உயிருடன் திரும்பி வருவதென்றால் எவ்வளவு சந்தோஷமாகவிருக்கும். நீண்ட நாளைக்கு பிறகு, தாயின் முகம் தெளிவடைந்திருந்ததைக் கண்ட மேரி 'இனி அம்மாக்கு... அப்பா வந்தால் எல்லாத் துயரத்திற்கும் ஒரு ஆறுதல் கிடைக்கும்' என்று மனதினுள் திருப்தியுற்றாள். அன்று இரவு மரியா 'அந்தாள் வர... அருளைப் பற்றி நான் என்னத்தைச் செல்லுறது... எந்த நேரமும் அவரின்ரை காலைச் சுற்றிக்கொண்டிருப்பானே...' என்று அழுதபடியே உறங்கிப் போனாள்.

ஆனால் மேரிக்கு உறக்கத்திலும் அருள் வந்து அவளின் வேதனையை தூண்டிக்கொண்டே இருந்தாள். ஒவ்வொரு இரவும் தாய்க்கு தெரியாமல் எழுந்து அழுதுகொண்டிருப்பாள். அருளின் ஏக்கம், நாளுக்கு நாள் மேரியின் மனதில் குடிகொண்டு, இறுதியில் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள்.

*(தொடரும்)*

---

## நடைபாதை குறிப்புகள்

# வேலையற்ற வேலை

*கடந்தவாரம் பாரிஸ் 19-ல் உள்ள Place des Fêtes என்ற இடத்தில் சமூக விடுதலைக்கான சப்பாத்திஸ்தாக்களின் கூட்டமைப்பு, பாலஸ்தீனியர்கள் நாடற்றவர்களாக்கப்பட்ட 50-வது ஆண்டை நினைவு கூரும் முகமாக ஒரு ஒன்று கூடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.*

*வெய்யில் அனலாகச் சுட்டெரித்த ஒரு மாலைப் பொழுதில் நடந்த இந்த ஒன்றுகூடலுக்கு மிகச் சொற்பமான மக்களே வந்திருந்தனர். ஆயினும் இந்த ஒன்ற கூடல், Place des Fêtes மெத்ரோ வாசலில் நடைபெற்றதால் பல நூற்றுக் கணக்கான பயணிகள் அங்கு வைக்கப்பட்டிருந்த சுலோக அட்டைகளையும், பதாகைகளையும் பார்வையிட்டுச் சென்றனர்.*

*இந்த ஒன்றுகூடலை ஏற்பாடு செய்திருந்த அமைப்பின் தொண்டர்கள், ஒன்று கூடலின் நோக்கத்தை விளக்கும் அறிக்கைகளையும், சிறு பத்திரிகைகளையும் 1 பிராங்குக்கு விற்பனை செய்துகொண்டிருந்தார்கள்.*

*பிரெஞ்சுக்காரர்கள், அரேபியர்கள், ஆபிரிக்கர்கள் என்று பல்வேறு நாட்டவர்களும் அந்தத் துண்டுப் பிரசுரங்களையும், பத்திரிகைகளையும் வாங்கிச் சென்றார்கள். வாங்க விருப்பமில்லாதவர்கள் கூட ஒரு நிமிடமாவது அந்த இடத்தில் நின்று அங்கு நடப்பதைப் பார்வையிட்டுக் கொண்டும் அங்கு சொல்லப்படும் கருத்துக்களை கேட்டுக்கொண்டும், சென்றார்கள்.*

*நம்முடைய தமிழ் இளைஞர்கள் 2 பேர் அந்த இடத்துக்கு வந்தபோது சப்பத்திஸ்தா தொண்டர் ஒருவர் Tous palestiniens (எல்லா பாலஸ்தீனியர்களுக்குமாக) என்ற துண்டறிக்கையை அவர்களிடம் நீட்டி 1 பிராங் என்றார்.*

*பிச்சை கேட்க வருபவனை அலட்சியம் நிறைந்த அருவருப்பான பார்வை பார்ப்பதுபோல நம்மவர்கள் அந்த தொண்டனைப் பார்த்துவிட்டு,*

*'எங்களுக்கு இதிலையெல்லாம் அக்கறையில்லை' என்று ஐரோப்பியப் பாணியில் தோள்மூட்டுக்களை உயர்த்தி கண்ணைச் சுருக்கிக்கொண்டு சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்கள்.*

*அவ்வாறு நகரும்போது அந்த இரண்டு இளைஞர்களில் ஒருவர் 'உவங்களுக்கு வேறை வேலையில்லை. இந்த வெய்யிலுக்கு கொப்பின்மாரை (காதலிகள் - சிநேகிதிகள்) கூட்டிக்கொண்டு பாக், பீச் எண்டு போகாமல் இப்பிடி மெத்திரோ வாசல்லை நிண்டு போராட்டம், ஆர்ப்பாட்டம் என்று கழுத்தறுக்கிறாங்கள்' என்று சொல்ல, மற்றவர் 'மச்சி, இது இவர்களுக்கு ஒரு பிழைப்பாப் போச்சடா, பார் எல்லாம் நயின்ரியள் தான் நிக்குதுகள் 'நல்ல வெள்ளைத் தோல் பிகருகள் நிண்டாலாவது இதிலை கொஞ்ச நேரம் மினெக்கடலாம். இது வேஸ்ட். வா' என்று சொல்லிக்கொண்டு நடையைக் கட்டினார்கள்.*

*அங்கே இருந்த சப்பாத்திஸ்தா தொண்டர்கள், உலகெங்கும் அகதிகளாக்கப்பட்ட - நாடற்றவர்களாக்கப்பட்ட - தங்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அனைத்து மக்களும் பாலஸ்தினியர்களே! என்று பிரகடனம் செய்தது அந்தத் தமிழ் இளைஞர்களின் காதுகளில் விழுந்திருக்க நியாயமில்லை.*

# கறுப்பு மழையும் நாய்க்குடைக் காளான்களும்

ஆறாவது நாடாக இந்தியாவும் அணு வெடிப்புச் சோதனை செய்தாகி விட்டது. அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. இன் வேவுபார்க்கும் செயற்கைக் கோள்களுக்கும் தப்பி நடந்த 5 அணுவெடிப்புச் சோதனைகள் அமெரிக்க அதிகாரத்தை கோப முறச் செய்திருக்கிறது.

உடனடியாக அமெரிக்காவும் ஜப்பானும் இந்தியா மீது பொருளாதாரத் தடை விதித்து விட்டன. இந்திய பயங்கர வாதத்தைக் கண்டிப்பதும், இந்தியாவை நசுக்குவதுமான (Crush India) பதாகைகளைத் தாங்கி பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் நடந்த ஊர்வலங்களை பி.பி.சி. யும், சி.என்.என். உம் ஒலிபரப்பியாகிவிட்டது.



மிக முக்கியமாக எதிர்வினை வரவேண்டிய சூழலியல் இயக்கமான 'கிரீன்பீஸ்' சர்வதேசியச் செயலகப் பேச்சாளரும் இந்தியாவின் அணுவெடிப்பைக் கண்டித்து அறிக்கை விட்டுவிட்டார். இந்தியப் பிரதமர் வாஜ்பாய், 'அமெரிக்காவை நம்பி இந்தியா இல்லை; இந்தியா தனது சொந்தக் காலில் நிற்கும்' என காட்டமாக பில்கிளின்டனுக்குச் சொல்லியிருக்கிறார்.

மேற்கில் ஏனிந்த ஆரவாரம்? இந்தியாவில் ஏன் இந்த உற்சாகம்?

மனிதகுலத்தை நேசிக்கிற எவனும், அழிவுக்கான அணு வெடிச் சோதனைகளை ஏற்க இயலாது. யுத்தவெறியை சதா தூண்டி பதட்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதையும் சகித்துக் கொள்ளமுடியாது.

எந்தப் பிரச்சினையையும் போலவே அணுவெடிப்புச் சோதனைகளுக்கும், அணு குண்டு யுத்த பயங்கரத்திற்கும் ஒரு வரலாறு இருக்கிறது. இப்பிரச்சினையை வெறுமனே அறவியல் கண்ணோட்டத்தில் மட்டுமே அணுக இயலாது. சர்வதேசிய அரசியல், சர்வதேசிய அதிகார மையங்களுக்கான போட்டா போட்டி போன்றவற்றின் மூலமும் இதை அணுக வேண்டியிருக்கிறது.

இரண்டாம் உலகப் போர்க்கால கட்டத்தில் முதன்முதலாக ஜப்பானில் நாகசாகியில், ஹிரோசிமாவில் அணுகுண்டை போட்டான் அமெரிக்கன். ஹிட்லர், ஸ்டாலின் என அனைவருமே உலக அதிகாரத்தின் மைய இடத்துக்காக அணுகுண்டுச் சோதனைகளைச் செய்தே இருந்தனர்.

தற்போது உலகின் ஐந்து வல்லரசுகள் அணுகுண்டுகளைச் செய்து தயார் நிலையில் வைத்திருக்கின்றன. அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், சீனா போன்ற நாடுகள் அணு வல்லரசுகளாக இருக்கின்றன.

இவர்கள் மட்டும் வைத்திருக்க என்ன காரணம் சொல்லப்படுகிறது? தாங்களுக்குத் தாங்களாகவே உலகின் காபந்தாளர்களாக முடி சூட்டிக் கொண்ட இவர்கள் இப்போது கூச்சலிடுவதற்கான தார்மீகத் தன்மை கொண்டவர்களா?


இன்று நடந்து கொண்டிருப்பது சர்வதேசிய அதிகாரத்திற்கான சண்டை, கலாச்சாரங்களுக்கு இடையிலான சண்டை.

உலக நாகரிகத்திற்கும் உலக அமைதிக்கும் தாங்கள் மட்டும் தான் காரணகர்த்தாக்களாக இருக்க முடியும் என்று இந்த வல்லரசுகள் சொல்கின்றன. மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுதம் விற்பதே இவர்களது பிரதான உற்பத்தியாக இருக்கிறது. அதே வேளை ஆயுத பலத்தை வைத்தே இவர்கள் நாடுகளை மிரட்டி வருகிறார்கள்.

இவர்களிடம் மட்டும் அணு ஆயுதங்கள் இருக்கும் வரை உலகம் பாதுகாப்பாக இருக்குமாம். மனித நாகரிகம் பாதுகாக்கப்படுமாம். ஐரோப்பிய நாகரிகமும் இன்றைய பொருளாதார வல்லரசாகி விட்ட சீன நாகரிகமும், மட்டும்தான் உலகுக்குப் பாதுகாப்பைத் தர முடியுமாம். நிச்சயமாகவே நாம் அறிவோம். இவர்கள் உலகத்தை தங்களுக்கிடையில் மட்டும் கூறுபோட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது இந்தியாவும் அதிகாரத்திற்கான போட்டியில் இறங்கியிருக்கிறது. மேற்கத்திய முஸ்லீம் மக்களை ஒடுக்கிக் கொண்டிருக்கிறது.

ஆகவே இந்து அடிப்படைவாதம் என்பதையிட்டு இந்த கிறிஸ்தவ அடிப்படைவாதிகளும், கான்பூஜியன் அடிப்படைவாதிகளும் தம்மை நியாயப் படுத்திக்கொள்ள முடியாது.



சீனா ஒரு எலிபிடிக்காத பூனை என்று தன்னைச் சொல்லிக்கொள்ள முடியாது. வியட்னாமை ஆக்கிரமித்தன சீனப் படைகள். திபெத்தை ஆக்கிரமித்திருக்கிறது சீனப்படை. இப்போது உலகைக் கூறுபோடும் சக்திகளுடன் இந்தியாவும் இணைந்திருக்கிறது. பாகிஸ்தானின் இஸ்லாமிய அடிப்படைவாதம், எப்போதுமே உலக இஸ்லாமிய அடிப்படைவாதம் மாதிரியே இரட்டைத் தன்மை கொண்டது. ஒரே நேரத்தில், ஒருபுறம் அமெரிக்காவோடு கூடிக்குலவும் மறுபுறம் அமெரிக்கக் கொடிகளையும் எரிக்கும்.

**ஜமுனா ராஜேந்திரன்**

**உலக நாகரிகத்திற்கும் உலக அமைதிக்கும் தாங்கள் மட்டும்தான் காரணகர்த்தாக்களாக இருக்க முடியும் என்று இந்த வல்லரசுகள் சொல்கின்றன. மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுதம் விற்பதே இவர்களது பிரதான உற்பத்தியாக இருக்கிறது. அதே வேளை ஆயுத பலத்தை வைத்தே இவர்கள் நாடுகளை மிரட்டி வருகிறார்கள்.**

தகவல் தொடர்பு சாதனங்களில் இந்த அணுவெடிச் சோதனைச் செய்தியில் கூடவே இடம் பெறும் இன்னொருவாசகம் 'இந்து அடிப்படைவாதம்' எனும் சொல்.

அமெரிக்கா கிறிஸ்தவ அடிப்படை வாதமாகத்தான் இருக்கிறது. ஆகவேதான் ஈராக் மீது குண்டுபோடுமுன் புஷ், தேவாலயத்திற்குப் போய் பிரார்த்தனை செய்துவிட்டு வந்து மக்களைக் கொன்றொழித்தான். சீனா, கான்பூஜியன் அடிப்படைவாத நாடாகத்தான் இருக்கிறது. ஆகவேதான் திபெத்தை ஆக்கிரமித்து மிரட்டிக்கொண்டிருக்கிறது. சீனாவின் சிறுபான்மை

ஈராணிடம், இஸ்ரேலிடம், வடகொரியா-தென்கொரியாவிடம், ஈராக்கிடம் இரகசிய அணு ஆயுதங்கள் இருக்கிறது என்பது சர்வதேசிய அரசியலில் பகிரங்க ரகசியம். தனது நாட்டில் சிறுபான்மை கிறிஸ்தவர்களைக் கொன்று குவிக்கும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அடிப்படைவாதத்தை ஊட்டி வளர்க்கும் பாகிஸ்தான் இந்தியாவை பயங்கரவாத நாடு எனச் சொல்வதற்கு தார்மீகப் பொறுப்பற்றது.

இந்த அணு வெடிப்புக் குறித்து இந்தியாவில் ஏனிந்த ஆரவாரம்! தேசியப் பெருமிதம் கொள்ள ஏதேனும் காரணங்கள் உண்டா?

இந்திய நடுத்தரவர்க்கம் நெஞ்சை நிமிர்த்தி எக்களிக்கிறது. சாதாரண மனிதனின் வாழ்வில் இவ் அணு வெடிப்பு மாற்றம் எதையும் கொண்டு வந்து விடப்போவதில்லை.

இந்தியா என்ற ஒருதேச உணர்வு ஒரு காலத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டத்தால் கட்டமைக்கப்பட்டது. இன்று அப்படியான அடிப்படைகள் ஏதுமில்லை. பாரதிய ஜனதா அதற்கு மாற்றாக இந்து அடிப்படைவாதத்தை ஒன்றிணைக்கும் கருத்தியலாக முன் வைத்திருக்கிறது.

இன்றைய யுகம், 'அடையாளத்துக்கான கோஷம்' உயர்ந்து கேட்கும் யுகம்.

வலதுசாரி தேசியம் கூட மக்களை ஒன்றுதிரட்ட முடியும். வலதுசாரி சந்தர்ப்பவாதம் கூட ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளடக்கம் கொண்டதாக தன்னைக் காட்டிக் கொள்ள முடியும்.

மத அடிப்படை வாதங்கள் அரச இயந்திரங்களில் நேரடியான உறவைக் கொண்டிருக்கிறது. அவை அதிகார மையங்களை அணு ஆயுதங்களை உலக ஆதிக்கத்தை வேண்டி நிற்கின்றன. இந்த ஆதிக்கத்துக்கான கருவியாக தற்போது விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் மேலாதிக்கம் நின்றுகொண்டிருக்கிறது.

'ஜீன்ஸ்' படமெடுத்த சங்கர் தொழில்நுட்ப புத்திசாலி எனப் புகழப்படும் சூழலில், அணு வெடித் தொழில் நுட்பத்தால் சராசரி இந்தியனின் வாழ்நிலையை இந்திய அரசியல்வாதிகள் மாற்றிவிட்டார்கள் - இந்தியாவின் மேன்மையை உயர்த்தி விட்டார்கள் என்று புகழ்வதில் என்ன வித்தியாசமிருக்கப் போகின்றது.

மதச் சார்பற்ற விடுதலை இறையியல் மட்டுமே எதிர்காலத்திற்கான சாத்தியமான இறையியலாக இருக்க முடியும். மதங்களை பண்பாட்டுடன் சமப்படுத்திப் பார்க்க முடியாது. மதங்கள் நாகரிகத்துக்கு உரிமை கொண்டாட முடியாது.

அணு ஆயுதம் பற்றி கூச்சல் போடும் பிரிட்டன்தான், இந்தோனேசிய மாணவர் எழுச்சியை ஒடுக்க ஆயுதம் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது. சென்னை வரை பாயும் ஏவுகணையை வைத்துக்கொண்டிருக்கும் பாகிஸ்தான்தான் இந்திய பயங்கரவாதம் பற்றி கூச்சல் எழுப்பிக் கொண்டிருக்கிறது. சிறுபான்மைத் தமிழ் மக்களைக் கொல்லும் சிறிலங்காதான் இவ்வெடிப்பு பிராந்திய பதட்டத்தை ஏற்படுத்தும் எனச் சொல்கிறது.

இந்திய அணு வெடிப்புச் சோதனை தொடர்பான விவாதம் பொய்யானது. இரட்டைத் தன்மை வாய்ந்தது. உலகின் பிரச்சினைகளைத் திசை திருப்ப வல்லது. உலகின் மேலாதிக்கத் திற்கானது.

இதை உணர்ந்து கொள்கிற எவனும் அமெரிக்காவுடனும், ஐரோப்பாவுடனும் மேற்கொள்கிற அதே தரப்படுத்தலைத்தான் இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் மேற்கொள்வான்.

'பியானோவில்பட்டுத் தெறித்தது ஐன் ஸ்டீனின் கண்ணீர்த் துளி' என்று ஹிரோசிமா சோகம் பற்றி எழுதினான் தமிழன் சாகா வரம் பெற்ற கவி தர்மு சிவராம். 'விரிகிறது இன்னும் விரிகிறது இன்னும் நாய்க்குடைக் காளான்கள்' என்று அணுகுண்டு வெடிப்பை அருவருப்புடன் பார்த்தார் கவிஞர் சிற்பி.

கறுப்பு மழை (Black Rain) என்றொரு ஜப்பானியத் திரைப்




படம், ஹிரோஷிமா நாகசாகியின் அன்றைய தின சோகத்தை திரையில் துன்பியல் காவியமாகப் படைத்துத் தந்தது.

கறுப்புமழை மானுட சமுத்திரத்தை விஷமாக்கும். நாய்க்குடைக் காளான்கள் பூமிக்கு சேதம் விளைவிக்கும். இன்று சிந்திக்கிறவர் எவரினதும் கலைஞர்களுடையதும் கடமைதான் என்ன?

அணுவெடிப்புச் சோதனையில் உள்ள அரசியலை விளங்கிக்கொள்வதும், அதனது அறவியல் தன்மைக்கான மனித உயிரின் இருத்தலுக்காகக் குரல் கொடுப்பதும்தான்.


ஆரவாரங்கள் ஓய்ந்த பின்னால் அமைதியின் குரலே உரத்துக் கேட்கும்.

ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்புகொள்ள
வேண்டியது
தொலைபேசி:
0148765190 அல்லது
0607622689
Pub

# 10-வது ஆண்டு நினைவஞ்சலி



தாயகமண்ணில்:
25.07.1961

தாயக மண்ணுக்காக:
20.05.1988

## கப்டன் ராமேஸ்மாஸ்ரர்

**பொன்னையா சிவஞானசுந்தரம் (பொலிகண்டி)**

(தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு)

'இலட்சிய வேங்கைகள் இறப்பதுமில்லை'
'விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை'

20.05.1998 இல் வடமராட்சி வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டபோது ஏற்பட்ட மோதலின்போது உயிருடன் எதிரியின் கையில் பிடிபடக்கூடாது என்ற விடுதலைப் புலிகளின் கொள்கைக்கு அமைய சயனைட் அருந்தி தமிழீழ மண்ணின் விடிவுக்காக தன்னையும் மாவீரரின் பட்டியல் வரிசையில் இணைத்துக் கொண்டார்.

அன்றைய தினம் இவருடன் வீரமரணத்தை தழுவிய **லெப். ஜீவா** (பொலிகண்டி), **லெப். ஜெயம்** (வல்வெட்டித்துறை) ஆகிய போராளிகளுக்கும் வீர வணக்கம்

பெற்றோர், சகோதரர்கள் உற்றார் உறவினர்

*தகவல்: பொ. சிவகுமார் (சுவிஸ்)*
*T.P: 041/8555922*

Pub

# மரண அறிவித்தல்



## அமரர் வீரவாகு பொன்னம்பலம்

அன்னை மடியில்:
02.02.1935

ஆண்டவன் பாதத்தில்:
13.05.1998

மூளாயைப் பிறப்பிடமாகவும், சங்கானை தொட்டலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய நீரளவையாளர் திரு வீ. பொன்னம்பலம் 13.05.98 மூளாயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தாமோதரம்-குமார் (சுவிஸ்), கலாவதி, உமாவதி ஆகியோரின் பாசமுள்ள தந்தையாரும், தவேந்திரா (அபுதாபி) அவர்களின் பண்புக்கினிய மாமனாரும், கார்த்திகா, தரங்கனி ஆகியோரின் செல்லமான பேரனாரும் ஆவார்.


இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தகவல்:* தாமோதரம்-குமார்
சுவிஸ் - Tel: 01-8031637

Pub

# ஓராண்டு கண்ணீர் அஞ்சலி

தோற்றம்:
02.08.1971



மறைவு:
26.05.1997

## சரவணமுத்து மணிவண்ணன் (மணி)

*பால் வடியும் முகத்தோடு*
*பாசத்துக்கு உரியவனானாய் நீ*
*ஏன் பாதியிலே எங்களை விட்டுப்*
*பிரியும் அளவுக்கு ஆளானாய் நீ*
*நீ நடந்த பாதையிலே முள்ளிருந்ததா?-இல்லை*
*அடுத்தவரின் சொல்லிருந்ததா? -உன்*
*செயல் வேகத்தைக் கண்டு வியந்தோமடா-உன்*
*முடிவை அறிந்து துடி துடித்தோமடா*
*ஈராறு மாதங்கள் ஆனதடா*
*ஈரேழு ஜென்மமும் உன் நினைவு தானடா - நாங்கள்*
*நீ வாழ்ந்ததை நிகழ்காலத்தில் நினைக்கையிலே*
*ஊரையும் மறந்து உறவையும் மறந்து உணவையும் மறந்து*
*எங்கள் அனைத்து உள்ளங்களும்*
*உன் நினைவில் கதறுதடா!!*
*நாளைக்கு நான் காண வருவானா என்று*
*ஏங்கியவர்களும்-உன் மறைவால்*
*மதி மயங்கி நின்றாரடா- ஊர்க்*
*கடிதமும் வரவில்லை சீட்டுக் கழியவில்லை என்று*
*உரைத்தவர்களும் இன்று-உன்*
*பெயரையும் உச்சரிக்கின்றார்களடா-உன்*
*நினைவுகளை நாங்கள் மறந்தால்-மறையும் சூரியனும்*
*மறுநாள் எங்கள் விழிகளிற்குத் தென்பட மாட்டாதடா.*

உன்பிரிவால் இன்னமும் சோகத்தின் எல்லையில் இருந்து மீளாமல் இருக்கும் சப்கவுசன் நண்பர்கள்.

Pub

# 31-ம் நாள் நினைவஞ்சலி



உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகக் கொண்ட அருளப்பு செபஸ்தியாம்பிள்ளை (குணசிங்கம்) ஆனைக்கோட்டையில் (23.04.98) அன்று காலமானார்.

இவர் காலம் சென்ற அருளப்பு, சலோமையின் அன்பு மகனும், அக்கினேஸ் அம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி (இலங்கை), ராஜரட்னம் (பிரான்ஸ்), ராஜகுமாரி (நோர்வே), ரத்தினகுமாரி (டென்மார்க்), சந்திரா (பிரான்ஸ்), புஸ்பராணி (சுவிஸ்), புஸ்பராஜா (நோர்வே), புஸ்பநாயகி (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், நவரட்னம் (இலங்கை), அமிர்தராணி (இலங்கை), ஜெயரட்னம் (நோர்வே), அல்போன்ஸ் (டென்மார்க்), சிறிஸ்கந்தராஜா (பிரான்ஸ்), ஞானராஜா (சுவிஸ்), கீதா கெலன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிறினோ, ஷிரினோ, ஹெவின்ராஜ், ஷக்கீனா, ஷியாமீனா, ஷர்மீனா, ஹெவின், ஷமீனா, கிரான்ஸிலி, கிரான்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

நேரிலும், தொலைபேசியிலும், கடிதமூலமும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*தகவல்:* **எஸ். புஸ்பராஜா (நோர்வே)** - *Tel: 004757750424 / 004790871270*

Pub

# 'நான்கு நாடுகளின் வான் பலத்தை சில மணிகளில் சிதறடித்த விவேகம்'

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இன்று யூத இன மக்கள் தங்களது 'நிச்சயிக்கப்பட்ட நிலத்தில்' இஸ்ரேலில் ஐம்பதாவது சுதந்திர விழாக்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அதே வேளை இந்த சுதந்திரம் என்பது இங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் அரபு மக்களைப் பொறுத்தவரை ஒரு மாறாத வடு. ஆனால் ஒரு காலத்தில் பெரும்பான்மை மக்களாக பாலஸ்தீனத்தில் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மக்கள் பின்னாளில் சிறு பான்மையினராக மாற்றம் கண்டதற்கும், உரிமைகளற்ற நிலையில் வாழ்ந்து வருவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? இவை பற்றி ஆராயமுன்பு சுதந்திரப் பெற்ற நாளில் இருந்து இன்றுவரை இஸ்ரேல் சந்தித்த போர்களைப் பற்றிப் பார்ப்போம். கடந்த வாரம் முதலாவது பாலஸ்தீன போர் பற்றிய விபரங்களை இக்கட்டுரை தந்தது.


## 'புகழ்பெற்ற 6 நாள் யுத்தம்' சூயஸ் - சினாய் யுத்தம்

### 1957– சூயஸ்-சினாய் யுத்தம்

1949 ஆண்டில் ஐ.நா. மேற்பார்வையில் சூழவிருந்த அரபு நாடுகளுடன் சமாதான ஒப்பந்தத்தை இஸ்ரேல் செய்துகொண்டாலும், எல்லைப் புறங்களில் சிறு சிறு மோதல்கள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தன. இது பெரும் மோதல்களாக வெடிப்பதற்கு அங்கு ஏற்பட்ட இரண்டு சம்பவங்கள் காரணமாய் அமைந்தன. எகிப்திய கட்டுப்பாட்டில் இருந்த காசா பகுதியில் இருந்து அரபுப் போராளிகள் தென் இஸ்ரேலின் குடியிருப்புப் பகுதியில் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அதேபோன்று சூயஸ் கால்வாய்ப் பகுதியிலும், அக்குவாபா குடாப் பகுதியிலும் இஸ்ரேல் மேற்கொண்டு வந்த கடல் நடவடிக்கைகளை எகிப்து தடை செய்தது. அத்துடன் சூயஸ் கால்வாயை தேசிய உடைமையாக்குவதாயும் எகிப்திய தலைவர் 'கமாஸ் நாசார்' அறிவித்தார்.

இவரது இவ்விதமான நடவ



டிக்கைகளை பிரான்சும், பிரித்தானியாவும் பலமாக எதிர்த்தன. இஸ்ரேலும் இப்படியான சந்தர்ப்பம் ஒன்றிற்காகத்தான் காத்திருந்தது. சினாய் பகுதியை கைப்பற்றிக்கொள்ள அது திட்டம் தீட்டிக்கொண்டது. 1956-ம் ஆண்டு ஒக்டோபர் 29-ம் திகதி பெரும் யுத்தம் மூண்டது. எகிப்தின் இராணுவத் தலைமையின் கீழ் ஜோர்தானிய, சிரியப் படைகளும் இணைந்துகொண்டன.

மோஷே தயானின் தலைமையில் இஸ்ரேலிய படைகள் நகர்வினை மேற்கொண்டன. சுமார் 100 மணி நேரங்களுக்குள்ளாகவே இஸ்ரேலிய படைகள் சூயெஸ் கால்வாயின் கிழக்கு கரைப் பகுதியை அடைந்தன. இதன்போது அநேகமாக சினாய் பிராந்தியம் முழுவதுமாகவும் காசா பகுதியும் இஸ்ரேலிய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

இஸ்ரேலின் இக்குறுகிய கால வெற்றிக்கு நவம்பர் 5-ம் திகதி பிரெஞ்சு- பிரித்தானிய கூட்டுப் படைகள் எகிப்தின் மீது தாக்குதல் நடத்தியதும் ஒரு காரணம். இப்படைகள் சூயெஸ் கால்வாயின் வடபிராந்தியத்தை அடக்கிய எகிப்தை ஆக்கிரமித்துக்கொண்டன. இவ்வேளை ஐ.நாவின் பொதுச்சபை இப்பிராந்தியப் போரில் தலையிட்டது.


யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என இதில் ஈடுபட்டிருந்த நாடுகள் கட்டளையிடப்பட்டன. உடனடியான யுத்த நிறுத்தத்திற்கும், எகிப்திய பிராந்தியத்தில் இருந்து ஆக்கிரமிப்பு படைகள் வெளியேற்றத்திற்கும் உத்தரவிட்ட ஐ.நா. சபை, காசா, சினாய், சூயஸ் கால்வாய்ப் பகுதிகளை உள்ளடக்கிய எகிப்தின் எல்லைப் பகுதிகளில் கடமை புரியவென 'ஐக்கிய நாடுகளின் அவசர காலப் படை (Unef) இனை அமைத்து அனுப்பியது. 1956-ம் ஆண்டு டிசம்பர் 22-ம் திகதி பிரித்தானிய- பிரெஞ்சுப் படைகள் எகிப்தை விட்டு வெளியேறின, ஆனால் இஸ்ரேலிய படைகள், 1958-ம் ஆண்டு முற்பகுதி வரை இப் பகுதியில் நிலை கொண்டிருந்தன. ஆனால் மோதல் எதுவும் ஏற்படவில்லை.

### 1967- ஆறு நாள் யுத்தம்

1957-ல் சூயெஸ் கால்வாய்ப் பகுதியில் யுத்தம் நடந்து முடிந்தன் பின் அடுத்த பத்து ஆண்டுகளும் சூயெஸ் கால்வாய் தொடர்ந்தும் இஸ்ரேலின் கடல் போக்குவரத்துக்கு தடைவிதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தது. இக்காலப் பகுதியில் எல்லைப் பகுதிகளில் சிறு மோதல்கள் ஏற்பட்டு வந்தனவே தவிர பெரும் மோதல்கள் எதுவும் ஏற்பட ஐ.நாவின் படைகள், சந்தர்ப்பம் தரவில்லை.

இந்நிலையில் மே மாதம் 1967-ம் ஆண்டு எகிப்திய தலைவர் நாசர் ஐ.நா. படைகளை எகிப்தைவிட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார். அத்துடன், எகிப்தியப் படைகள் சினாய் நோக்கி நகரத் தொடங்கின. மே மாத இறுதியில் எகிப்தும் ஜோர்தானும் தங்களது பாதுகாப்பு ஒப்பந்தத்தை புதுப்பித்துக்கொண்டன. இதன்பின் ஜோர்தானியப் படைகள் எகிப்திய தலைமையின் கீழ் செயல்படத்தொடங்கின. இவற்றைத் தொடர்ந்து இஸ்ரேலின் கிழக்குப் பிராந்திய சந்தைகளுக்கும், வடகடலுக்குமான ஒரே பாதையான டிரான் குடாவை மூடப் போவதாக நாசர் அறிவித்தார்.

இப்படியான, தொடர் நடவடிக்கைகள் இஸ்ரேலை மீண்டும் ஒரு போரை ஆரம்பிக்கத் தூண்டின. இவ்வேளை இஸ்ரேலிய - எகிப்திய தலைவர்கள் அமெரிக்காவுக்கு அழைக்கப்




பட்டனர். இரு தரப்பினரையும் ஒரு உடன்பாட்டிற்குள் கொண்டு வர அன்றைய அமெரிக்க ஜனாதிபதி 'லின்டன் ஜோன்சன்' எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. யுத்தம் தவிர்க்கப்பட முடியாத நிலையில் மீண்டும் ஒரு யுத்தத்தை இஸ்ரேல் ஆரம்பித்தது. அன்றைய யுத்தத்திற்கு பிரதமர் லெவி, பாதுகாப்பமைச்சர் டயான், இராணுவ தலைமை திகாரி யிட்சாக்ரபீன் போன்றோர் ஒப்புதல் அளித்திருந்தனர்.

1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் திகதி, இஸ்ரேலிய விமானங்கள் எகிப்து, சிரிய, ஜோர்தானிய, ஈராக்கிய விமானத் தளங்கள் மீது எதிர்பாராத திடீர் தாக்குதல்களை நடத்தி அவற்றிற்கு பாரிய சேதங்களை உண்டுபண்ணின. மறுநாள் மாலையாகிய போது அரபு நாடுகளும் தமது விமானத் தாக்குதல் திறனை முற்றாக இழந்திருந்தன. அடுத்த நான்கு நாட்களுக்குள் இஸ்ரேலிய படைகள் சினாய், சூயஸ் கால்வாய்ப் பிராந்தியத்தை தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தன.

இதேவேளை கிழக்கு ஜெருசலேம் பகுதியில் நிலைகொண்டிருந்த ஜோர்தானியப் படைகள் மேற்கு நோக்கி பாரிய எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன. இப்படியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த



இஸ்ரேலியர்கள், கிழக்கு ஜெருசலேமில் மற்றொரு போர் முனையைத் திறந்தனர். ஜூன் 6 ம் திகதி கிழக்கு ஜெருசலேமிற்குள் பிரவேசித்த இஸ்ரேலியப் படைகள் ஜோர்தானியப் படைகளை 7-ம் திகதியன்று ஜோர்தான் ஆறுவரை பின்வாங்கச் செய்தனர். ஜூன் மாதம் எட்டாம் திகதியளவில் கிழக்கு ஜெருசலேம் உட்பட ஜோர்தான் மேற்குக்கரை வரை இஸ்ரேலிய கட்டுப்பாட்டிற்குள் வந்து சேர்ந்தன.

ஜோர்தானிய, எகிப்திய முனைகளில் யுத்தம் முடிவடைந்த நிலையில் சிரியா பகுதியில் வடக்கே புதிதாக யுத்தம் மூண்டது. இரண்டு நாட்கள் கடுமையான யுத்தம் இறுதியில் கோலான் மேட்டு நிலைப் பகுதியில் இருந்து சிரியப் படைகள் பின்வாங்கின, எல்லா முனைகளிலும் யுத்தம் சிறிதளவு முடிவடைந்திருந்த வேளை ஐநா சபையின் போர்நிறுத்த முயற்சிகளால் ஜூன் மாதம் 10-ம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்தது.

**கிழக்கு ஜெருசலேமை கைப்பற்றிக் கொண்டதன் மூலம் யூதர்களின் பிரதான சமய சின்னமான 'மேற்குச் சுவர்' காப்பாற்றப்பட்டதாக ஆனந்தம் அடைந்தார்கள்.**

இந்த ஆறு நாட்கள் நடந்து முடிந்த யுத்தத்தில் இதில் ஈடுபட்ட அரபு நாடுகள் படுதோல்வியையும் பலத்த ஆள் ஆயுத இழப்புகளையும் அடைந்தன. அதே சமயம் இஸ்ரேல் மேலும் தனது எல்லைகளை விஸ்தரித்துக்கொண்டது. சினாய், காசா, கிழக்கு ஜெருசலேம், மேற்குக்கரை, கோலான் மேட்டு நிலம் என புதிய பிராந்தியங்கள் இஸ்ரேலின் நிர்வாகத்திற்குள் வந்தன.

கிழக்கு ஜெருசலேமை கைப்பற்றிய இஸ்ரேல் அதனைத் தமது ஒன்றிணைந்த புனித நகரம் என அறிவித்தது. கிழக்கு ஜெருசலேமை கைப்பற்றிக் கொண்டதன் மூலம் யூதர்களின் பிரதான சமய சின்னமான 'மேற்குச் சுவர்' காப்பாற்றப்பட்டதாக ஆனந்தமடைந்தார்கள்.

பாலஸ்தீன அரபு மக்களைப் பொறுத்தவரை 1948 இன் பின் தாமடைந்த மற்றொரு பாரிய தோல்வியாக இதனைக் கருதினார்கள். இஸ்ரேலின் தாக்குதல்களால் வீடு வாசல்களை கைவிட்டு அகதிகளாக அரபு நாடுகளுக்குள் தஞ்சமடைந்த இவர்கள், நடந்து முடிந்த ஆறு நாள் யுத்தத்தினால் மீண்டும் தாம் இஸ்ரேலிய ஆட்சிப்பகுதிக்குள் வந்துவிட்டதை உணர்ந்தனர்.

இந்தவகையில் மேலும் 1,500,000 பாலஸ்தீன அரபுக்கள் இஸ்ரேலின் கைக்குள் வந்து சேர்ந்தனர். பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலியர்களை நினைத்து அஞ்சியிருக்க, இஸ்ரேலியர்களோ புதிய பாலஸ்தீன அரபுக்கள் தமது உள்பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைவார்கள் என அஞ்சியது. இதனால் கோலான் மேட்டு நிலம், ஜோர்தான் மேற்குக் கரை மற்றும் காசாப் பிராந்தியம் போன்ற அரபுப் பிரதேசங்களில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தியது.

எந்த ஒரு அரபு நாடும் இது வரை இஸ்ரேலை அங்கீகரித்திருக்காத நிலையில் ஐ.நா. வின் பாராமுகம் இஸ்ரேலை மிகத் துணிவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தூண்டியது. ஆனால் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஐ.நாவின் பாதுகாப்புச் சபை 243 சட்டத்தின் மூலம் இஸ்ரேல் ஆக்கிரமித்து பகுதிகளில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என அச்சுறுத்தியது. ஆனால் எதுவுமே நடக்கவில்லை அடுத்து ஆறு ஆண்டுகளும் இப்பிராந்தியத்தில் இஸ்ரேல் பலம் பொருந்திய ஒரு நாடாக இருந்தது.

(இன்னும் வரும்)

- உதயன்


# வரலாற்றில் பதிந்த தவறுகள்

(உலக வரலாற்றில் பதிவு பெற்ற சில தவறுகள் பெரும் அனர்த்தங்களுக்குக் காரணங்களாகிவிட்டன. இத்தகைய அனர்த்தங்கள் சிலவற்றை ஈழமுரசு, வாசகர்களுக்கு தொகுத்துத் தருகின்றது.)

## தவறு : கிழக்கு மேற்கானது
### விளைவு: கண்டுபிடிப்பை அறியமுடியவில்லை

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த போதிலும், அதனை அறியாமலே இறந்துவிட்டார்.

கிறிஸ்தோபர் கொலம்பஸ் உடுப்புத் தைப்பவரின் மகனாக, 1445-ம் ஆண்டளவில் ஸ்பெயினில் பிறந்தார். மிகவும் பெருந்தன்மையும், பிடிவாதக் குணமும் முன்னேற வேண்டும் என்னும் ஆவலும் கொண்ட, கப்பலோட்டியான கொலம்பஸ் ஸ்பெயினிலிருந்து கிழக்கு இந்தியாவுக்கு கடல்தாண்டிப் போகத் திட்டமிட்டார்.



பூமி உருண்டையானது என நம்பிய அவர், ஆசியாவில் கிழக்குக் கரைப் பகுதியும், ஓறியன்ற் தேசத்து பொன் நிலமும் மேற்கு ஐரோப்பாவில் உள்ளதாகவும் கப்பலோட்டிச்செல்ல இது சிறிய தூரம் எனவும் கருதினார். 1492-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி வெள்ளிக்கிழமை ஸ்பெயின் நாட்டு அரசன் பெர்டினான்ட், அரசி இசபெல்லா (King Ferdinand and Queen Isabella) ஆகிய இருவரின் ஆதரவுடன் புதிய தேசத்தைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டார்.

கொலம்பஸ்ஸும், அவருடைய குழுவினரும் நீண்ட நாட்கள் கப்பலை ஓட்டிச் சென்றும் அதிக தூரம் பயணம் செய்தும் தரையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதனால் திரும்பி ஸ்பெயினுக்கு போய்ச் சேர முடியுமோ என அவர்கள் பயந்தனர். இவ்வாறு பல நாட்கள் கடலில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில், 37 நாட்களின் பின்னர் ஒக்டோபர் மாதம் 2-ம் திகதி அதிகாலை 2 மணிக்கு குழுவினரில் ஒருவர் தரைக்கு வந்துவிட்டோம். தரை, தரை' என உரக்க சத்தமிட்டார்.



கொலம்பஸ், அந்த இடத்தை ஆசியாவின் கிழக்குக் கரையோரம் என நம்பினார். ஆசியாவின் கிழக்குக் கரையை கண்டுபிடித்துவிட்டதாக நம்பிய கொலம்பஸ் அங்கிருந்து ஆசியாவிற்கு செல்வதற்கு பாதைத் தொடர்பு இருக்கும் என நினைத்து, 1502-ம் ஆண்டு திரும்பவும் கப்பலைச் செலுத்தினர். 9 மாதங்களாக கப்பலை ஓட்டி அலைந்து திரிந்தும் வழியைக் கண்டுபிடிக்க முடியாது போனதுடன், கிஸ்பானி ஓலா (Hispaniola) என்னும் தீவில் தனிமையில் போய் கரை சேரவேண்டி ஏற்பட்டது. 12 மாதங்களாக தனிமையில் இருந்த கொலம்பஸ்ஸை அவரின் குழுவினர் கண்டுபிடித்து கூட்டிச் சென்றனர். 1506-ம் ஆண்டு மே மாதம் கொலம்பஸ் இறந்து விட்டார். சில வருடங்களின் பின்பு இத்தாலியைச் சேர்ந்த அமெரிக்கோ வெஸ்புயூசி (Amerigo Vespucci) என்பவர் கிழக்கு ஆசியா எனக் கொலம்பஸ்சால் கண்டுபிடிக்கப்பட்ட இடம், 'ஒரு புதிய கண்டம்' என நிரூபித்தார்.

கொலம்பஸ்ஸினால் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டாலும், அது கிழக்கு ஆசியா என அவர் அடம்பிடித்தபடியால், தனது கண்டுபிடிப்பை அறியாமலே 1506-ம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி இறந்துவிட்டார். கொலம்பஸ் கண்டுபிடித்த இடம் ஒரு புதிய கண்டம் என அமெரிக்கோ என்பவரால் நிரூபிக்கப்பட்டபடியால் அதற்கு 'அமெரிக்கா' என பெயர் சூட்டப்பட்டது.

# வரலாற்றுப் பதிவான இயற்கையின் அனர்த்தங்கள்

எரிமலை, பெருவெள்ளம், காட்டுத்தீ எனப் பல சம்பவங்கள் வரலாறு பூராவும் பதிவாகி உள்ளன. இவற்றுள் சில மனித குலத்து வரலாற்றில் நினைத்துப் பார்க்கத்தக்க சம்பவங்களை கொண்டவை. இவற்றுள் சிலவற்றை 'ஈழமுரசு' தொகுக்கின்றது.

## டைட்டானிக் கப்பல்
## The Titanic (1912)

46329 தொன் எடைகொண்ட டைட்டானிக் கப்பல் உலகத்தில் மிகப் பெரிய, அழகான, பாதுகாப்பான கப்பலெனச் சொல்லப்பட்டது. இக் கப்பலின் கப்ரன் எட்வேட் சிமித் என்பவராகும். இக்கப்பல் 'தெற்கு அம்ரன்' என்னும் இடத்தில் உள்ள கப்பல் நிறுத்துமிடத்திலிருந்து புறப்பட்டபோது நியூயோர்க், ரியூரோனிக் ஆகிய இரண்டு கப்பல்களுடனும் மோதியபோதும் சேதம் ஒன்றும் ஏற்படாது தப்பியது. இதனால் புறப்பட்டுக்கொண்டிருந்த கப்பல் 'செர்க்' என்னுமிடத்தில் நிறுத்தப்பட்டு, 1912-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 11-ம் திகதி வியாழக்கிழமை மாலை அயர்லாந்தில் உள்ள குயின்ஸ்ரவுண் (Queenstown) என்னும் இடத்திற்கு புறப்பட்டது.

மிகவும் மோசமான கால நிலையில் குளிர் அதிகமாக இருந்த போதிலும் கடல் மிக அமைதியாக இருந்தமையால் கப்பல் பாதுகாப்பாக போய்க்கொண்டிருந்தது. ஆனால் பின்னர் குளிர் அதிகரிக்க அதிகரிக்க நிலைமை மோசமாகியது. ஏப்பிரல் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மிதக்கும் பனிக்கட்டிப் பாறை கடலில் உண்டாகும் எனவும், கப்பல்களில் பயணம் செய்வோர் கவனமாக இருக்கவேண்டும் எனவும் வானொலியில் அறிவிக்கப்பட்டது. கப்பல் விரைவில் போய்ச் சேர்வதற்காக வேகமாக ஓட்டப்பட்டது.

நடுநிசியளவில் கப்பலில் பிரயாணம் செய்த ஒருவர் கண்ணாடியூடாக வெளியே நோக்கியபோது பனிக்கட்டி உறைந்திருப்பதைக்கண்டு, 'பனிக்கட்டிப்பாறை, பாறை' என கூச்சலிட்டார். கப்பல் கப்ரன் கப்பலை திசைதிருப்பி, துறைமுகத்துக்கு திருப்பி போகும் வண்ணம் கட்டளையிட்ட போதிலும் தாமதமாகியதால் கப்பல் சென்று பெரிய பனிக்கட்டிப் பாறையில் மோதி அதே இடத்தில் நின்றது. உள்ளே இருந்த தச்சுவேலை செய்பவர் ஓடிவந்து கப்பல் உள்ளே தண்ணீர் வந்துவிட்டதாக முறையிட்டார். பிரயாணிகளுக்கு எதுவும் விளங்கவில்லை. அவர்கள் கப்பலின் உள்ளே சென்ற பனிக்கட்டிகளுடன் விளையாடிக்கொண்டிருந்தனர்.

கப்பல் ஏன் நிறுத்தப்பட்டதென பிரயாணிகள் கேட்டபோது மேற்பார்வையாளர்கள் ஒன்றும் நடக்கவில்லை எனக் கூறிவிட்டார்கள். நீர் கூடுதலாக உள்ளே வரத்தொடங்கியதும் பயமடைந்த கப்ரன் (Frank Font, Carpathia) பிராங்போட், கார்பதியா ஆகிய இரண்டு கப்பல்கட்கும் தாங்கள் ஆபத்தில் இருப்பதாகவும், தங்களை வந்து மீட்குமாறும் அறிவித்தார். அதைக் கேட்ட இரண்டு கப்பல்களின் கப்ரன்களும் டைட்டானிக் கப்பல் நீரில் மூழ்கும் என நம்பவில்லை. டைட்டானிக் கப்பலின் மேற்பார்வையாளர்கள் எல்லாப் பெண் பிரயாணிகளையும், ஆபத்திலிருந்து பாதுகாக்கும் சிறிய படகுகளில் (LIFE BOATS) ஏற்றினார்கள்.



பெண்களையும் சிறுவர்களையும் முதலில் படகுகளில் ஏற்றியபோதும் பல பெண்கள் தங்கள் கணவன்மாரின் அவல நிலையை உத்தேசித்து அவர்களைவிட்டு தனியேபோக மறுத்துவிட்டார்கள். அதே நேரத்தில் பிரமாண்டமான டைட்டானிக் கப்பல் சிறிது சிறிதாக தாழ்ந்துகொண்டிருந்தது. கப்பல் தாழ்கிறது எல்லோரும் நீரில் குதித்து நீந்தி தப்பிக் கொள்ளுங்கள் என்று அலறிய கப்ரன் தானும் கப்பலுடன் சேர்ந்து மூழ்கிப் போனார். அதிகாலை 4 மணியளவில் கார்பத்தியா, கலிபோர்னியா ஆகிய இரண்டு கப்பல்களும் அங்கு வந்து சிறிய படகுகளில் உள்ள பிரயாணிகளை மீட்டன. ஆனால் டைட்டானிக் கப்பல் நீரில் மூழ்கி மறைந்துவிட்டது.

கலிபோர்னியா கப்பலின் கப்ரன், டைட்டானிக் கப்பல் நின்ற இடத்தில் இருந்து தமது கப்பல் 10 மைல் தூரத்தில் போய்க்கொண்டிருந்ததாகவும், தனக்கு யாரும் அறிவிக்கவில்லை எனவும் குறைகூறினார். டைட்டானிக் கப்பலில் பயணம் செய்த 2206 பிரயாணிகளில் 1403 ஆண் பிரயாணிகள் (கப்பல் குழுவினர் உட்பட) கப்பலுடன் அழிந்தார்கள்.

இந்த மிகப் பெரிய நாசத்துடன் சிறிய நன்மையும் உண்டாகியது. (INTERNATIONAL ICE PATROL) சர்வதேச ரீதியாக கடலில் ஐஸ் உண்டாகும்போது கப்பலோட்டுபவர்கள் கவனமெடுத்தல், (Board of Trade Regulation) கப்பலுக்கு ஆபத்து உண்டாக்கும்போது, ஆபத்திலிருந்து காப்பாற்றக்கூடிய போதிய ஆபத்திற்குதவும் சிறிய படகுகள் அமைத்தல் ஆகியவை கட்டாய நடவடிக்கைகளாக் கப்பட்டன.

– கவிதா –

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
வெளிநாடுகளுக்கான அச்சுவேலைகள் குறைந்த விலை
வண்ண நிறங்களிலான அச்சுவேலைகள் சிறந்த தரம்
அனைத்து வேலைகளும் குறித்த தவணை
திங்கள் முதல் - சனி வரை 10.00 – 22.00 மணிவரை
60, Rue Louis Blanc, 75010 Paris - Tel & Fax: 01 42 09 60 64

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம்
20 Rue Labat, 75018 Paris - M°: Marcadet Poissonniers
எனும் முகவரியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
குறைந்த விலையில் உங்கள் அனைத்து கணினித் தேவைகளுக்கும்....
VPI Multimedia
Conseil et Service
Tel: 0160790607 / 0660404351

# இங்கிலாந்து கிரிக்கட் அணியின் புதிய தலைவர்

நடந்து முடிந்த மேற்கிந்திய தீவுகளுடனான போட்டிகளில் இங்கிலாந்து மோசமான தோல்விகளைத் தழுவ, அணித் தலைவர் அதட்டன் பதவியை விட்டு விலகியதால், புதிய தலைவர் தெரிவுசெய்யப்பட வேண்டியிருந்தது. ஸ்ருவேட் மற்றும் நாசர் குசைல் ஆகியோர் முக்கிய போட்டியாளர்களாக இருந்தபோதும், அலெக்ஸ் ஸ்ருவேட் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். ஸ்ருவேட் இதற்கு முன்னரும் அணியை வழிநடத்திய அனுபவம் இவருக்கு உண்டு. இவ்வளவு திறமைகள் ஸ்ருவேட்டிடம் இருந்தும் இவர் ஒரு முழுமையான தலைவர் இல்லை. அதாவது டெஸ்ட் போட்டிகளுக்கு மட்டுமே இவர் தலைவர். ஒருநாள் போட்டிகளின் தலைவராக அடம் ஹோலியாக் இருப்பார்.

உலகில் முதல் கிரிக்கட் போட்டிகளில் கலந்துகொண்ட ஆஸ்திரேலியாவும், இங்கிலாந்



இங்கிலாந்து அணியின் பழைய தலைவர் மைக் அதட்டனுடன் புதிய தலைவர் அலெக்ஸ் ஸ்ருவேட்

ஒரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் என்பது மட்டுமின்றி அணியின் விக்கட் காப்பாளராகவும் இருக்கிறார். அத்தோடு தற்போதைய இங்கிலாந்து அணியின் மூத்த அனுபவமான ஆட்டக்காரர் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். தும் தற்போது இரு தலைவர்களையும் உலகிற்கு அறிமுகம் செய்வதாகவே இந்நிகழ்வு அமைகிறது. ஏனெனில் எந்த நாட்டிலும் இல்லாமல் இவ்விரு நாடுகளிலுமே தற்போது 'ஒரு அணியில் இரு தலைவர்கள்' நிலை தொடங்கியுள்ளது.

# தென் அமெரிக்க வீரர்களால் 'இன்ரர் மிலான்' வெற்றிபெற்றது

ஐரோப்பிய கழகங்களுக்கிடையில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் உலகின் தலைசிறந்த பல வீரர்களை பெருமளவு பணத்தைக் கொட்டி விளையாட வைக்கிறார்கள். இப்படியாக விளையாட வைக்கும் கழகங்களில் இத்தாலியின் இன்ரர் மிலான் கழகமும் முக்கியமானதொன்றாகும். இக் கழகம் இதுவரை 13 தடவைகள் இத்தாலிய சம்பியன் கிண்ணத்தைக் வென்றுள்ளது.

பாரிசில் 06.05.98 அன்று நடைபெற்ற UEFA CUP இறுதிப் போட்டியில் இத்தாலியின் கழகங்களான 'இன்ரர் மிலான்', 'லாசியோ றோம்' ஆகிய கழகங்கள் மோதிக்கொண்டன.

43,000 பார்வையாளர்கள் பார்த்து ரசித்த இப் போட்டி, ஆரம்பமான ஐந்தாவது நிமிடத்திலேயே சிலி நாட்டு வீரரான 'சமோறானோ' ஒரு கோலைப் போட்டி இன்ரர் மிலானின் வெற்றிக்கு அடித்தளம் இட்டார். இடைவேளையின்போது இன்ரர் மிலான் 1-0 என்ற நிலையில் முன்னணியில் நின்றது.

இடைவேளையின் பின்னும் ஆட்டத்தில் இன்ரர் மிலானின் கை ஓங்கியே இருந்தது. ஆட்டத்தின் 60வது நிமிடத்தில் ஆர்ஜென்டீன விளையாட்டு வீரர் 'சனெற்றி' ஒரு கோலைப் போட்டு இன்ரர் மிலானின் நிலையை 2-0 என்ற நிலைக்கு உயர்த்தினார். தொடர்ந்து 70வது நிமிடத்தில் பிரேசில் நாட்டு வீரரும் 'உலக சுப்பர் ஸ்ரார்'உம் ஆகிய றொனால்டோ மேலும் ஒரு கோலைப் போட்டு இன்ரர் மிலானின் வெற்றியை உறுதியாக்கிக் கொண்டார்.

இறுதி 10 நிமிடங்களில் கட்டுப்பாடுகளை மீறி ஆடியதால் இரு அணிகளிலிருந்தும் தலா ஒருவர் சிவப்பு அட்டை காட்டப்பட்டு மைதானத்திலிருந்து நீக்கப்பட்டனர். ஆட்ட முடிவில் இன்ரர் மிலான் 3-0 என்ற கோல் கணக்கில் UEFA கிண்ணத்தை வெற்றிகொண்டது.

இன்ரர் மிலான் இதற்கு முன்னர் 1991, 1994 ஆகிய ஆண்டுகளிலும் வெற்றிகொண்டது குறிப்பிடத்தக்கது. இவ் வெற்றியைத் தொடர்ந்து பேட்டியளித்த றொனால்டோ, 'நான் இறுதிப் போட்டி எதிலும் தோற்றதில்லை. அதுபோலவே இனியும் எனது புதிய கோல்கள் மூலமாக உலகக் கிண்ணத்தை பிரேசிலுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு மீண்டும் இதே பாரிஸ் நகரம் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும்' என்று உற்சாகமாகக் கூறியிருந்தார்.

- பொன். தாமோதரம்

## டென்மார்க்கில் மாபெரும் யாழ்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி

10-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஐரோப்பிய நாடளாவிய ரீதியில் முதலாவது தடவையாக டென்மார்க்கில் வருகின்ற யூன் மாதம் 27, 28-ம் திகதிகளில் இலங்கையர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் மாபெரும் யாழ் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி.

இப்போட்டி சர்வதேச விதிகளுக்கமைய மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக் கொண்ட 2 நாள் சுற்றுப்போட்டியாக அமையும்.

அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் யாழ் கிண்ணத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு OTSC விளையாட்டு கழகம் அழைக்கின்றது.

**முக்கிய குறிப்பு**

ஐரோப்பிய இடங்களிலிருந்து மற்றும் தூர இடங்களிலிருந்து வருகின்ற கழகங்களுக்கு உணவு தங்குமிட வசதிகள் அனைத்தும் இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு:

பங்குகொள்ள விரும்புகின்ற கழகங்கள் 25.05.98-க்கு முன்னதாக தொடர்புகொள்ளவும்,

OTSC கழகத்தின் கிரிக்கெட் பொறுப்பாளர்
MR. M. Jeyachandran
Kalundborg vej 253 C9
4300 Holbaek, Denmark
Tel: 0045 405 904 68

# 'இளம் பறவைகள்' கிண்ணத்தை 'சிற்றி போய்ஸ்' கழகம் வென்றது

சுவிஸ் லுசேர்ண் 'இளம் பறவைகள்' விளையாட்டுக் கழகம் Luzern Allemand மைதானத்தில் 11 பேர் கொண்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்தியது. சுவிசிலுள்ள 15 கழகங்கள் இச் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் City Boys வெள்ளை அணியினரும் Baden Everest கழகமும் மோதிக்கொண்டதில், City Boys கழகத்தைச் சேர்ந்த தேவன் இரு கோல்களைகளைப் போட்டு தனது அணிக்கு 2-0 என்ற கணக்கில் வெற்றியைத் தேடிக்கொடுத்தார்.

இரண்டாவது அரை இறுதியாட்டத்தில் City Boys நீல அணியினரும் Blue Birds அணியிரும் மோதினர். ஆட்டம் சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து வழங்கப்பட்ட தண்டனை உதையில் Blue Birds அணியினர் 4-3 என்ற கணக்கில் வெற்றிபெற்றனர்.

இறுதியாட்டத்தில் City Boys வெள்ளை அணியும் Blue Birds அணியும் மோதிக்கொண்டன. ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. Blue Birds அணியினருக்கு கோல் அடிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களை City Boys அணியின் கோல்காப்பாளர் ராஜா மிகவும் லாவகமாக தடுத்தாடியது குறிப்பிடக்கூடியது. எனினும் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்ததைத் தொடர்ந்து, வழங்கப்பட்ட தண்டனை உதையில் City Boys அணியினர் 4-3 என்ற கோல் கணக்கில் வென்று 'இளம் பறவைகள் கிண்ண'த்தை தமதாக்கினர்.

சிறந்த ஆட்டக்காரராக Blue Birds அணியைச் சேர்ந்த பாஸ்கியும், சிறந்த கோல் காப்பாளராக City Boys வெள்ளை அணியைச் சேர்ந்த ராஜாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

— எம். மனோகரன்


தமிழீழ விடுதலைப் புலிகள்
பிரெஞ்சுப் பணியகம் நடாத்தும்
மாவீரர் நினைவு
உள்ளரங்க சுற்றுப்போட்டிகள் -1998

கரப்பந்தாட்டம்
(Over Game, Set-up)
காலம்:
31.05.1998 ஞாயிறு
காலை 9.00 மணி

Centre sportif des Poissoniers
2, rue Jean-Cocteau, 75018 Paris.
Mo: Porte de Clignancourt
பூப்பந்தாட்டம்
(ஆண்கள் - பெண்கள்)
போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் 01 43 58 11 42 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

| | |
|---|---|
| இந்தியா | 42 நிமிடம் |
| கனடா | 100 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் |
| ஹொங்கொங் | 45 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை (இரவு 08 மணி முதல்- காலை 09 மணி வரை | 45 நிமிடம் |
| இலங்கை (15.5.98 வரை) | 42 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |

| | |
|---|---|
| துனிசியா | 60 நிமிடம் |
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 நிமிடம் |
| அல்ஜீரியா | 60 நிமிடம் |
| மொரோக் | 60 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 நிமிடம் |

45




45

## இலங்கைக்கு 45 நிமிடங்கள்*

*இரவு 08 மணி தொடக்கம் காலை 09 மணி வரை

## GNANAM Telecom Center

**195, Rue du Fg. Saint Denis. 75010 Paris, France.**

**Tel: 01 46 07 09 36 / Fax: 01 46 07 00 14**

**M°: La Chapelle / Gare du Nord**

**TELECOM CENTERS**
78 Bd Bd Barbes, 75018 PARIS
Tél: 01 55 79 75 11
M°: Marcadet Poissonieres

வெகு விரைவில்

சுவிஸ், லண்டனில் எமது சேவை ஆரம்பமாகின்றது!

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்

## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 0.56 | 1.62 | 0.17 | 0.67 |
| பிராங்பேட் | 1.78 | – | 2.90 | 0.30 | 1.20 |
| லண்டன் | 0.61 | 0.34 | – | 0.10 | 0.41 |
| பாரிஸ் | 5.99 | 3.35 | 9.73 | – | 4.02 |
| சூரிச் | 1.49 | 0.83 | 2.41 | 0.25 | – |
| பம்பாய் | 40.55 | 22.70 | 65.77 | 6.77 | 27.28 |
| கொழும்பு | 64.05 | 35.87 | 103.90 | 10.70 | 43.08 |

# அமெரிக்க இராணுவ ஜெனரலின் கொழும்பு வருகை ரத்து ?

அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய படையணியின் கட்டளை அதிகாரியான ஜெனரல் வில்லியம் ஸ்ரீலே இவ்வார முற்பகுதியில் கொழும்பிற்கு வருவாரனெ எதிர்பார்க்கப்பட்டபோதிலும் இறுதி நேரத்தில் அவரது விஜயம் இரத்துச் செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

கொழும்பில் இரு நாட்களுக்கான விஜயத்தை இவர் மேற்கொள்வாரென முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அமெரிக்க அரசின் இறுதிநேர அறிவுறுத்தலின்பேரில் இவரது விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கொழும்பு இராணுவ அதிகாரிகளே இவரது விஜயம் பிறிதொரு நாளில் இடம் பெறுமென குறிப்பிட்டுள்ளனர்.

இந்திய அரசின் அணுக்குண்டு வெடிப்பு சோதனைகளை அடுத்து எழுந்துள்ள 'நிலைமைகளின்' காரணமாகவே அமெரிக்க ஜெனரலின் விஜயம் இரத்துச் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# லரி விஜேரத்தினா 4 விருதுகள் பெற்றவர்

பருத்தித்துறையில் நடாத்தப்பட்ட தற்கொடைத் தாக்குதலில் பலியான சிறீலங்கா இராணுவ பிரிகேடியர் லரி விஜேரத்தினா சிறீலங்கா அரசினால் 4 விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவராவார்.

இந்தியாவிலுள்ள இராணுவ கல்லூரியில் சிறப்பு பயிற்சி பெற்ற லரி விஜேரத்தினா 'சூரியக் கதிர்', 'பலவேகய' ஆகிய இராணுவ நடவடிக்கைகளில் பெரும் பங்காற்றியவர். அதற்காக இவருக்கு 'பூரண பூமி', 'உத்தம சேவா பதக்கம்', 'ரிவிரச' 'சுவர்ண ஜெயந்தி' ஆகிய விருதுகளை சிறீலங்கா அரசு வழங்கியிருந்தது.

இவரது இறப்புக்குப் பின்னர் பிரிகேடியர் பதவியிலிருந்து மேஜர் ஜெனரல் பதவியை அரசு இவருக்கு வழங்கியுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## இராணுவ தளபதி....

சேவையிலுள்ள இராணுவ அதிகாரிகளின் வெறுப்பினையும் சம்பாதிக்கவேண்டுமென வும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை வட்டாரங்களிலிருந்து சிறிலால் ஜெயசூரியாவை தளபதியாக்குமாறு ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என சிங்கள ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# 56 தடுப்பு முகாங்களில் 5561 தமிழர்கள் தடுத்து வைப்பு

வலிகாமம், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளை சொந்த இடங்களாகக் கொண்ட தமிழ் மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்புவது இராணுவத்தினரால் தடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, உடுவில் போன்ற பகுதிகளில் இத் தடுப்பு முகாங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம் முகாங்கள் இராணுவத்தினரின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும், பிற மருத்துவ உணவு பற்றாக்குறையுடனும் இயங்கி வருகின்றன.

# சூட்டிற்குப் பின் பதவி விலகல்

யாழ். மாநகரசபை முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் கடந்த 17 ஆம் திகதி யாழ். நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டதன் பின்னர் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களிலும், பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலும் உள்ளூராட்சிசபை, பிரதேச சபைகளில் உறுப்பினராக பதவி வகிக்கும் பலரும் தமது பதவிகளை விலக முன்வந்துள்ளதாக தெரியவருகிறது.

சரோஜினி கொல்லப்பட்ட வேளை காலில் துப்பாக்கிக் காயங்களுக்கு இலக்கான யாழ். மாநகரசபை உறுப்பினரான பரமசிவம் என்பவர் தான் தனது பதவியை இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

# சாவகச்சேரியில் கிளேமோர்

சாவகச்சேரி புளியடி சந்திக்கு அண்மையில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலொன்றில் இரு சிப்பாய்கள் பலியாகியதுடன், மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

கடந்த 16-ம் திகதி காலை 8.30 மணியளவிலேயே இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக யாழ். குடாவில் விடுதலைப் புலிகளின் கிளேமோர் தாக்குதல்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. இதேவேளை கடந்த வாரம் சுன்னாகத்தில் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஒரு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளார்.

# துயர் துடைக்க கரம் கொடுப்போம்

## தொண்டர்களுக்கான அழைப்பு

**புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகம் பட்டினியுடனும் - நோயுடனும் போராடும் தன் உறவுகளின் துயர் துடைத்து அவர்களை அரவணைக்க 'துயர் துடைப்பு நாட்களை' எதிர்வரும் ஜூன் மாதத்தில் பிரகடனப்படுத்தியுள்ளது**

**இப் பாரிய மனிதாபிமான பணியில் பங்கேற்க பல்லாயிரம் தொண்டர்களை உரிமையுடன் அழைக்கின்றோம்.**

**உங்கள் மனித நேயத்தையும் - உறவுகளின் மேல் உள்ள உரிமையையும் மனதில் நிறுத்தி உங்கள் நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகங்களுடன் தொடர்புகொள்ளவும்**

TRO
P.O. Box 4254, Knox city,
VIC - 3152, Australia.
Tel: 61 39 88 83 899

★

O.R.T - France
26 Rue du Département,
75018 Paris, France.
Tel/Fax - 01 40 38 30 74

★

P.O. Box 4742
Sofienberg
0506 Oslo, Norway.
Tel/Fax - 22-717537

★

861, Brodview Ave
Toronto - Ontario,
M4K 2P9, Canada.
Tel - 416 / 466 - 9624
Fax - 416 / 406 - 4755

Tal Str. 15,
6020 Emmenbrucke,
Switzerland.
Tel/Fax - 041 260 83 98

★

K. Chinnaththurai,
Schiermonnikoog Str. 44,
1825 NB
Alkmaar, Netherland.

★

Via Dante
218/A
90141 Palermo, Italy.
Tel: 91 68 24 056

★

E. Anantharajah
Hompech str. 16
41189 Monchengladbach,
Germany.
Tel - 021 66 58 508

79, Hoe Street,
Walthamstow,
London E17 4SA,
U.K.
Tel- 0181-520 5876
Fax- 0171-403 16 53

★

57 Old Town Road,
Cumberland,
MD 21502,
U.S.A.
Tel: 1 301 59 53 705


★

G. Ananthan
Brorsons VJE-51, 2-TV
7400 Herning, Denmark.
Tel - 97 - 21 46 88
Fax - 97 - 21 76 49

– *ஐரோப்பியப் பணியகம்*

# மரண அறிவித்தல்

**தோற்றம்:**
**06.1945**



**மறைவு**
**15.05.98**

## திரு.சின்னத்துரை பத்மநாதன் (ராசா)

*(சங்கிலியன், வீதி நல்லூரர்)*

சங்கிலியன் வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும், மற்றாஸ் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு. சின்னத்துரை பத்மநாதன் (ராசா) அவர்கள் 15.05.98 அன்று இந்தியாவில் காலமானார்.

இவர் காலம்சென்ற திரு. திருமதி நாகலிங்கம் செல்லமுத்துவின் மூத்த பேரனும், காலம்சென்ற திரு. சின்னத்துரை - திருமதி நவமணியின் சிரேஷ்ட புதல்வனும், பத்மாதேவி, இந்திராதேவி, ரஞ்சினி, சுகிர்தாதேவி யோகநாதன் (யோகன்), மனோகரநாதன் (நிர்மலன்), நிர்மலாதேவி (சுகந்தி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:* திருமதி. பொன்னுசாமி (சோளன்மாமி)
ஜெயக்குமார் (மச்சான்)
பிரான்ஸ் - 01 48 33 13 90

Pub

AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Pub

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

லண்டனில் புதுப் பொலிவுடன்



# கணபதி தமிழ்க்கடை

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள் +
மளிகைப்பொருட்களுக்கு
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே
இடத்தில் பூர்த்தி செய்வதற்கு

**Ganapathy Food & Wine**

34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

## இராணுவத் தளபதி - அமைச்சர்கள் முறுகல் நிலை

# தளபதி பதவி விலக்க கோரிக்கை

சிறீலங்கா இராணுவத் தளபதி றொகான் தலுவத்தைக்கும் அமைச்சர்கள் சிலருக்குமிடையில் கடுமையான முறுகல் நிலை தோன்றியுள்ளதால் இராணுவத் தளபதியை பதவி விலக்க வேண்டுமென அமைச்சரவை வட்டாரங்களில் கருத்து வலுத்து வருகிறது.

இராணுவத் தரப்பு பாடசாலைகளில் ஆட் திரட்டலை மேற்கொள்ளவுள்ளதாக தளபதி செய்தியாளர்களுக்கு தெரிவித்ததன் பின்னரும், தீர்வுப் பொதி தொடர்பாக அரசிற்கு எதிராக தளபதி கருத்து வெளியிட்டமையினாலேயே இந்த முறுகல் நிலை எழுந்துள்ளது.

இராணுவத் தளபதியின் சமீபத்திய பேட்டி குறித்து அதிருப்தி வெளியிட்ட சிறீலங்கா தகவற்துறை அமைச்சர் மங்கள சமரவீர, இராணுவம் திறமையாக போரிலீடுபடவேண்டுமே தவிர செய்தியாளர் மாநாட்டை கூட்டுவதல்ல எனக் காரசாரமாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரு வருடமாகியும் ஜெயசிக்குறுய் நடவடிக்கையில் இராணுவ தரப்பு எவ்விதமான வெற்றிகளை எடுக்காதமையையே அமைச்சர் இவ்விதமாகச் சுட்டிக் காட்டியுள்ளனர் என்பதை அரசியல் அவதானிகள் தெரிவித்ததுடன், தளபதியின் 'ஆளுமை' குறித்து தற்போது பலத்த விமர்சனங்கள் எழுந்து வருவதையும் குறிப்பிட்டுள்ளனர். இதே வேளை பாடசாலைகளில் ஆட்திரட்டலை இராணுவம் மேற்கொள்ளவுள்ளதாக தலுவத்தை தெரிவித்தமை பற்றி எழுத்து மூலமாக விளக்கம் ஒன்றினை கோருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அரசு அறிவுறுத்தியதின்படி தற்போது அவ் விளக்கம் தளபதியிடம் கோரப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியுடனான முறுகல் நிலை அமைச்சரவைக்கு அதிகரிக்குமானால் அமைச்சர்களின் பாதுகாப்பு

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# மலையகத்தில் புலிகளின் செல்வாக்கு அதிகரிக்கின்றது ! - சந்திரிகா எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே இதுவரை தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருந்த விடுதலைப்புலிகள் தற்போது மலையகப் பகுதிகளிலும் கால்பதிக்க முற்படுகின்றார்களென சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் இன்று நடைபெறும் சில தாக்குதல் சம்பவங்கள் அங்கு விடுதலைப்புலிகள் கால்பதித்து விட்டமையை உறுதிப்படுத்துகிறது. இந்த நடவடிக்கையை நாம் சரியாக கையாளாவிட்டால் முழு மலையகமும் புலிகளின் ஆளுமைக்குள் வந்துவிடும் நிலை தோன்றிவிடுமெனவும் அவர் எச்சரித்துள்ளார்.

தேயிலை சந்தைப்படுத்தல் தொடர்பான கருத்தரங்கொன்றில் உரையாற்றியபோதே சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசின் பிரதான ஏற்றுமதி வருவாய் மலையகப் பகுதியிலிருந்தே கிடைத்து வருவதால் புலிகளின் நடவடிக்கைகள் எமது வருவாயை பாதிப்படையச் செய்துவிடும் எனவும் அவர் ஒரு கட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக் காலங்களில் மலையகத்தின் பல பகுதிகளிலும் பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் தகனம்

(19.05.98)

ஞாயிறு அன்று சுட்டுக் கொல்லப்பட்ட சரோஜினி யோகேஸ்வரனின் உடல் சிறீலங்கா இராணுவத்தின் விசேட விமானம் ஒன்றில் கொழும்பு எடுத்துவரப்பட்டுள்ளது.

சில தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும், யோகேஸ்வரனின் குடும்ப அங்கத்தினர்களும் இராணுவத்தினரால் அழைத்து வரப்பட்டுள்ளனர். இதேவேளை இந்தியா சென்றிருந்த த.வி.கூட்டணி உறுப்பினர்களான சம்மந்தன், நீலன், மாவை சேனாதிராஜா ஆகியோர் அவசரமாக கொழும்பு திரும்பியுள்ளனர்.

## இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தால் யாழ். வைத்தியசாலை அல்லோலகல்லோலம்

யாழ். வைத்தியசாலை வளாகப் பகுதியினுள் சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில் நோயாளி ஒருவர் படுகாயமடைந்ததுடன், முழு வைத்தியசாலையுமே அல்லோலகல்லோலப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று (15-ம் திகதி) அதிகாலை வேளையிலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. வைத்தியசாலை மேல் மாடியில் தங்கியிருந்த சித்த சுவாதீனமற்ற நோயாளியான சித்திரவேலு சிவபாலன் என்பவர் கீழ்மாடிப்பகுதிக்கு வந்த வேளையில் அப்பகுதியிலிருந்த காவலரண் சிப்பாய் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டு அந்த நோயாளியை படுகாயப் படுத்தியுள்ளார். இத் துப்பாக்கிப் பிரயோகச் சத்தத்தைக் கேட்ட வைத்தியசாலை வளாகத்திலிருந்த ஏனைய காவலரண்களில் சிப்பாய்களும் தமது இஷ்டப்படி துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொள்ளவே முழு வைத்தியசாலையையும் அல்லோலகல்லோலப்பட்டது. நோயாளிகள் பாதுகாப்புக் கருதி படுக்கைகளுக்கு கீழே ஒளிந்துகொண்டார்கள்.

வைத்தியசாலை நிர்வாகம் இதுபற்றி யாழ். இராணுவ தலைமைப் பீடத்திற்கு முறையிட்டபோது படையினர் பாதுகாப்புக் கருதியே அவ்வாறு நடந்துகொண்டார்கள் என பொறுப்பற்ற விதத்தில் பதிலளிக்கப்பட்டுள்ளதாம்.

# யாழ். அஞ்சலி தோல்வி - ரத்து

(19.05.98)

யாழ்ப்பாணத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த திருமதி யோகேஸ்வரனின் உடலுக்கு ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப், மற்றும் பிற அரச ஆதரவு தமிழ்க் குழுக்கள் அஞ்சலி செலுத்தின. எனினும், பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக அவரது இல்லத்தில் கூடாதது த.வி.கூட்டணி பிரமுகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்தது. இதன் காரணமாக பொதுமக்கள் அஞ்சலிக்கு என நாளை யாழ் மாநகரசபை மண்டபத்தில் வைக்கப்படவிருந்த அவரது உடல் எதுவித முன்னறிவுப்பும் இல்லாமல் இன்று கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் நகர்ப் பகுதியில் இராணுவத்தினர் வர்த்தகர்களை கட்டாயப் படுத்தி கடையடைப்பையும், துக்கதினத்தையும் மேற்கொள்ளுமாறு பணித்துள்ளனர்.

இராணுவத்தினரின் கட்டாயத்திற்காக யாழ் வர்த்தகர்களால் வெளியிடப்பட்டுள்ள அஞ்சலிச் செய்தி திருமதி யோகேஸ்வரன் மீதான தாக்குதல் நடவடிக்கையை கண்டிக்காது வெறும் யாழ் மேயருக்கான அஞ்சலியாகவே வெளியிடப்பட்டுள்ளது.

லண்டனில்



# ஆச்சீஸ்

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும் பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய, புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள

**Archie'S** Tel: 0181-2053652

*205, Edgware Road, Colindale-Nw 9.*